AR
839

# காந்தாமணி

அல்லது

# தீண்டாமைக்குச் சாவுமணி

4170

(உருக்கமான நாவல்).

வீரகேசரி ஆசிரியர்,

திரு. H. நெல்லையா B. A. எழுதியது.

COPY RIGHT.

PAGANERI.

77

Cts.] [விலை சதம் 50.

ந-122

ஸ்ரீ. அ. அ. சு. ௨௰
மெய்யப்ப செட்டியாரவர்கள்
பாகனேரி

4170

PRESENTED BY:
V. PR., PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

# முகவுரை. 4170

"காந்தாமணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி" என்ற இந்த சீர்திருத்த நவீனத்துக்கு சிறந்த முகவுரை அளிக்கத்தக்க அறிஞர் பலரிருக்க ஆசிரியர் என்பாற் கொண்டுள்ள பேரன்பு காரணமாக எனக்கு இப்பாக்கியம் கிடைத்திருக்கிறது. ஓர் நூலுக்கு முகவுரை கொடுத்தற்குக் கலைப்பெருக்கும், விசாலமான அறிவும், திரண்ட ஆராய்ச்சியும் நீண்ட புலமைத்துறை அனுபவமும் இன்றியமையாதவைகளாகும். நான் இப்பணியிலீடுபடுதற்கு மேற்கண்ட இலக்கணங்களிலெவற்றையும் பெற்றிலேன். ஆயினும் சீர்திருத்த இயக்கத்தில் எனக்குள்ள வேட்கை மிகுதியால் எழுதுவான் புகுகின்றேன். எனவே தக்க அறிவு ஆற்றல் வாய்க்கப் பெறாவிடினும் உயர்ந்த கொள்கையில் ஈடுபட்ட உள்ளத்தால் உந்தப்பெற்றே எழுதுகின்றேன். ஆதலின் சீர்திருத்த அன்பர்கள் காய்தலின்றி ஏற்குமாறு வேண்டுகின்றேன்.

இதன் ஆசிரியர் ஹரிஹர நெல்லையா அவர்களைத் தமிழன்பர்கள் நன்கறிவர். அவர் பரம்பரைத் தமிழ்ப் புலமைக் குடும்பத்தில் தோன்றியவர். ஆங்கிலத்திலும் தமிழிலும் படித்துத் தேறிச் சர்வகலாசாலைப் பட்டம் பெற்றவர். "வீரகேசரி" என்ற சிறந்த தேசீயப் பத்திரிகைக்குக் காணாக் கருவியாகவிருந்து அதன் ஆசிரியராக அமர்ந்து இலங்கைவாழ் தமிழ் மக்கட்கு அரும் பணியாற்றி வருகிறார். சிறந்த கற்பனா சக்தி வாய்க்கப்பெற்றவராதலின் நமக்கு "பிரதாபன் அல்லது மஹாராஷ்டிர நாட்டு மங்கை" என்ற கதையின்மூலம் வீரத்தின் மேன்மையையும், "சந்திரவதனா அல்லது காதலின் வெற்றி" என்ற நவீனத்தின்மூலம் மெய்க் காதலின் மாண்பையும், "புவனசுந்தரி அல்லது தியாகத்தின் மாண்பு" என்ற தொடர் கதையின் மூலம் உண்மைத் தியாகத்தின் உயர்வையும் சித்தரித்துக் காட்டினார். 'வீரகேசரி' வாரப் பதிப்பில் "சுரேந்திரநாதன் அல்லது கள்வனைக் காதலித்த காரிகை" என்ற தொடர் கதையை வியாஜமாக வைத்து, பொருளாதார சமத்துவத்தை உருவகப்படுத்திக் காட்டி வருகிறார். "நளின சிங்காரி

அல்லது தோழனின் துறவு' என்னும் கற்பனைக் கதையின் மூலம் தினம் "வீரகேசரி" வாசக நேயர்களை இன்பக் கடலாட்டி வருகிறார். உரையாடலால் வீர உணர்ச்சியை ஊட்ட வல்லுநர். இத்துணைச் சிறப்புக்களைப் பெற்ற அன்பர் நெல்லையா அவர்கள் "காந்தாமணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி" என்ற இக் கதையை எழுதுவதின் மூலம் அன்னார்க்குச் சீர்திருத்தத்திலுள்ள ஆர்வத்தை ஒருவாறு நாம் அளவிட்டு அறிதல் கூடும்.

இக்கதை தெய்வீகக் காதலால் இணைக்கப் பெற்ற சீர்திருத்த வேட்கை மிக்க இளங்காதலர்களின் இனிய சம்பாஷணையிலிருந்து ஆரம்பமாகிறது. கதாநாயகன் உண்மையான அந்தணத்தன்மையுடையவனாகக் காட்சி அளிக்கின்றான். "அந்தணர்என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும செந்தண்மை பூண்டொழுகலான்" என்ற பொய்யாமொழிக்கு ஓர் எடுத்துக் காட்டாக மிளிர்கின்றான். பிள்ளைப் பருவத்திலேயே சீர்திருத்த வேட்கை அரும்பி, தன் தகப்பனாரான வைதீக மதோன்மத்தனின் பண்ணையில் வேலை செய்யும் தாழ்த்தப்பட்ட சமூகத்திற் பிறந்த ஒருவனின் மகளுக்கு ஆரம்பக் கல்வி போதித்து, அவளை மங்கையர் திலகமாக்கிவிடுகின்றான். கள்ளங்கபடமற்ற இவர் நேசம் முற்றித் தெய்வீகக் காதலாகப் பரிணமித்து விடுகிறது. அறநெறிச் செல்வனும், குணநிறை நங்கையும் ஒருங்கு கூடி வாழ்க்கை நடாத்துதற்கு, பாழான வைதீகப் பிடிவாதமும் அர்த்தமற்ற அசட்டுக் கொள்கையும், நிலையில்லாப் பணம் படைத்த செருக்கும், அதிகாரத் திமிரும் கொண்டவர்களான கதாநாயகனின் தந்தையாலும் அவனது சகாக்களாலும் எல்லையற்ற இடையூறுகள் நேருகின்றன. ஆதித்திராவிடச் சகோதரர்களின் அடிமைப் புத்தியும், பயங்கொள்ளித்தனமும், ஜாதி ஹிந்துக்களின் அட்டூழியச் செய்கைகளுக்குத் துணை புரிவனவாயிருக்கின்றன. பிறப்பால் ஜாதி உயர்வு தாழ்வு கற்பித்துக்கொண்ட குருட்டுக் கொள்கையில் பற்றுடைய தந்தை, தன் தநயன் மனதிற்கியைந்த நங்கை நல்லாளை மணந்தால் தனக்குப் பேரவமானம் வந்து விடுமென்று எண்ணி, அப்புநிதவதி பிறந்து வளர்ந்த வீட்டையும் சுட்டெரித்து அவ்வாரணங்கையும் மாணத்திற்குட்படுத்தி விடுகிறான். மாணத் தருவாயிலும் தனது இனிய மணாளனிடம், தாங்கள் கொண்ட கொள்கையைத் தனியிருந்தேனும் நிலை நிறுத்த வாம்பெற்று மகிழ்ச்சியுடன் உயிர் விடுகிறாள்.

உயர்நெறி மேற்கொண்ட உத்தமனும் கதாநாயகன் தன் காதலிக்கு வாக்குறுதி கொடுத்தபடி தனியிருந்து கடமையாற்றி, தீண்டத் தகாதவரென்று கருதப்பட்ட மக்களுக்கு எல்லா நலன்களையும் அடைய வேண்டுவன செய்கிறான். அவனது செயலால் மக்கள் பலர் சீர்திருத்தத்துறையி லீடுபடுகின்றனர். "நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழியொழுகிப் புல்லுக்கு மங்கே பொசிவது" இயல்பேயன்றோ?

இக்கதை மிக நன்றாய் அமைந்திருக்கிறது. நடை ஆற்றொழுக்கெனச் செல்கிறது. இத்தகைய சீர்திருத்தக் கதைகள் பல தேவையாதலின் இதனை ஆதரிப்பதின் மூலம், இன்னும் பல அரிய நவீனங்களை எழுதி உதவ ஆசிரியரை ஊக்கப்படுத்த வேண்டுவது தமிழ் மக்கள் கடமையாகும்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!
சீர்திருத்த நெறி திறம்பெற்றோங்குக!!

கொழும்பு. செ. ராம. வள்ளியப்பன்.
9-7-1937.

# முன்னுரை.

தீண்டாமை விலக்கில் நமது நாடு இதுகாலை அதிதீவிரமாக ஈடுபட்டிருக்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் "காந்தாமணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி'' என்ற இச்சிறு கதையை நான் எழுதி வெளியிடுகிறேன். இதனைப் படிக்கும் சிலருக்கு அபிப் பிராய பேதங்கள் ஏற்படக்கூடும். குற்றங்களை நீக்கி, குணம் ஏதாவது உளதேல் அதைமட்டும் ஸ்வீகரித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். கதையையும், அதிலடங்கியுள்ள கொள் கைகளையும், அபிப்பிராயங்களையும்பற்றி இதற்கதிகம் எதையும் நான் எழுத விரும்பவில்லை.

இலங்கை நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்தின் தலை வரும், சீர்திருத்த இயக்கங்களிலும், பொதுக் காரியங்களிலும் அதிதீவிரமாக எப்பொழுதுமே ஈடுபடும் இயல்பினரும், தன வணிகமரபைச் சேர்ந்த சிறந்த வர்த்தகருமான திரு. செ. ரா. ம. வள்ளியப்ப செட்டியார் அவர்கள் இப்புத்தகத்திற்கு முகவுரை எழுதிக் கொடுத்தார்கள். நான் கேட்டவுடன் மிகுந்த அன்புடன் முகவுரை எழுதித் தந்த நண்பர் வள்ளியப்ப செட்டியார் அவர்க ளுக்கு எனது நன்றி உரியதாகும். என்னிடத்துள்ள அன்பு மிகு தியால் அவர்கள் என்னைப் புகழ்ந்து வரைந்திருக்கிறார்கள். அப் புகழ்ச்சிக்கு என்னை நான் இனித்தான் உரியவனாக்கிக்கொள்ள வேண்டும்.

இக்கதை வெறும் கட்டுக்கதை. ஆகவே, இதில் காணப் படும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்களேயன்றி எவரையும் குறிப்பனவல்ல. இம்முக்கியமான உண்மையை எல்லோரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

H. நெல்லையா,
ஆசிரியர்.

கொழும்பு,
9-7-1937.

# காந்தாமணி

அல்லது

# தீண்டாமைக்குச் சாவுமணி.

——— 0 ———

## அத்தியாயம் 1.

### தயங்காதே! மயங்காதே!

மாலை மணி ஆறுக்குமேலிருக்கும். ஆதித்தன் அத்தகிரியை அநேகமாக அடைந்துவிட்டான். பூரணசந்திரன் கிழக்கே உதயமாகிவிட்டான். இனிய தென்றற்காற்று வீசிக்கொண்டிருக்கிறது. பக்ஷிசாதிகள் வெகுசந்தோஷமாகக் கிளைகளிலமர்ந்து இனிமையாய் பாடிக்~~கொண்டு~~க்கொண்டிருக்கின்றன. ஆதித்தனூர் என்ற சிற்றூரின் ஆற்றோரமாக இருவர் கைகொடுகை கொருத்து மெதுவாக நடந்து செல்லுகிறார்கள். அவர்களில் ஒருவன் வாலிபன். அவனுக்கு வயது இருபது அல்லது இருபத்திரண்டுதானிருக்கும். அவன் அழகிற் சிறந்தவன். ஆஜானுபாகு. அவனுடைய முகம் பளபளவென்று ஜொலித்துக் கொண்டிருக்கிறது. அரும்புபோல வளர்ந்திருந்த தனது மீசையை அவன் அடிக்கடி முறுக்கிக்கொள்ளுகிறான். தன்னருகே தன்னுடன் அன்னத்தைப் போலும் நடந்துவருகிற யுவதியை அவன் நிமிஷத்திற்கொருதடவை திரும்பிப் பார்க்கிறான். பெருமூச்சுவிடுகிறான். அவன் உயர்ந்த குடும்பத்தில், ஸ்ரீமான் வீட்டில் பிறந்தவனென்பதை அவனைப் பார்த்தவர்கள் தெரிந்து கொண்டுவிடுவார்கள். அவனது அகத்தின் அழகுமுகத்தில்தோன்றுகிறது. புன்னகை அவ்வதனத்தில் தவழ்ந்துகொண்டிருக்கிறது. இடுப்பில் அவன் கதராடையையே அணிந்திருக்கிறான். தலையில் ஒரு காந்திக்குல்லாய் காணப்படுகிறது. அவனுடன் கைகொருத்துச் செல்லும் யுவதிக்கோ வயது 17 அல்லது பதினெட்டு இருக்

கலாம். அந்நங்கை நல்லாள் நற்குணவதி. அழகிற் சிறந்தவள். அவள் தலையைக் கவிழ்த்துகொண்டே நடக்கிறாள். சிலசந்தர்ப்பங்களில் அவள் கடைக்கண்ணால் வாலிபனைப் பார்க்கிறாள். அவளும் பெருமூச்சுவிடுகிறாள். அவள் கூந்தல் அழகி, சுருண்டு, சுருண்டு நீளமாக வளர்ந்திருந்த கூந்தலை அவள் வாரி முடித்துக் கொண்டிருக்கிறாள். அவள் பரம ஏழை யென்பதைப் பார்வையளவில் தெரிந்துகொள்ளமுடியும். அவளுடைய காதுகளிலும் கைகளிலும் இரண்டொரு பித்தளை ஆபரணங்கள் மட்டுமே காணப்படுகின்றன. ஆனால் கருணை வள்ளலான கடவுள் இயற்கையழகை அவளுக்குச் சம்பூர்ணமாகக் கொடுத்திருந்தார். அவளும் கதராடையே அணிந்துகொண்டிருக்கிறாள்.

யுவனும் யுவதியும் சற்றுதூரம் நடந்துசென்று ஆற்றின் ஓரத்தில் ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்துகொண்டார்கள். வாலிபனுடைய பிடிப்பிலிருந்து தனது வலக்கரத்தை விடுவித்துக் கொள்ள யுவதி முயன்றாள். யுவனோ விடுவதாயில்லை. அவன் சுந்தரியின் எழில்மிகு முகத்தைப் பார்த்துச் சிரித்தான். அச்சிரிப்பு கபடமற்ற களிப்பின் விளைவு. எல்லையற்ற ஆனந்தத்தின் அறிகுறி! "கண்மணி! காந்தா! ஏன் இந்தப்பதட்டம்? உனக்கு இன்னும் தெளிவு உண்டாகவில்லையா? தன்னம்பிக்கை ஏற்படவில்லையா? அடி! காதற்கிளியே! நீ யாருக்கடி அஞ்சுகிறாய்?" என்று வாலிபன் பேசிக்கொண்டே சிறுமி காந்தாமணியை ஒரு கரத்தினால் அணைத்தான். அவனுடைய ஸ்பரிசம் காந்தாமணியின் உடலைச் சிலிர்க்கச் செய்தது. அவள் தன்னருமைக் காதலன் மதனசுந்தரனை நிமிர்ந்து பார்த்தாள். பார்த்ததும் அவளது கண்களில் நீர் பெருகிற்று. அது ஆனந்தக் கண்ணீர் அல்ல. அலர்ந்த மிருதுவான புஷ்பத்தைப்போன்று மலர்ச்சியுடனிருக்கவேண்டிய காந்தாவின் முகம் வாட்டமுற்றுவிட்டது. அவளால் நாவெடுத்துப் பேசமுடியவில்லை. நாவு அசைய மறுத்தது. சகிக்க முடியாத மனவேதனையுடன் கட்டழகி காந்தாமணி தாரைதாரையாகக் கண்ணீரை வடியவிட்டாள். மௌனம் சாதித்தபடியே அவள் மதனசுந்தரனின் மார்பில் சாய்ந்துவிட்டாள். சாய்ந்த காதலியை இருகரங்களினாலும் மதனசுந்தரன் அணைத்துக்கொண்டான். பைங்கொடியாளின் மனத்துயர் அவனுடைய நெஞ்சத்



தைப் புண்படுத்திற்று.. சந்தோஷத்துடனிருந்த அவன், கவலையடைந்தான்: முகத்தில் கோபக்குறி தோன்றிற்று. "காந்தா! இதென்ன பேதமை? உன்னை யார் என்ன சொன்னார்கள்? உன்னை எவன் இழிவாகப் பேசினான்? அவனுடைய பெயரை எனக்கு நீ சொல்லு. இந்த நிமிஷத்திலேயே நான் அவனைத் தண்டித்துவிடுகிறேன். காதலி! உலகமே தலைகீழாகப் புரண்டுவிட்டாலும் நம்மிருவரையும் பிரிக்கமுடியாதென்பதை நீ அறியமாட்டாயா? ஏன் நீ இன்னும் அதைரியப்படுகிறாய்? உனக்கு என்னிடம் பரிபூரணமான நம்பிக்கை உண்டாகவில்லையா?" என்று மறுபடியும் மதனசுந்தரன் வினவினான்.

காந்தாமணி:- என்உயிரே! உன்னையோ நான் நம்பவில்லை,

மதனன்:- பிறகு ஏன் இக்கண்ணீர்? காந்தா! நீ அழுவதைப் பார்க்க என்னால் சகிக்க முடியுமா? நாளைக்கு நான் சென்னைக்குச் செல்லவேண்டுமென்பதை நீ அறியமாட்டாயா? இன்னும் எட்டு மாதங்கள் மட்டும்தான் நான் கல்வி பயிலவேண்டும். பிறகு நான் இவ்வூருக்கு வந்துவிடுவேன். அப்பால் நாம் இருவரும் விவாக பந்தத்தினால் இணைக்கப்பட்டுவிடுவோம். பெண்ணே! நான் பிரிந்து போகிறேனே என்று வருந்துகிறாயா? நீ புத்திசாலியாயிற்றே! இவ்வளவு காலமாகப் பொறுமையுடனிருந்த நீ, இன்னும் சின்னாட்கள் பொறுக்கமாட்டாயா?

காந்தாமணி:- காதலா! சில நாட்களல்ல, எத்தனை வருடங்கள் வேண்டுமென்றாலும் நான் பொறுமையுடனிருப்பேன் ஆனால்........

மதன:- ஆனால் என்ன?

காந்தா:- நான் உனக்கு அருகதையானவளல்ல. என்னை நீ இனிமேலாவது மறந்துவிடத்தான் வேண்டும். என் உயிரே! எவ்வளவு மனவேதனையின் பேரில் நான் இவ்வாறு பேசுகிறேனென்பதை நீ ஊகித்துக்கொள்ளமாட்டாயா? உன்னை விட்டுப்பிரிந்தால் நான் பிணமாகிவிடுவேன் என்பது நிச்சயம். உயிரைவிட்டுப் பிரிந்த உடலின் கதி என்னவென்பதை நான் சொல்லவும்வேண்டுமா? அப்பப்பா! என்னால் சகிக்கவே முடியவில்லை. ஒவ்வொரு

மனிதரும் சொல்லும் சொற்கள் என் இருதயத்தைப் பிளக்கின்றன. காதலா! என்னை மன்னித்துவிடு. எனது காதல் பரிசுத்தமானது; அது தெய்வத்தன்மை வாய்ந்தது; என்றும் அழியாதது; தன்னலமென்பதே இல்லாதது! உன்னுடைய நன்மைக்காக நான் எனது வாழ்க்கையின் இன்பத்தை இதோ தியாகம் செய்யப் போகிறேன். என்னால் உனக்கு ஒரு குறைவு வருமானால் அதை நான் எப்படிச் சகிக்க முடியும்? காதலா! இப்பிறவியில் நாமிருவரும் ஒன்றி வாழ முடியாது. நமது இல்லற வாழ்க்கை நல்லறமாகாதென்று நம்முடைய சமூகம் கண்டிப்பாகச் சொல்லுகிறது. என்னை வரிப்பதால் உனக்குச் சிறுமைதானுண்டாகும். இவ்வுலகத்தை நீ பகைத்துக்கொள்ள நேரிடும். அதை நினைக்கும்பொழுதே என் நெஞ்சம் பதைபதைக்கின்றது. என்னொருத்திக்காக நீ பேரவமானத்திற்குள்ளாகலாமோ? ஒருகாலத்தும் கூடாது.

மதன:- காந்தாமணி! இப்பழைய பஞ்சாங்கத்தை நீ திரும்பவும் ஓத ஆரம்பித்துவிட்டாயே? எந்த வகையிலடி நீ எனக்குத் தாழ்ந்தவள்? கண்மணி! சின்னஞ்சிறு பருவத்திலிருந்தே உன்னை நான் நேசித்து வருகிறேன். பிறப்புச்சாதி, தீண்டாமை என்பவைகள் நமது சமூகத்தில் கிடையாதென்பதை உனக்கு நான் உபதேசம் செய்தேன். உனக்கு நான் கல்வியையளித்தேன். நீயும் இன்றைக்கு கல்வி கேள்விகளிற் சிறந்தவளாயிருக்கிறாய். நீயும் நானும் ஒன்றிவாழக்கூடாதென்று தடுக்க எந்த மனிதனுக்கு அதிகாரமும் உரிமையும் இருக்கின்றது? ஆண்டவனுடைய திருச்சந்நிதியில் நீயும் நானும் ஒன்றுதானடி! அடிமைப் புத்தி தடித்துப்போன புல்லறிவாளர்கள் உன்னையும், உன்னினத்தாரையும் தீண்டத் தகாதவர் என்று ஒதுக்கிவைத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் நமக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. என்னுடைய விவாகம் எனது சொந்தக் காரியம். காந்தா! உன்னைப் பறையர் குலத்தில் வந்த இழிந்தசாதிப் பெண்ணென்றுதானே பிறர் சொல்லுவார்கள்? அவர்களை நாம் இருவரும் பார்ப்பினர் குலத்தில் பிறந்த கேவலமானவர்களென்று இகழ்ந்துவிடுவோம்! இவ்வளவுதானே? இதற்குத்தானா நீ இவ்வளவு தூரம் வருந்துகிறாய்? நான் உன்னை மறந்துவிடவேண்டுமா? அதைவிட என்னை நீ இறந்துபோவென்று சொல்லிவிடலாமே? கண்மணி! எனக்கு எவருடைய



தயவும் வேண்டாம். என் தந்தையாரின் சொத்துக்களையும் நான் எதிர்பார்க்கவில்லை. மேல்சாதியார் என்ற திமிர்கொண்டு அலையும் என்னினத்தாரின் ஆதரவும் எனக்குத் தேவையில்லை. எனக்கு ஆண்டவன் அறிவைக் கொடுத்திருக்கிறான். திடமான சரீரத்தை நல்கியிருக்கிறான். பாடுபட்டுப் பொருளைத் தேடி என்னையும், என் குடும்பத்தையும் காப்பாற்றிக்கொள்ளும் சக்தி எனக்கு உண்டு. யார் என்ன சொன்னாலும் சரி; எவர் எதைச் செய்யினும் சரி; நீதான் எனக்கு வாழ்க்கைத் துணைவி. நாமிருவரும் எளியதூய வாழ்க்கையை நடத்துவோம். காந்தா! என்னைப்பார்! ஒருமுறை புன்னகை செய். உன் கனிவாயினால் சந்தோஷமாகவும், தைரியமாகவும் என்னை "நாதா!" என்று அழைக்கமாட்டாயா? ஆனந்தக் கண்ணீரை வடிக்கவேண்டிய உனது கண்கள் அழுகைக் கண்ணீரை விடலாமோ? அடி! பெண்கள் திலகமே! தீண்டத் தகாதவள் என்ற எண்ணத்தை விட்டுவிடு. நான் உயர்ந்த சாதியான் என்ற நினைவை அகற்றிவிடு. குணத்தில் சிறந்தவளான நீ பார்ப்பினியல்லவோ?

மதனசுந்தரனின் இவ்வார்த்தைகள் செல்வி காந்தாமணியின் சித்தத்தைக் குளிரச்செய்தன. என்றாலும் அவளைவிட்டு வியாகூலம் அகலவில்லை. மெல்லியகுரலில் அக்கிள்ளைமொழியாள் பேசினாள்.

காந்தா:- நாதா! நீ சொல்லுவதெல்லாம் சரிதான். பிறப்புச்சாதியென்பது கிடையாதென்பதை நான் அறிவேன். எனக்கு அவ்வறிவையுண்டாக்கியவன் நீதான். அப்பப்பா! நீ எனக்குச் செய்துள்ள நலன்களை நினைக்கையில் நான் ஆச்சரியமடைகிறேன் எழுத்து வாசனை யென்பதேயில்லாத என்னை நீ இன்றைக்குக் கல்வியிற் சிறந்தவளாக்கிவிட்டாய். காதலா! உன்னுடனேயே எப்பொழுதும் இருக்கவேண்டுமென்ற ஆசை எனக்கு உண்டு. ஆனால் நமக்கு வைரிகள் அநேகர் இருக்கிறார்கள். உன்னுடைய தந்தையார் உன்னிடம் கோபமடைந்திருக்கிறாராம். என்னுடைய பிதாவைக்கூப்பிட்டு அவர் கண்டித்தாராம். என்தந்தையோ படிப்பில்லாதவர். கழனியே கதியென்றிருப்பவர். "உன்மகளுடன் என்மகன் பேசுகிறானென்று கேள்விப்படுகிறேன். கீழ்ச்சாதிப்பயலான நீ ஒழுங்காக உன்பெண்ணை நடந்துகொள்ளச்செ

ல்லு. இல்லாவிட்டால் உன்பிழைப்பில் மண்ணை நான் போட்டுவிடுவேன்" என்று உன் தந்தையார் என் தகப்பனிடம் கூறினாராம். இதைக்கேட்ட என்னுடைய பிதா என்னிடம் வந்து ஏதேதோ பேசினார். "சேரியில் பிறந்த உனக்கு பண்ணைமகனுடன் என்னடி உறவு? குடியைக்கெடுக்கவந்த பிடாரியே? என்னடி படிப்பு? புல்லுவெட்டப்போடி" என்று என் தகப்பன் என்னை வெருட்டுகிறான். இம்மட்டல்ல! நாதா! உன்னைக்குறித்து அக்கிரகாரத்தில் பலவிதமாகப் பேசுகிறார்களாம். சேரியிலும் நம்மைக்குறித்தே பிரஸ்தாபிக்கிறார்கள். எனக்கு எவ்வளவு மானக்கேடுவந்தாலும் நான் சகித்துக்கொள்வேன். கீழ்ச்சாதிக்காரி தானே என்று என்னுடைய குறையை யாவரும் மறந்துவிடுவார்கள். ஆனால் உனது நிலை அவ்வாறில்லையே? என்றுதான் நான் துயரப்படுகிறேன்.

மதன்:- கீழ்ச்சாதி! மேல்சாதி! எந்தச்சாத்திரத்திலடி இவ்வாறு எழுதிவைத்திருக்கிறது? காந்தா! உலகமெங்கும் விடுதலை முழக்கம் ஒலித்துக்கொண்டிருக்கிறது. நசுக்கப்பட்டவர்களெல்லோரும் தலைநிமிர்ந்து வருகிறார்கள். "பார்ப்பானை அய்யரென்ற காலமும் போச்சே! வெள்ளைப்பறங்கியைத் துரையென்றகாலமும் போச்சே!" என்று நம் நாட்டுப்புலவன் கர்ஜனைசெய்கிறான். அடி! பெண்ணே! உலகத்தார் யாவரும் ஆகாயக்கப்பலில் பறக்கும் இக்காலத்தில் இந்துக்களாகிய நாம் மட்டும் கட்டைவண்டியிலா பிரயாணம்செய்யவேண்டும்? உலகமெல்லாம் முன்னேற்றமடைய,நமது சமூகம்மட்டும் பின்னோக்கியா போகவேண்டும்? ஒருகாலத்திலும் கூடாது. காந்தாமணி! நமது பாரதநாடு சுதந்தர வீரர்களை ஈன்ற நாடு. ஒரு புத்தன் அவதரித்த நன்னாடு. இங்கே வேற்றுமைக்கு இடமேகிடையாது. அடிமைத்தனத்துக்கு பாரததேவி இடங்கொடாள். இடைக்காலத்தில் ஏதோ சில நய வஞ்சகர் வெட்டிய மோசப்படுகுழியில் இந்து சமூகம் விழுந்தது. இன்றைக்கோ அச்சமூகம் விழித்தெழுந்துவிட்டது. பெரிய் மஹாத்மாக்கள் தீண்டாமைக்குச் சாவுமணியை அடித்துக் கொண்டுவருகிறார்கள். அடி! காந்தாமணி! நீயும் தீண்டாமைக்குச் சாவுமணியை அடிக்கக்கூடாதா? தீண்டாமைப் பேயை நாட்டிலிருந்து விரட்டவேண்டும். எல்லோருக்கும் விடுதலை! உயர் ஜென்மம் இத்தேசத்தில் எய்தினராயின் வேதியராயினும் ஒன்றே! பறையராயினும் ஒன்றே! என்று நாம் முழக்குவோமடி தீண்டாமையொழிப்பு என்று நான் வாயளவில்பேசக்கூடியவனல்ல. சொன்னசொற்படி நடக்கும் வைராக்கியம் எனக்கு உண்டு. தந்தைசொல்லுகிறான், சமூகத்தார் புலம்புகிறார்கள்; என்பதற்காக நாம் நம்முடைய கொள்கையைப் புறக்கணிப்பதா? மனச்சாக்ஷியை நாம் விற்கிரையஞ்செய்வதா? காந்தா! நீ தமிழ்த் தெய்வம் ஈன்றெடுத்த தவச்செல்வியன்றோ? தமிழ்மகள் வீரப்பெண்ணாகவன்றோ இருக்கவேண்டும்? தயங்காதே! மயங்காதே! சந்தேகப்பிசாசை உன் உள்ளத்திலிருந்து விரட்டிவிடு. உன் தந்தையும், உன் இனத்தாரும் உளறினால் அவர்களுக்கு நீ உண்மையைச் சொல்லு. தைரியமாகக் கூறு. என்னினத்தாரும், என் தந்தையாரும் எதைவேண்டுமென்றாலும் பேசட்டும். அவர்களுடைய வாயை நான் அடைத்துவிடுகிறேன். கண்மணி என்ன சொல்லுகிறாய்?

காந்தாமணி:- நாதா! உன்னுடைய வீரமொழிகள் பேடியைக்கூட ஆவேசம் கொள்ளுமாறு செய்துவிடுகின்றன. சரி! சரி!! எல்லாம் தெய்வத்தின் திருவருள். ஆம்! ஆம்! மனச்சாட்சியை நாம் புறக்கணிக்கக்கூடாது. காதல! உண்மையை நான் அறிந்தேன். உணர்ச்சி பெற்றேன். நீ நாளைக்குச்சென்னைபோவதுதான் வருத்தத்தைக்கொடுக்கிறது. எட்டு மாதங்கள் எவ்வளவு நீண்ட காலம்? அவ்வெட்டு மாதங்களும் எனக்கு எட்டு யுகங்களாகத் தானிருக்கும். நாதா! உன்னைவிட்டு நான் எவ்வாறு பிரிந்திருக்கப் போகிறேன்?

மதன்:- கண்மணி! எட்டு மாதங்களும் எட்டு நாட்களைப் போன்று கடந்து சென்றுவிடும். நீயும், நானும் வெவ்வேறிடங்களில் வசித்துவந்தபோதிலும், நாம் ஒன்றியே யிருப்போம். மெய்க் காதலர் எங்கே யிருந்தாலென்ன? அவரது உயிரும், மனமும் ஒன்றுதானே? காந்தாமணி! வாரத்திற்கு மூன்று கடிதங்களாவது நீ எழுதவேண்டும். இங்கு நடப்பவைகளையெல்லாம் எனக்கு நீ அறிவிக்கவேண்டும். நான் அவசியம் வரவேண்டுமென்றால் எனக்கு நீ அவசரத் தந்தியை அனுப்பிவிடு. அடுத்த நாளில் நான் வந்து குதித்துவிடுவேன்.

காந்தா:- மதனா! நான் இங்கே முழுச் சோம்பேறியாயிருக்கவேண்டுமா? நீ இல்லாவிட்டால் எனக்குப் பொழுதே போகாதே?

மதன்:- காந்தா! உனக்குத்தான் நான் நிறைய வேலை கொடுத்திருக்கிறேனே? நான் கொடுத்த புத்தகங்களையெல்லாம் நீ படி. ஒவ்வொரு பத்திரிகையையும் விடாமல் நீ வாசிக்கவேண்டும். சேரியிலுள்ள சகோதர சகோதரிகளுக்குச் சுகாதாரத்தைப்பற்றியும், குடியின் கேட்டைப்பற்றியும் நீ ஒவ்வொருநாளும் பிரசங்கம் செய்யவேண்டும். கண்ணே! நாளை முதற்கொண்டு நீ ஒரு இராப்பள்ளிக்கூடத்தைச் சேரியில் ஆரம்பம் செய். சேரியிலுள்ள சிறு குழந்தைகளுக்கு எழுதவும், படிக்கவும் சொல்லிக்கொடு. இவையெல்லாம் எவ்வளவு பெரிய உயர்ந்த வேலைகள்?

காந்தா:- நாதா! சாதி ஹிந்துக்களில் சிலரேனும் உன்னைப் போன்று நல்லவர்களாகவும், விசாலமான நோக்கமுள்ளவர்களாகவுமிருந்தால் நம் நாடு எவ்வளவு விரைவில் முன்னேற்றமடைந்துவிடும்? சரி! நீ சொல்லுகிறபடியே செய்கிறேன்.

மதன்:- காந்தா! கடைசியாக உனக்கு மீண்டும் நான் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். தீண்டாமையை விலக்குவதென்பது எளிதான காரியமல்ல. பல்லாயிரம் வருடங்களாக வழக்கத்திலிருந்துவரும் இப் பழக்கத்தைக் களைவதில் எத்தனையோ கஷ்ட நஷ்டங்கள் நமக்கு ஏற்படத்தான்செய்யும். கஷ்டப்படாமலும், நஷ்டத்திற்குள்ளாகாமலும் மிகப் பெரிய காரியங்களை எவராலும் சாதிக்கமுடியாது. பெண்மணி! மகத்தான தியாகங்களை நாம் செய்யவேண்டும். நம்மை இகழ்வார்கள், அடிப்பார்கள், மிதிப்பார்கள்; அவற்றையெல்லாம் நாம் பொருட்படுத்தக்கூடாது. சத்தியம் நம் பக்கத்திலிருக்கின்றது. நியாயம் நமது கட்சியிலிருக்கின்றது. அறக்கடவுளின் ஆசீர்வாதம் நமக்கு இருக்கிறது. நாம் யாருக்கு அஞ்சவேண்டும்? பெண்கள் நாயகமே! இனியேனும் தன்னம்பிக்கையை இழக்காதே! தாழ்ந்த சாதிப் பெண்ணென நீ உன்னை குறைவாக நினைத்துக்கொள்ளாதே. என்னுடைய காந்தா வீரத்திற் சிறந்தவளாய்த்தான் திகழவேண்டும்.



காந்தா:- நாதா! உன்னுடைய ஆதரவும், உறவுமிருக்கையில் எனக்கு என்ன குறை?

மதன்:- கண்மணி! நான் உனக்கு ஏதேதெல்லாமோ செய்திருப்பதாகச் சொல்லுகிறாயே? அதற்கெல்லாம் பிரதியாக நீ எனக்கு என்ன தரப்போகிறாய்?

காந்தா:- நானே உன்னுடையவள்தானே? வேறு என்ன வேண்டும்?

மதன்:- இப்போது எனக்குத்தர ஒன்றுமே இல்லையா?

காந்தா:- முத்தம்தருகிறேன்.

மதன்:- உன்னுடைய முத்தத்திற்கு அவ்வளவு மதிப்பு அதிகமோ?

காந்தா:- இல்லையோ? இல்லையென்றால் நான் போகிறேன்.

மதன்:- கண்மணி! கோபித்துக்கொள்ளாதே. வேறு எதற்கும் நான் அஞ்சமாட்டேன். உன்னுடைய கோபம் என்றால் எனக்குப் பயம்தான். காந்தாமணி! நேரமாகிவிட்டது. பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை நான் செய்யவேண்டும். நான் உனக்குக் கூறியவைகளெல்லாம் நினைவிருக்கிறதா? பத்மினியும், சாண்ட்பீபியும், லெட்சுமி பாயும் பிறந்த தேசத்தில் வந்துதித்த பெண்ணே! தன்னம்பிக்கையை இழந்துவிடாதே! எவர் என்னசொன்னாலும் அவற்றைப் பொருட்படுத்தாதே. போகலாம் வா.

காதலர் இருவரும் ஊருக்குத் திரும்பினார்கள். தத்தம் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

மதனசுந்தரன் என்பவன் யார்? அவனது காதலி காந்தாமணி யார்? என்ற கேள்விகள் வாசகநண்பர்களுடைய மனதில் எழும். அவர்களுடைய வரலாற்றைச் சுருக்கமாக இங்கே எழுதுகிறேன். ஆதித்தனூரில் ஆதிசேஷ அய்யர் என்றவோர் பண்ணையார் இருந்தார். அவர் பெரிய பணக்காரர். விசாலமான விளைநிலங்கள் அவருக்கு உண்டு. அவருக்கு மதனசுந்தரனென்பவன் ஒரே மகன். ஆதிசேஷ அய்யருக்குச் சிறிதளவு தமிழ் எழுதவும் படிக்கவும் தெரியும். ஆனால் அவர் கல்வியை அபிவிருத்திசெய்து

கொள்ளவில்லை. வைதீகக்கொள்கைகளில் அவருக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்துவந்தது. பிறப்புச்சாதியை ஒழிப்பது, தீண்டாமையை அகற்றுவது என்று கேட்டால் பண்ணையார் ஆதிசேஷய்யருக்குக் கோபம் வந்துவிடும். பத்திரிகைகளை அவர் படிப்பதில்லையென்றாலும், மகாத்மாகாந்திபோன்ற தலைவர்களைப் பற்றிப் பலர் பேச அவர் கேட்டிருக்கிறார். பணத்தைத்தவிர பண்ணை அய்யரவர்களிடம் வேறொருபெருமையும் இல்லை. பணம் பாதாளம்வரையிலும் பாயுமல்லவா? ஆதித்தனூர் கிராமத்தில் பண்ணை ஆதிசேஷய்யர் வைத்ததுதான் சட்டம். அநேகம் வைதீகப் பார்ப்பனர்கள் அவரை அண்டிப் பிழைத்துவந்தார்கள். காந்தியின்பெயரைக்கேட்பது அவருக்கு நஞ்சைப்போலிருக்கும். பருவகாலத்தில் மழைபெய்யாமல் விளைநிலங்கள் தீய்ந்துவிட்டால் அதற்குக்காரணம் காந்தியின் பித்தலாட்டங்களென்று அவர் சொல்லுவார். "என்ன தீக்ஷதர்வாள்! இந்தவருஷம் வயல்களில் விளைவே இல்லை. மழையைக்காணவில்லை! காலம் கலிகாலமாய்ப் போச்சுது! சாதிக்கட்டுப்பாடுகள், வர்ணாசிரமதர்மம் எல்லாம் கெட்டுப்போய்விட்டன! என்ன செய்யலாம்? எவனோ ஒருவன் வடக்கேபிறந்து என்னென்னவோ பேசுகிறானாம்; ஏதேதோ செய்கிறானாம். அந்த நீசனின் பேச்சைக்கேட்டு சில அதிகப்பிரசங்கிகள் ஊரில் குழப்பத்தைக் கிளப்புகிறதுகள். இந்தப்படி அனாசாரங்கள் அதிகப்பட்டால் மழைபெய்யவாசெய்யும்!" என்று அப்பய்யா தீக்ஷதரிடம் பண்ணை அய்யரவர்கள் கேட்டார்கள். தீக்ஷதர் பலே பேர்வழி. ஆளுக்குத்தகுந்தபடியெல்லாம் ஆடுவதிலும், பாடுவதிலும் அவர் சமர்த்தர். பண்ணை அய்யரவர்களின் மனம்போல்பேசி அவரிடமிருந்து பணத்தையடிப்பதுதான் அப்பய்யா தீக்ஷதரின் நோக்கம். "பண்ணையார்வாள்! அதை ஏன் கேட்கிறீர்கள்? உலகம் கெட்டே போயுடுத்து. அடே அப்பா! நாலுமாசத்துக்குமுன்னாலே நான் மதுரைக்குப்போயிருந்தேனே! உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? ஊரெல்லாம் ஒரேகூட்டமாயிருந்தது. தெருக்களிலெல்லாம் தோரணங்கள் கட்டியிருந்தார்கள். திருவிழாக்காலம்போலிருக்கிறதென்று நான் நினைத்தேன். பிறகு மதுரை அப்பணை அய்யங்காரிடம் என்ன விசேஷமென்று விசாரித்தேன். அந்த நீசப்பயல் காந்தியா, கிந்தியா? எவனோ ஒருவனிருக்கிறானாமே? அவன் அன்று மதுரைக்குவந்திருந்தானாம். அவனுக்காக ஊரெல்லாம் அலங்காரம் செய்யப்பட்டிருந்ததாம்! பார்ப்பானும் பஞ்சமனும் ஒன்றுதானென்று சொல்லும் அவனுக்கு இந்தப்பாடாயிருந்தால் மழை ஏது? காற்று ஏது? சண்டாளத்துவம் அதிகப்பட்டுப்போச்சு" என்றார் தீக்ஷதர்.



பண்ணையார்:— தீக்ஷதர்வாள்! கோவிலுக்குள்கூட பள்ளன் பறையன் வரலாமென்று காந்தி சொல்லுகிறானாமே?

தீக்ஷதர்:— ஆமாம்! அந்தக்கூத்து உங்களுக்குத்தெரியாதா? சில ஊர்களில் கோவில் தர்மகர்த்தாக்கள் கோவில்களைக் கீழ்ச்சாதிகளுக்கு திறந்துவிட்டுவிட்டார்களாம்! இந்தச்சங்கதியைஉங்கள் குமாரன் மதனசுந்தரன்தான் எனக்குச்சொன்னான்.

பண்ணையார்:— சிவ! சிவ! என்ன அநியாயம்! இந்தக்காந்தியை சர்க்கார் ஏன் பிடித்து அடைக்காமலிருக்கிறார்கள்? தீக்ஷதர்வாள்! நம்முடைய ஆதித்தனூரில்கூட அனாசாரங்கள் வந்துடுத்து.

தீக்ஷதர்:— ஆம். ஆம். மூந்தாநாள்காலையில் நான் ஆற்றுக்குக் குளிக்கப்போனேன். திரும்பிவரும்பொழுது நம்முடைய மாடன் இருக்கிறானல்லவா? அவன் ரோட்டில் எருவண்டியோட்டிக்கொண்டுவந்தான். "தீண்டாதேடா! எட்டிப்போடா!" என்று நான் சொன்னேன். அவன் நான் சொல்லுவதை லக்ஷியம் செய்யவில்லை! "அடே! நீ என்ன பிள்ளையடா?" என்று கேட்டேன். பண்ணையார்வாள்! அவனுக்கு எவ்வளவு தெம்பு வந்திருக்கிறது தெரியுமா? அவன் கொஞ்சம்கூடப்பயப்படாமல் "அய்யரே! சும்மா உமதுகாரியத்தைப் பார்த்துக்கொண்டு போய்விடும். நான் ஆண்பிள்ளைதான்" என்று அதிகப்பிரசங்கித்தனமாகப்பதில்சொல்லிப்போட்டு என்பக்கத்தில் நெருங்கிவிட்டான். நான் என்னசெய்வது? சிவ! சிவ! என்று சொல்லிக்கொண்டுவீட்டுக்குவந்து சாணிநீரில் ஸ்நானம்செய்து தீண்டலைப்போக்கிக்கொண்டேன். அந்தப்பயல் மாடன், கொழும்பா "கிழும்பா?" அந்தஊருக்குப் போய்விட்டுவந்தவனாம். கொழும்பு நீசப்பட்டணம். பண்ணையார்வாள்! நீங்கள் இருக்கிறபோதுகூட இவ்வூரில் இந்தமாதிரி நடக்கிறது! நாளைக்குச் சேரியிலுள்ளவன்களெல்லாம் நமது அக்கிரகாரத்திற்குள் வந்துவிடுவான்கள்போலிருக்கிறது.

பண்ணை:-தீக்ஷதர்வாள்! நம்முடைய ஊரிலுள்ள பஞ்சமன்கள் பரம சாதுக்களாய்த்தானிருந்தார்கள். என் குமாரன் இருக்கானே? அவன் தான், மதனசுந்தரன்! அவன் சேரியிலுள்ளவர்களுக்குந் தெம்பையுண்டாக்கிவிட்டான். இப்படியா எனக்குப் பிள்ளை பிறக்கவேண்டும்? அணிப்பிள்ளை! தென்னம்பிள்ளை! பிரம்மண்யமே அவனிடமில்லை. அவன் மூஞ்சியைப்பாருங்கள்! ஆயிரம் ரூபாய் செலவு செய்து மதனனுக்கு நான் அழகாகக் குடுமிவைத்தேன். பட்டணத்துக்குப் படிக்கப்போனவுடன் அவன் "கிராப்" வைத்துக் கொண்டிருக்கிறான். விபூதி பூசுவதே கிடையாது. பறையர் சேரிக்கு அவன் போகிறானாம். காந்திப் பயலின் பைத்தியம் அவனுக்கும் பிடித்திருக்கிறது. அவனை என்ன செய்கிறதென்று எனக்குத் தெரியவில்லை. தடிபோலே வளர்ந்திருக்கிறான். கோணல் எழுத்தான இங்கிலீஷைப் படிக்க அவனை அனுப்பினது மிகவும் பிசகாய்ப்போய்விட்டது.

தீக்ஷிதர்:- பண்ணையார்வாள்! மதனனைப்பற்றி கேவலமான புகார்கள் வருகின்றனவே? உங்களிடம் அதை நான் சொல்ல வேண்டாமென்றிருந்தேன். உங்களுக்கு விஷயம் தெரியுமா?

பண்ணையார்:- எல்லாம் தெரியும். தீக்ஷதர்வாள்! நான் இனிமேல் மிகவும் கண்டிப்பாயிருக்கப்போகிறேன். சேரியிலுள்ள பயல்கள் சிலர் துணிந்துவிட்டான்கள். அவர்களுக்கு நான் சரியான புத்தி போதிக்கப் போகிறேன். கருப்பாயி என்றபெண்ணுக்கு காந்தாமணி என்று பெயரிட்டு மதனன் அவளுடன் நெருங்கிப் பழகுகிறானாம். மரியாதையாக வழிக்கு வரவில்லையானால் கருப்பாயி குடும்பத்தையே நான் நாசஞ்செய்துவிடப்போகிறேன். மதனன் பட்டணத்துக்கு தொலைந்து போய்விட்டான். அவன் திரும்ப வருமுன் நான் எல்லாக் காரியங்களையும் முடித்துவிடுகிறேன். அப்படியா? பஞ்சமனுக்கு இவ்வளவு தெம்பா? தீக்ஷதரே! நான் இந்தப் பயல்களை என்ன பாடுபடுத்துகிறேன் பாருங்கள்!

தீக்ஷிதர்:- அடடா! மகாராஜாவைப் போலிருக்கும் நீங்கள் நினைத்தால் என்னதான் நடக்காது? எல்லாம் உங்கள்புண்ணியம்! பண்ணையார்வாள்! அந்த வெங்கடாசலபதி உங்களுக்கு தீர்க்கா



யசை அளிப்பார்! கொஞ்சம் செலவுக்கு முடையாயிருக்கிறது. பத்து ரூபாய் இருந்தால் தரவேண்டும்.

தீக்ஷதர் ரூபாய் பத்தை அடித்துக்கொண்டு போய்விட்டார்! இத்தகைய தந்தைக்கு நமது மதனசுந்தரன் மகனாய்ப்பிறந்திருந்தான். மதனசுந்தரன் சாதி வேற்றுமைகளைப் பாராட்டாமலிருந்தது பண்ணையார் ஆதிசேஷய்யருக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்தது. ஆனால் அவர் மதனனிடம் இவ்விஷயம்பற்றிப் பேசவேயில்லை. தனது ஒரே குழந்தையைக் கண்டிப்பதென்றால் அவருக்கு வருத்தமாயிருந்தது. கறுப்பனுக்கு மகளாய்ப் பிறந்த கருப்பாயிக்குக் காந்தாமணி என்ற பெயரிட்டு மதனசுந்தரன் அழைப்பதையும், அவளோடு அவன் நெருங்கிப்பழகுவதையும் பண்ணையார் நன்றாக அறிவார். மகனிடம் கண்டித்துப் பேசத் துணிவில்லாத ஆதிசேஷய்யர் பரம ஏழைகளான சேரிவாசிகளை நெருக்க நிச்சயித்துவிட்டார். கறுப்பனையும், காந்தாமணியையும் அடக்கி யொடுக்கிவிட்டால் காரியம் கைகூடிவிடுமென்பது பண்ணையாருடைய அபிப்பிராயம். நமது மதனனுக்குத் தந்தையின் சுபாவம் நன்றாகத் தெரியும். ஆனால் அவன் எவருக்கும் அஞ்சவில்லை. தன் மனத்திற்கு எது நியாயமென்று தோன்றுகிறதோ அதைச் செய்யும் வைராக்கியமும், நெஞ்சழுத்தமும் மதனனுக்கு உண்டு. சிறுவயதில் அவன் ஆதித்தனூரில் விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது அகஸ்மாத்தாக சிறுமி காந்தாமணியைச் சந்தித்தான். கழனிகளில் அவன் அவளுடன் விளையாடுவது வழக்கம். ஓரளவு கல்வியை மதனன் பெற்ற பின்னர் தீண்டாமை விலக்கில் அவனுடைய புத்தி சென்றது. அன்றிருந்து அவன் காந்தாமணிக்குக் கல்வி போதிக்கலானான். இயற்கையிலேயே புத்திசாலியாயிருந்த காந்தாமணி வெகு சீக்கிரத்தில் எழுதவும் படிக்கவும் தெரிந்து கொண்டாள். ஏராளமான புத்தகங்களையும், பத்திரிகைகளையும் மதனன் அவளுக்கு வாங்கிக் கொடுத்தான். எவருக்கும் தெரியாமல் மாலை நேரத்தில், ஒதுங்கிய தோட்டங்களில் மதனனும், காந்தாமணியும் சந்தித்துச் சம்பாஷித்து வந்தார்கள். காலக்கிரமத்தில் அவ்விருவரது நட்பும் காதலாக முதிர்ந்துவிட்டது.

---

## அத்தியாயம் 2.

### சமூகம் என்னைத் தண்டிக்கிறது.

பண்ணையார் ஆதிசேஷய்யரின் மனைவி அலர்மேல் மங்கை பழையகாலத்துப் பேர்வழி. ஆதித்தனூர் வாசிகள் அவளுடைய பெயரைக் குறுக்கித் திரித்து அலமேலு என்று அழைத்துவந்தார்கள். தாய்க்கு மகனிடம் உள்ள அன்பை யாரால்தான் அளவிட்டுச் சொல்லமுடியும்? தன்னுடைய ஏகபுத்திரனை மதனசுந்தரனை அவள் அளவு கடந்து நேசித்து வந்தாள். வைதீக விதிகளை மதனன் துணிந்து மீறுவதைப்பற்றி அவளுக்குக் கொஞ்சம் வருத்தமுண்டு. ஆனாலும், எவராவது மதனசுந்தரனைக் குறைவாகவோ, இகழ்ந்தோ பேசினால் அலமேலுக்குக் கோபம் வந்துவிடும். மதனசுந்தரன் படிப்பை முன்னிட்டு சென்னை சென்று சில தினங்களாயின. ஒருநாள் இரவு அலமேலு, பண்ணையார் ஆதிசேஷய்யருடன் சம்பாஷிக்கத் தொடங்கினாள்.

அலமேலு:- குழந்தை மதனனிடமிருந்து லெட்டர் ஏதாவது வந்ததா? அவன் பட்டணத்துக்குப்போய் பத்து நாட்களாகிவிட்டனவே! குழந்தை ஏன் கடிதம் எழுதவில்லை? அவனுடைய உடல் நிலை எவ்வாறிருக்கிறதோவென்று கவலையுண்டாகிறதே?

ஆதிசேஷய்யர்:- குழந்தையும்! கோட்டானும்! குட்டிச்சுவர் மாதிரிக்கு மதனனுக்கு வயது இருபத்திரண்டு ஆகிவிட்டது. என்னடி குழந்தை? அவனைப்பற்றி என்னிடம் பேசாதே என்று உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்?

அலமேலு:- ஏன் இப்படி "சள் வெள்" ளென்று விழுகிறீர்கள்? மதனனைப்பற்றிப் பேசாமல் வேறு யாரைப்பற்றி நாம் பேசுவது? மருந்துக்கு ஒரு குழந்தை இருக்கிறான். அவனை ஏன் நீங்கள் இப்படிக் கரிக்கிறீர்கள்? கேட்டவர்கள் சிரிக்கவல்லவா செய்வார்கள்?

ஆதிசேஷ:- எந்தப்பயலடி என்னைப் பார்த்துச் சிரிப்பான்? அதற்கொரு ஆண்பிள்ளை பிறந்தா இருக்கிறான்? நீ பெற்றெடுத்



திருக்கிறாயே? அணிப்பிள்ளை! தென்னம்பிள்ளை! அந்தக் கழுதையைப் பார்த்துத்தான் ஊரெல்லாம் சிரிக்கிறது!

அலமேலு:- நம்மள் வீட்டு விஷயத்தைப்பற்றி ஊரிலுள்ள பேர்களுக்கு என்ன கவலை? சோம்பேறிச் சனியன்களின் பேச்சைக் கேட்டு நீங்களும் கெட்டுவிட்டீர்களா?

ஆதிசேஷ:- என்னடி சொன்னாய்? நானடி கெட்டுப்போயுட்டேன்? உன்மகன் வாழுகிறானோடி?

அலமேலு:- என் பிள்ளை உங்களுடைய மகனில்லையா? கோபம் வந்துவிட்டால் மனிதருக்கு இப்படி புத்தி தடுமாறவே கூடாது?

ஆதிசேஷ:- எனக்காடி புத்தி தடுமாறியிருக்கிறது? உன் மகன் கிறுக்குப்பிடித்து அலைகிறான். ஊரிலுள்ளவர்கள் பைத்தியக்காரனைக் கண்டு பரிகசிக்காமலா இருப்பார்கள்? ஊர்வாயை மூட உலைமூடி உண்டோ?

அலமேலு:- மதனசுந்தரன் அப்படி என்ன செய்துவிட்டான்? யார் குடியை அவன் கெடுத்துவிட்டான்? குழந்தை வெகு அழகாகப் படிக்கிறான். பார்வைக்கு மன்மதனைப்போலிருக்கிறான். அவன் பேசினாலும், பாடினாலும் கேட்டுக்கொண்டே இருக்கவேண்டும். அனாவசியமாக ஒருவர் விஷயத்திற்கு அவன் போகிறதும் கிடையாது. ஊரிலுள்ள சோம்பேறிகளெல்லாரும் வம்பு அளக்கிறார்களே? மதனன் எவரைப்பற்றியாவது பேசுவதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? அவனுடைய படிப்பையும், அழகையும் கண்டு பொறாமை கொண்ட மூதேவிகள் உளறுகிறதுகள்.

ஆதிசேஷ:- உன் மகனுடைய யோக்கியதை தெரியுமடி! அவன் இன்னொருத்தருடைய குடியைக்கெடுக்கவா வேண்டும்? நம்மள் குடியைஅவன் கெடுத்துவிட்டானடி! எனக்குத் தலையை வெளியில் நீட்ட வெட்கமாயிருக்கிறது.

அலமேலு:- அப்படி என்ன நடந்துவிட்டது?

ஆதிசேஷ:- அவன் தலையும், நடையும் எவ்வளவு அழகாயிருக்கு?

அலமேலு:- அம்மாடி! இதுதானா? இந்தக்காலத்துப்பிள்ளை

கள் தலையை "கிராப்" அடித்துக்கொள்ளவில்லையா? தலைஉரோமம் எப்படி இருந்தாலென்ன?

ஆதிசேஷ:- வண்ணான் கொண்டுவந்த வெள்ளை வேஷ்டிகளை அவன் தண்ணீரில் நனைத்து உடுத்துகிறானா? நித்தியம் என்னடி க்ஷவரம் வேண்டியிருக்கிறது? சந்தியாவந்தனம் கிடையாது! கோயில் குளத்திற்குப் போகிறதில்லை! பெரியவர்களை மதிக்கிறது கிடையாது!

அலமேலு:- போதும்! போதும்! அடுக்காதேயுங்கள்! என்னுடைய அண்ணாமகன் டாக்டர் வேலைக்குப் படிக்கிறான். அவனும் இப்படித்தானிருக்கிறான். பட்டண வாசத்திலுள்ளவர்கள் அவ்வாறுதானிப்பார்கள். இதுக்காக அருமைக் குழந்தையை வெறுக்கலாமா?

ஆதிசேஷ:- அடி! அசடே! இவ்வளவுடன் அவன் நிற்கவில்லையடி! அந்தச் சமாசாரம் உனக்குத் தெரியாதுபோலிருக்கிறது! அவன் சுத்த அயோக்கியனாகிவிட்டான். எனக்கு அவ்விஷயத்தைச் சொல்லவே வெட்கமாயிருக்கிறது. ஹீன சாதியில் பிறந்த ஒரு பெண்ணோடு அவன் நெருங்கிப் பழகுகிறான்.

அலமேலு:- ஹா! என்ன சொன்னீர்கள்?

ஆதிசேஷ:- உன்மகன் இருக்கிறானே? அவன் கெட்டு நொறுங்கிப் போய்விட்டான்.

அலமேலு:- மதனனா ஒழுக்கத்தை இழந்துவிட்டான்? இதை நான் நம்பவே மாட்டேன். அவன் இரதிதேவியைக்கூட நிமிர்ந்து பார்க்கமாட்டானே? அவனுடைய குணம் எனக்கல்லவா தெரியும்?

ஆதிசேஷ:- ஆமாமடி! இரதிதேவியை அவன் கண்ணெடுத்துப்பார்க்கமாட்டான்! சேரியில் பிறந்த பெண்ணைத்தான்கட்டிக்கொண்டு அழுவான்!

இதைக் கேட்டதும் அலர்மேல் மங்கைக்கு ஆச்சரியமுண்டாயிற்று. மதனன் காந்தாமணியுடன் நட்புக் கொண்டிருப்பதையும், அந்நட்பு காதலாக முதிர்ந்துவிட்டதையும் அவள் அறியமாட்டாள். தன் புதல்வனைப்பற்றி எவரோ கட்டிவிட்ட கதையை ஆதிசேஷய்யர் நம்பியிருக்கவேண்டுமென்றே அலமேலு நினைத்தாள். "நாதா! நீங்கள் சொல்லுவது எனக்கு விளங்கவில்லை. மதனன் தகாத காரியத்தைச் செய்யமாட்டானே" என்றாள் அலமேலு.



ஆதிசேஷ:- நீதான் மதனனை மெச்சிக்கொள்ளவேண்டும். நம்முடைய பண்ணைக்கார கறுப்பனுக்குக் கருப்பாயி என்றொரு பெண்ணிருக்கிறாள். அவளுக்கு வயது 18 இருக்கும். பார்வைக்கு அவள் லெக்ஷணமாயிருக்கிறாள். உன் மகன் மதனன் அவளுடன் தினந்தோறும் உலாத்தினானாம். கையோடு கைகொருத்துக் கொண்டு அவர்கள் நதிக்கரையில் நடந்தார்களாம். அந்தப் பெண்ணுக்கு எழுதவும் படிக்கவும் மதனன் சொல்லிக்கொடுத்திருக்கிறானாம். அவளையே கல்யாணம் செய்துகொள்ளப் போவதாயும் அவன் சொல்லுகிறானாம். இந்த ஊரெல்லாம்இதைப் பற்றிதான் பேசுகிறது. கருப்பாயியை அவன் காந்தாமணி என்று பெயர் கொண்டு அழைக்கிறானாம். நமக்கு லெட்டர் வரவில்லையென்று அழுகிறாயே? உன் மகன், கருப்பாயிக்கு நாள் தவறினாலும் கடிதம் எழுதுவது தவறுகிறது கிடையாதாம்! மதனனின் சங்கதி எப்படியிருக்கிறதென்று பார்த்தாயா?

ஆதிசேஷய்யர் சொன்ன இச்செய்தி அலுமேலுவின் மனத்தை மிகவும் புண்படுத்திற்று. அவள் அப்படியே சித்தப்பிரமைவந்தவளைப்போன்றிருந்தாள். தீண்டத் தகாத சாதியில் வந்த ஒரு பெண்ணையா மதனன் விவாகம் செய்து கொள்ளப் போகிறானென்று தனக்குள்ளேயே வினவிக்கொண்டு அலமேலு ஏங்கினாள். சிறிது நேரம் சிந்தித்த அவள் கவலை தேங்கிய முகத்துடன் தன் கணவனை நோக்கினாள். "நாதா! இவ்வளவிற்கும் காரணம் நீங்கள் தான். உங்களால் தான் மதனசுந்தரன் கெட்டுப் போகிறான்" என்றாள் அலமேலு.

ஆதிசேஷ:- என்னடி! நானா அவனைக் கெடுத்துவிட்டேன்? நானடி அவனை கருப்பாயியைக் கட்டிக்கொண்டு அழும்படி புத்தி சொன்னேன்? தடிபோல வளர்ந்திருக்கிறான். வயது 22 ஆகிவிட்டது. படித்திருக்கானாம்! இங்கிலீஷ் படிப்பின் பலன் கைமேல் கிடைத்துவிட்டது! சாதியே கிடையாது என்று காந்தி என்கிறவன் ஊரைக் கேலிபண்ணிக் கொண்டு வருகிறானல்லவா? அவன் கூட உன்மகனும் சேர்ந்து கொண்டிருக்கிறான். இதற்கு நான் என்ன செய்வேன்? சொன்னால் கேட்கிறானா? என்னை

அவன் லெக்ஷியம் செய்கிறதே கிடையாது. எனக்கு ஒரு பிள்ளை இருக்கிறதாகவே நான் நினைக்கவில்லையடி!

அலமேலு:—நாதா! நாமே நம்முடையகுழந்தையை வெறுக்கலாமா? அவன் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொண்டாலும் நாம் அவனுக்குப் புத்தி சொல்லி திருத்த வேண்டும். நானும் உங்களிடம் ஆறு வருஷகாலமாக மாரடித்துக்கொண்டே வருகிறேன். நான் சொல்லுவதை நீங்கள் கேட்டீர்களா? கேட்டிருந்தால் இப்போது இப்படி வருமா?

ஆதிசேஷ:- நான் என்னடி கேட்கவில்லை?

அலமேலு:- மதனனுக்குக் காலாகாலத்தில் கல்யாணம் செய்து வைத்திருந்தால் அவன் இவ்வாறெல்லாம் திரியமாட்டான். என் வார்த்தையைத்தான் நீங்கள் காதில் போட்டுக்கொள்வதே கிடையாதே? நான் என்னவோ ஒரு கூலிக்காரி என்றுதானே நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?

ஆதிசேஷ:- கல்யாணம்! கல்லெடுப்பு! கல்யாணமாகாவிட்டால் இப்படித்தான் சேராத சாதியுடன் சேரவேண்டுமோ?

அலமேலு:- உங்களுக்குப் பிறந்த குழந்தை எப்படியிருக்கும்? நீங்கள் என்னைக் கல்யாணம் செய்துகொண்ட பிறகும்கூட வண்டிக்காரன் மகள் சடலியையும், வேலைக்காரி மாடத்தியையும் கட்டிக்கொண்டு அழவில்லையா? எல்லாருடைய யோக்கியதையும் எனக்குத் தெரியுமே! மற்றவர்களைவிட மதனன் அதிகமாகக் கெட்டுவிடவில்லை.

ஆதிசேஷ:— ஏண்டி! உனக்கு நாக்கு ரெம்ப நீளமாகிவிட்டதுபோலிருக்கே?

அலமேலு:— உள்ளதைச்சொன்னால் எதற்காகக் கோபம் வருகிறது? இன்னும்தான் என்ன குடிமுழுகிவிட்டது? நல்லபெண்ணாகப்பார்த்து கல்யாணத்தை நிச்சயம்செய்யுங்கள். இந்தமாதத்திலேயே முகூர்த்தம் வைக்கவேண்டும். ரூபவானபெண்ணாயிருக்கவேண்டும். கல்யாணத்தைச்செய்துவைத்துவிட்டால் மதனசுந்தரன் தங்கக்கம்பியாகிவிடுவான்.

ஆதிசேஷ:— இலுப்பூர் பண்ணையார் பெண்ணைப்பேசினேன். ஆலந்தூர் அப்பாவய்யர் மகளைப் பேசிமுடித்தேன்



தர்மபுரம் பாங்கர் மகளைப் பேசிமுடித்தேன். அந்தப்பெண்களெல்லாம் எனக்கு வேண்டாமென்று உன்மகன் சாதித்துவிட்டானே! நான் என்ன செய்வேன்?

அலமேலு:— ஆமாம்! நீங்கள் பெண்பார்த்த அழகு நன்றாயிருக்கிறது. ஒருபெண்ணுக்குக் கால்நொண்டி! இன்னொருத்திக்கு மூக்கையே காணவில்லை! வேறொருபெண் கிழக்கேபார்த்தால் தெற்கே பார்ப்பதைப்போலிருக்கிறது! அதுகளை மதனன் கட்டிக்கொள்வானா? பணக்காரர்வீட்டுப்பெண்ணைத்தான் மதனன் கல்யாணம் செய்துகொள்ளவேண்டுமென்று நீங்கள் சாதிக்கிறீர்கள். இனிமேலாவது இந்தப்பிடிவாதத்தை விட்டுவிட்டு ஏழையாயிருந்தாலும் நல்லகுடும்பத்தில் அழகானபெண்ணைப் பேசுங்கள். பெண்களா ஊரில் இல்லை? அதிலும் நமது மதனனுக்குப் பெண் கொடுக்க நான்முந்தி, நீ முந்தி என்று போட்டிபோடுவார்கள். நாளைக்கே எப்படியாவது ஒருபெண்பேசி முடிவுகட்டிவிடுங்கள். அநியாயமாக நமது குடும்பத்திற்குக் கேடுவந்துவிடாமலிருக்க வேண்டும்.

ஆதிசேஷ:— சரி! சரி! நாளை பொழுது விடியட்டும். இப்படியா எனக்கு ஒரு பிள்ளை பிறக்கவேண்டும்? அந்தப்பயல் கருப்பனுக்கும், அவனுடைய மகள் கருப்பாயிக்கும் நாளைக்கு நான் நல்லபுத்தி வருத்துகிறேன். அந்தச்சிறுமிக்கு என்ன துணிவு?

அலமேலு:— அவர்களை ஏன் கோபிக்கிறீர்கள்? ஐயோ! பாவம்! அதுகள் பரமஏழைகள்.

ஆதிசேஷ:— எனக்கு எல்லாம்தெரியும். நீ எனக்குப் புத்திமதி சொல்லவேண்டாம். போ உள்ளே!

அலர்மேல் மங்கை இவ்வளவுடன் ஆதிசேஷய்யருடன் சம்பாஷிப்பதை நிறுத்திக்கொண்டுவிட்டாள். அவளுக்கு மனநிம்மதிமட்டும் இல்லை. ஆதிசேஷய்யரும் பொழுதுபுலரும் நேரத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். கதிரவன் குணதிசையில் உதயமானான். பண்ணையார் ஆதிசேஷய்யர் அவ்வூர்வாசியான கிருஷ்ணய்யரிடம்சென்று அவருடைய மகளைத்தன்மகன்மதனனுக்காகக் கேட்டார். விசாலமான விளைநிலங்களுக்கு அதிபதியாக வரக்கூடிய ஒரு யுவனுக்குத் தன்பெண்ணைக் கட்டிக்கொடுக்க எவர்தான் ஆசைப்படமாட்டார்கள்? கிருஷ்ணய்யர் பல்லைக்காட்டினார்.

"பண்ணையார்வாள்! எல்லாம் உங்களுடைய இஷ்டம். என் கண்மணி கமலத்தை மதனனுக்குக்கொடுக்க நான் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்றார் கிருஷ்ணய்யர். உடனே சோதிடர் வந்தார். பதினைந்துநாட்களுக்குப்பிறகு நல்ல முகூர்த்தமொன்றை நிச்சயித்துவிட்டார்கள். மதனனுக்குக் கல்யாணத்தைப் பேசிமுடித்த பண்ணையார் கடுகடுத்தமுகத்துடன் நேரடியாகச்சேரியைநோக்கி நடந்தார். அங்கிருந்த ஏழைஜனங்கள் பண்ணையாரைக்கண்டவுடன் நடுநடுங்கினார்கள். கும்பிட்டுவிழுந்தார்கள். அவர்களின் நடுவே கறுப்பன் நின்றுகொண்டிருந்தான். செல்விகாந்தாமணியோ சற்று அப்பால் ஒரு மரத்தடியில்நின்று மதனசுந்தரனிடமிருந்து அன்றுவந்த கடிதத்தைப்படித்துக்கொண்டிருந்தாள். அக்கடிதத்தில் மதனன் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தான்:—

பச்சையப்பன்கல்லூரி,
சென்னை.

கண்மணி காந்தா!

நான் சௌக்கியமாயிருக்கிறேன். ஆனால் எனக்கு மனநிம்மதியில்லை. நான் அங்கிருந்து புறப்படும்பொழுது நீ என்னிடம் சொன்ன விஷயங்களை என்னால் மறக்கமுடியவில்லை. நமது ஊரிலுள்ள சாதித்திமிர்பிடித்தவர்கள் உன்னையும் உன் குடும்பத்தாரையும் நெருக்கி வதைப்பார்களோ என்ற பீதி என்னையறியாமலே எனக்கு ஏற்படுகிறது. படிப்பைவிட்டுவிட்டு ஊருக்குவந்துவிட்டாலென்ன? என்றுகூட எனக்குத்தோன்றுகிறது. காந்தாமணி! யார் என்ன பேசினாலும் சரி; நீ தைரியமாயிருக்கவேண்டும். பிரமாதமான காரியங்கள் ஏதாவது நடந்தால் எனக்கு உடனே அறிவித்துவிடு. கள்ளுக்குடிப்பதை சேரிவாசிகள் நிறுத்திவருகிறார்களா? அங்கே நிலைமை என்ன? இன்று உனக்கு ரிஜிஸ்டரில் "இந்தியப்பெண் இரத்தினங்கள்" என்ற ஒரு புஸ்தகம் அனுப்பியிருக்கிறேன். அதைப்படித்துப்பார். நீயும் ஒரு பெண் இரத்தினமாகத் திகழப்போகிறாயல்லவா? கண்மணி! உடனே—மறுதபாலிலேயே—பதில் எழுது. உன்னுடைய கடிதங்கள்தான் எனக்கு ஆறுதலையும், தேறுதலையும் அளித்துவருகின்றன.

அன்புள்ள, மதனன்.



மெய்யன்பு ததும்பும் இக்கடிதத்தைப்படித்த காந்தாமணி உடல் பூரிப்படைந்தாள். அதனை பலமுறை ஆர்வத்துடன் முத்தமிட்டாள். "என்னருமைக்காதலன்! மதனன்! நானே பாக்கியசாலி!" என்று சிறுமி தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள். இன்பக்கடலில் அவள் நீந்திக்கொண்டிருந்தாள். அந்நேரத்தில் பண்ணை ஆதிசேஷய்யர் கோபத்துடன் உரக்கப்பேசும் சப்தம் காந்தாவின் செவிக்கு எட்டியது. எட்டியதும் அவள் திடுக்கிட்டு அத்திசையை நோக்கினாள். பண்ணையாரின் முகம் சிறிச்சிவந்திருந்தது. அவருடைய கண்கள் கோபாக்கினியைக் கக்கின. பண்ணையாரின் நிலையையும், அவர் தன்னுடைய தந்தையை நோக்கிச் சீறுவதையும்கண்ட காந்தாமணிக்கு விஷயம்விளங்கிவிட்டது. தன்னையும் ஆதிசேஷய்யர் பார்த்தால் அவருக்கு ஆத்திரம் அதிகரிக்குமென்றெண்ணி காந்தாமணி மெதுவாக அங்கிருந்து அப்பாற்பட்டுவிட்டாள். அடங்காச்சினத்துடன் பண்ணையார் கறுப்பனைப்பார்த்துப் பேசலானார்.

ஆதிசேஷய்யர்:- அடே! கறுப்பா! உனக்கு இவ்வளவு தைரியம் வந்துவிட்டதா? உன்னை நான் பலமுறை எச்சரிக்கைசெய்தும் உனக்குப் புத்திவரவில்லைபோலிருக்கிறதே?

கருப்பன்:- எஜமான்! அடியேன் நாய்க்குட்டி ஒரு தவறுதலையும் செய்யவில்லையே?

ஆதிசேஷ:- என்னடா! பதிலாசொல்லுகிறாய்? அயோக்கியப்பயலே! உன்மகள் ஏண்டா இப்படி எடுபட்டுஅலைகிறாள்? அவளுக்கு என்னடா படிப்பு வேண்டியிருக்கிறது? நாற்றுப்பிடுங்கவும், களைபிடுங்கவும், நாற்றுநடவும் அவளுக்கு நீ கற்றுக்கொடுக்கவேண்டியதாயிருக்க, அவளைப் படிக்கவாசொல்லுகிறாய்? ஏண்டா? தினந்தோறும் உன்மகள் சேரியில் பிரசங்கம்செய்கிறாளாமே? நீங்களெல்லாம் கள்ளுக்குடிக்கக்கூடாதென்று அவள் உபதேசம்செய்கிறாளாமே? அவ்வளவு துடுக்கு அவளுக்கு வந்துவிட்டதாடா? இங்கே கேள்விகேட்கிறவர்கள் இல்லையென்று நீ நினைத்துவிட்டாய்? அக்கிரகாரத்திலுள்ள பிள்ளைகள் இரண்டொருவருடன் உன்மகள் கருப்பாயி சிநேகமாயிருக்கிறாளாமே? உன்மகளை ஏண்டா இப்படி ஊர்மேயவிட்டிருக்கிறாய்? இன்று நான் கடைசியாக உன்னை எச்சரிக்கைசெய்கிறேன். இங்கு பிர

சங்கமொன்றும் நடக்கக்கூடாது. உன்மகள் நாளைமுதற்கொண்டு வயிலில் வேலைசெய்யவேண்டும். கருப்பாயியை நான் என்மகனோடாவது, வேறுயாருடனாவது கண்டேனோ உன் உயிரைவாங்கிவிடுவேன். ஜாக்கிரதை,

கறுப்பன்:-ஐயோ! எஜமான்! நான் பரமஏழை. என்னை நீங்கள் கெடுத்துவிடக்கூடாது.

ஆதிசேஷ:-என்னடா ஏழை? ஏழைக்குத்தகுந்தபடியா நீயும் உன்மகளும் நடந்துகொள்கிறீர்கள்? உன்கருப்பாயியைப்போல இந்தச்சேரியில் யாராவது மானமில்லாமல் நடந்துகொள்கிறாளா? போடா! அவளை முதலில் அடக்கிவிடு. இல்லாவிட்டால் உனக்கு இந்த ஊரில் பிழைப்புஇல்லை.

இவ்வாறு பேசிவிட்டு ஆதிசேஷய்யர் வீட்டிற்குத் திரும்பிவிட்டார். பாவம்! கறுப்பன் என்னசெய்வான்? அவனுக்குத்திகிலுண்டாகிவிட்டது. வயிற்றுப்பிழைப்பில் மண்விழுந்துவிடுமேயென்று அவன் ஏங்கினான். சேரிவாசிகளோ படிப்பில்லாத மூடர்கள் அடிமைப்புத்தி தடித்தவர்கள். அக்கிரகாரத்தில் வசிக்கும் பிரமணர்கள் யாவரும் தெய்வீகப் பிறவிகளென்று அவர்கள் நம்பியிருந்தார்கள். எல்லோரும் கறுப்பனைப் பரிகாசம்செய்தார்கள். செல்வி காந்தாமணியை இகழ்ச்சியாகப் பேசினார்கள். 'அடே! கருப்பாயி அக்கிரகாரத்து ஆண்பிள்ளைகளுடன் ஷோக் பண்ணுகிறாளாம்." என்றான் ஒருவன். "கறுப்பனையும், அவன் குடும்பத்தையும் சாதியைவிட்டு நீக்கிவிடவேண்டும்." என்றான் இன்னொருவன். "ஆம்! ஆம்! நான்கூட கருப்பாயியும், நம்மள் பண்ணை சின்ன எஜமானும் ஆற்றோரத்தில் தனிமையாயிருந்ததைப் பார்த்திருக்கிறேன். குட்டி கருப்பாயி ஷோக்காயிருக்கிறதால் மேல்சாதி ஆசாமிகள் கைவைக்கிறார்கள். கருப்பாயி எடுபட்டுப்போன விபசாரியாகிவிட்டாள்" என்றான் மற்றொருவன். கறுப்பன் படிப்பில்லாத பரமஏழையென்றாலும், மானஸ்தன். கருப்பாயி ஒழுக்கங்கெட்டவளாகிவிட்டாளென்று பலர் சொல்லக்கேள்விப்பட்ட கறுப்பனுக்கு துக்கம் சகிக்கமுடியவில்லை. அவனுடைய நெஞ்சம் பதைபதைத்தது. வெட்கத்தினால் அவனதுஉடல் குன்றிற்று; கண்களில் நீர் பெருகலாயிற்று. இழிந்த வசைச்சொற்களைச் சகிக்காதவனாகக் கறுப்பன் தனது குடிசை



யை நோக்கி விரைந்துநடந்தான். சேரியெங்கும், அவளையும் காந்தாவையும் பற்றியே எல்லோரும் பேசத்தலைப்பட்டார்கள். ஒருவராவது காந்தாவிடம் கருணைகாட்டவில்லை. ஒதுக்கப்பட்டோர் வதிந்த சேரியில் செல்வி காந்தாமணி தாழ்த்தப்பட்டவளென்று கருதப்படலானாள்.

வீடுசென்ற காந்தா துக்கத்தோடும், நடுக்கத்துடனும் தன் தந்தையின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். கறுப்பன் ஆத்திரத்துடன் பேசுவானென்பது அவளுக்குத் தெரியும். புலிக்கூட்டத்தின் மத்தியில் அகப்பட்டுக்கொண்ட மான் குட்டியைப்போல அவள் நடுங்கினாள். மதனசுந்தரன் சொன்ன வார்த்தைகள் அவளுடைய நினைவிற்கு வந்தன. என்றாலும் அவளுக்குச் சந்தோஷமில்லை; நிம்மதியில்லை. தந்தையை எவ்வாறு சமாதானப்படுத்துவது என்று அவள் தயங்கிக்கொண்டிருக்கும் நேரத்தில், கறுப்பன் "அடி! பாதகி! என் குடியைக் கெடுக்க வந்த காதகி" என்று அலறிக்கொண்டே வந்துசேர்ந்தான். காந்தாமணி ஒன்றுமே சொல்லவில்லை. அவள் ஒரு மூலையிலுட்கார்ந்துகொண்டிருந்தாள். அவளுடைய தாய் சமயலறையில் சுயம் பாகம் செய்துகொண்டிருந்தாள். கறுப்பன் ஏதேதோ சொல்லிக்கொண்டு வருவதைக் கேட்ட அவன் மனைவி குப்பி கலவரமடைந்து, "யாரைப் பாதகி, காதகி என்கிறாய்?" என்று வினவியவண்ணம் சமையலறையிலிருந்து வெளியே வந்தாள். கறுப்பனுக்குக் கடுஞ்சினம் மண்டி எழுந்தது. "அடி! நம்முடைய குடி கெட்டுவிட்டது! நமது பிழைப்பிற்கு ஆபத்து வந்துவிட்டது!" என்று கறுப்பன் அலறினான்.

குப்பி:- என்ன? என்ன? எஜமான் நம்மைப் போகும்படி சொல்லிவிட்டாரா? அப்படி நாம் என்ன குற்றத்தைச் செய்துவிட்டோம்?

கறுப்பன்:- அடி! குப்பி! அவளை எங்கே? அந்த எடுபட்ட தட்டுவாணியை எங்கே?

இதைக் கேட்டதும் சிறுமி காந்தாவுக்கு நெஞ்சம் உடைந்துவிட்டது. தன்னை எவர் எதைச் சொன்னாலும் அவள் அதைச் சகித்துக்கொள்ளுவாள். தனது ஒழுக்கத்தைத் தன் பிதா குறைகூறத் தொடங்கினால் அவளது மனம் சகிக்குமோ?

காந்தா பொட்டென எழுந்தாள். "அப்பா! என்ன சொன்னீர்கள்?" என்று ஆத்திரத்தோடும் துயரத்தோடும் வினவினாள்.

கறுப்பன்:- என்னடி அதட்டவா செய்கிறாய்? அடி! மூதேவி! என் குடியைக் கெடுக்க நீ தலையெடுத்துவிட்டாயே? என் வயிறு எரிகிறதேடி. நான் 30 வருடகாலமாக இங்கே மானமாகவும், மரியாதையாகவும் காலக்ஷேபம் செய்துவருகிறேன். அதில் நீ மண்ணைப்போடுகிறாயே? ஊரெல்லாம் என்னைப் பார்த்துச்சிரிக்கிறதேடி!

காந்தா:- அப்பா! எவரோ எதையோ சொல்லிவிட்டார்களென்று இப்படி நீங்கள் பேசுவது சரியல்ல.

கறுப்பன்:- நிறுத்தடி உன்னுடைய பிரசங்கத்தை. படிக்கிறாளாம்! பிரசங்கம் செய்கிறாளாம்! உனக்கு என்னடி படிப்பு வேண்டியிருக்கிறது? நமது சாதியில் யாரடி படிக்கிறார்கள்? நாத்து நடவேணும், பிடுங்கவேணும், மீன் பிடிக்கவேண்டும், வரப்பு வெட்டவேண்டும் இதுகள்தானடி நம்மள் பரம்பரை உத்தியோகம். என்னவோ நீ எனக்கு ஒரு மகளாயிருக்கிறாயே என்று கொஞ்சம் இடங்கொடுத்தேன். வந்தது வினை!

காந்தா:- அப்பா! படிப்பது பிசகா? இன்ன சாதியார்தான் படிக்கவேண்டும்; இன்னின்ன சாதியார் படிக்கக்கூடாதென்று சட்டம் உண்டா? அப்படியொரு சட்டம் சர்க்காரால் செய்யப்பட்டிருக்கிறதா?

கறுப்பன்:- அடி! போதுமடி உன் விவகாரம்! எனக்கு இதுகளெல்லாம் வேண்டாம். நீ படித்துப் படித்து கண்ட பலன் போதுமடி. அடி! சண்டாளி! அக்கிரகாரத்துப் பிள்ளைகளுடன் உனக்கு என்னடி வேலை? நம்முடைய சின்ன எஜமானோடு நீ சரசம் செய்கிறாயாமே? ஊரெல்லாம் என்மேல் காறி உமிழ்கிறார்களே? இதுதானா படிப்பு? கல்யாணமாவதற்குமுன் ஆண்பிள்ளைகளுடன் நீ போகலாமா? அடி! சாதிகெட்ட சிறுக்கி!

காந்தா:- அப்பா! என்ன சொன்னீர்கள்? எனது ஒழுக்கத்தைக் குறைவாகப் பேசினவன் யார்? அவனுடைய நாவு அழுகிவிடும்.

கறுப்பன்:- என்னடி அதட்டுகிறாய்? உன்னுடைய சாயம் வெளுத்துவிட்டதடி. உன்னாலே என் பிழைப்புப் போய்விடும்



போலிருக்கிறது. குடும்பத்திற்கும் கெட்டபெயர் வந்துவிட்டது. பண்ணை எஜமான் வந்து மிகவும் மானக்கேடாகப் பேசிவிட்டுப் போயிருக்கிறார். இனிமேல் நீ புஸ்தகத்தை எடுத்து படிக்கவே கூடாது. சின்ன எஜமானுடன் நீ பேசுவதைக் கண்டால் உன்னை நான் கொன்றுவிடுவேன். நாளைமுதற்கொண்டு நீ எங்களுடன் வயலுக்கு வந்து எல்லோரையும்போல் வேலைபார்க்கவேண்டும். தெரிந்ததா?

காந்தா:- அப்பா நீங்கள் ஒருதலைச் சார்பாகவே பேசுகிறீர்களே?

கறுப்பன்:- போதும்! போதும்! பேச்சை நிறுத்து. பண்ணைக்கு நாம் யாவும் அடிமைகள். எஜமான் சொல்லுகிறபடிதான் நடந்துகொள்ளவேண்டும். நாளைக்கு அவர் நம்மை ஊரைவிட்டே துரத்திவிட்டால் என்னடி நடக்கும்? நமக்குப் புகலிடம் எங்கேயடி இருக்கிறது? மேல்சாதிக்காரர்களெல்லாம் நம்மைக் கொன்றுபோடுவார்கள்.

எழுத்துவாசனையில்லாத குப்பியும் கறுப்பனோடு சேர்ந்துகொண்டாள். வீட்டைவிட்டு வெளியில் காலெடுத்துவைக்கக் கூடாதென்று கறுப்பன் காந்தாவுக்கு உத்தரவளித்தான். அவள் வைத்திருந்த அருமையான புத்தகங்களைக் கோபத்தில் கறுப்பன் அனலுக்கு இரையாக்கினான். கள்ளுக்குடிக்கக் கூடாதென்று பிரசங்கம் செய்வதைக் கண்டிப்பாக மறந்துவிடவேண்டுமென்று கறுப்பன் காந்தாமணிக்குக் கட்டளை பிறப்பித்தான். சாத்வீகமாகக் கறுப்பனுக்குச் சமாதானம் சொல்ல காந்தாமணி முயன்றபொழுது கறுப்பன் ஆத்திரத்தில் அவளை அடித்தான். என்ன செய்வாள் சிறுமி காந்தாமணி! அவளது உள்ளம் கொதித்தது. கண்கள் தாரைதாரையாக நீரை வடியவிட்டன. சிறிது நேரத்திற்கு முன்பு மதனசுந்தரனுடைய கடிதத்தைக் கண்டு மலர்ந்திருந்த அவளது முகம் வாடிவிட்டது. அவள் பறிகொடுத்தவளைப்போல ஒரு மூலையில் அமர்ந்தாள். "ஐயோ! இப்படியெல்லாம் நடக்குமென்று எனக்குத் தெரியும். இதென்ன வாழ்க்கை! இதென்ன ஜென்மம்! அறக்கடவுளே! சமூகக் கொடுமைகளுக்கு ஒரு எல்லை கிடையாதா? நான் என்ன பாவத்தைச் செய்தேன்? யாருக்கு என்ன துரோகத்தை நினைத்தேன்? ஒன்றுமில்லையே? நான் மேல் சாதியாரை இகழவில்லை. கண்டிக்க

வில்லை. அவர்களுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்பவுமில்லை. என்னினத்தில் பிறந்த சகோதர சகோதரிகளின் வாழ்க்கையைச் சீர்திருத்தத்தானே நான் முயன்றேன்? எனது சகோதரர்கள் குடிக்கிறார்கள். கேவலமாக வாழ்கிறார்கள். தகாத உணவுகளைப் புசிக்கிறார்கள். படிப்பின்றி அஞ்ஞான அந்தகாரத்தில் மூழ்கிக் கிடக்கிறார்கள். இக்காரணங்களினால் அவர்கள் மிருகங்களிலும் தாழ்வாக நடத்தப்படுகிறார்கள்.

கேவலமான, இழிந்த இந்நிலைமைக்குப் பரிகாரத்தை நான் தேட முயன்றேன். கட்குடியை ஒழியுங்கள்! கல்வியறிவைப் பெற்றுக்கொள்ளுங்கள்! எளியவர்களென்றாலும் கண்ணியமாகவும், சுத்தமாகவும் வாழ்க்கையை நடத்துங்கள்! என்று நான் எனது இனத்தாருக்கு நற்புத்திகளைச் சொன்னேன். இது பிசகா? இது தண்டிக்கத்தக்க குற்றமா? அப்பப்பா! அடா! சண்டாள உலகமே! விபசாரிப் பட்டத்தையும் சமூகக் கட்டுப்பாடு என்ற பிசாசு எனக்குச் சூட்டிவிட்டதே! ஐயோ! மதனா! நான் அன்றைக்கே உன்னிடம் சொன்னேனே? நான் உனக்கு அருகதையுள்ளவளல்லவென்று கூறினேனே? நம்மிருவரது சேர்க்கையை ஹிந்து சமூகம் சகிக்காதென்று அறிவித்தேனே? நீ என் சொற்களை மதித்தாயில்லை. பரிசுத்தவானும், தர்ம சொரூபியும், குணக்குன்றும், தைரியசாலியுமான நீ எனக்கு எவ்வளவோ தேறுதல்களைச் சொன்னாய்! தீண்டாமைப் பேய் என்னைச் சித்திரவதை செய்கிறது. உனக்கு நான் என்ன எழுதப்போகிறேன்? இங்கு நடப்பவைகளையெல்லாம் உனக்கு நான் உள்ளபடி வரைந்தால் உன் மனம் வெதும்பும். நீ ஆத்திரமடைவாய். உன் தந்தையாருடன் பகைத்துக்கொள்வாய். என்னொருத்தியின் காரணமாக உனது எதிர்காலம் கெட்டுப்போய்விடாமலிருக்கவேண்டும். என்றாலும் உன்னிடமிருந்து உண்மையை ஒளிக்க எனக்குத் துணிவில்லை. ஏ! பாரததேவி! இதென்ன சோதனை! இதென்ன கொடுமை! உனது வயிற்றில் நானும் பிறக்கவில்லையா? நானும் என் இனத்தாரும் மனிதப் பிறவி எடுக்கவில்லையா? எங்களுக்கு மட்டும் ஒருவிதமான சுதந்திரமும் கிடையாதா?" என்றெல்லாம் செல்வி காந்தாமணி தனக்குள்ளேயே நினைந்து நினைந்து வருந்தினாள். கீழ்க் கண்ட கடிதத்தை மதனனுக்கு அவள் எழுதி அனுப்பினாள்.



ஆதித்தனூர்.

என் உயிரே,

உன்னுடைய அருமையான கடிதம் கிடைத்தது. காதல! நான் உனக்கு இங்குள்ள நிலைமையை எழுத என் மனம் கூசுகிறது. இங்கே பெரிய பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. எனக்கு வாய்ப் பூட்டிடப்பட்டிருக்கிறது; தடையுத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. வசைமொழிகளுக்குக் குறைவில்லை. செயலற்றவளாக நான் வீட்டில் அடைக்கப்பட்டிருக்கிறேன். ஒடுக்கப்பட்ட சாதியில் பிறந்தது என் குற்றமா? இல்லையே? என்றாலும் சமூகம் என்னைத் தண்டிக்கிறது! அத்தண்டனையை நான் அனுபவிக்கிறேன்.

என்பொருட்டு நீ வருந்தாதே. படிப்பை முடித்துக்கொண்டு வருவாயாக. சுதந்திரச் செல்வனும், அறத்தின் சொரூபமுமான உன்னை ஸ்ரீபாரத தேவி காப்பாற்றுவாளாக.

உனது பிரியை,
காந்தாமணி.

குறிப்பு:— நீ கொடுத்த புத்தகங்களையெல்லாம் என் தந்தையார் நெருப்புக்கு இரையாக்கிவிட்டார். ஒடுக்கப்பட்டவருக்குப் படிக்கும் உரிமையும் கிடையாதாம்! உனது தந்தையார் மிகுந்த கோபத்துடனிருக்கிறார்.

காந்தா.

இவ்வாறு கடிதத்தை எழுதி காந்தாமணி சென்னையிலிருந்து மதனசுந்தரனுக்கு அனுப்பிவைத்தாள்.

## அத்தியாயம் 3.

### பணம்பறித்த பேர்வழிகள்.

பண்ணையார் ஆதிசேஷய்யர் தன் மகன் மதனசுந்தரனுடைய கல்யாண ஏற்பாடுகளைச் செய்யலானார். பண்ணையார் குமாரனுக்கு ஆனி மாதம் 22ந்தேதி விவாகம் நடக்கப்போகிறதென்ற செய்தி சுற்றுப்புறங்களிலுள்ள கிராமங்களிலெல்லாம் காட்டுத் தீயைப்போல் பரவிவிட்டது. புரோகிதர்களும், பிராமணர்களும் நான்கு அல்லது ஐந்து தினங்களுக்கு வயிறு நிறைய அறுசுவை உண்டி கிடைக்குமென்று ஆனந்தப்பட்டார்கள். பண்ணையாரின் வேலைக்காரர்களும், அடிமைகளும் தமது சிறிய எஜமானனின் விவாக விஷயத்தையறிந்து சந்தோஷமடைந்தார்கள். சேரியெங்கும் இதே பேச்சாயிருந்தது. மதனனுக்காக நிச்சயிக்கப்பட்ட மணப் பெண் கமலத்திற்கு அநேக ஆபரணங்களைச் செய்ய பண்ணையார் ஆதிசேஷய்யர் பணத்தைத் தாராளமாகக் கொடுத்தார். கீர்த்திவாய்ந்த வாத்தியக்காரர்கள், நாட்டியக்காரிகள், பாகவதர்கள் முதலியோருக்குத் தந்திகள் பேசப்பட்டன. இருபத்தைந்தாயிரம் ரூபாய் செலவிட்டு வெகு ஆடம்பரமாக மதனனின் திருமணத்தை நடத்துவதென்று பண்ணையார் தீர்மானித்திருந்தார். மதனனின் தாய் அலர்மேல்மங்கை நல்லகாலம் வந்துவிட்டதென்று ஆனந்தபாஷ்பத்தைச் சொரிந்தாள். தெருவை அடைத்து கல்யாணப் பந்தலை அமைக்க ஏற்பாடாயிற்று. பண்ணையாராவது அலர்மேல் மங்கையாவது, மதனனின் மனப்பான்மையை அறிய வேண்டுமேயென்று நினைக்கவில்லை. ஆதிசேஷய்யருக்கு மட்டும் கொஞ்சம் சந்தேகமுண்டு. அவர் தன் மனைவியை நோக்கி, "உனக்கு இப்போதாவது திருப்தியாயிற்றா? மதனனுக்குக் கல்யாணம் செய்துவைக்காததால்தான் குடி முழுகி விட்டதென்று சொன்னாயே?" என்று வினவினார்.

அலமேலு:- இதை நாலு வருஷத்திற்கு முன்னமேயே நடத்தியிருந்தால் எவ்வளவு அழகாயிருக்கும்? ஊரிலுள்ள கழுதைகளெல்லாம் மதனனைப் பற்றி வம்பு பேச இடமிருக்குமா?

ஆதிசேஷ:- சரிதானடி! எப்போதும் பஞ்சப்பாட்டுப் பாடாதே. கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம்



செய்கிறோமே? மதனனுடைய சம்மதத்தைக் கேட்கவேண்டாமா?

அலமேலு:- அவனுடைய சம்மதத்தைக் கேட்கவா? அது எதற்கு? நம்முடைய சாதியில் அந்த வழக்கமே கிடையாதே? என்னை உங்களுக்காக உங்களுடைய தகப்பனார் நடவா நடை நடந்து பேசி முடித்தாரே? அப்போது உங்களிடம் யாராவது சம்மதம் கேட்டார்களா? மதனன் சின்னக் குழந்தை. அவனுக்கு என்ன தெரியும்? பெற்றவர்கள் பார்த்துத்தான் கல்யாணத்தை நிச்சயிப்பார்கள்.

ஆதிசேஷ:- அடி! பைத்தியமே! எல்லாப் பிள்ளைகளையும் போல் உன்மகன் இல்லையேடி?

அலமேலு:- உங்களுக்கு அவனை என்னவாவது சொல்லிக்கொண்டே இருந்தால்தான் திருப்தி. ஏன் இப்படிக்குழந்தையை கரிக்கிறீர்கள்? மதனனுக்கு இரண்டுகொம்பு முளைத்திருக்கிறதா?

ஆதிசேஷ:- நீ சுத்த அசடாயிருக்கிறாய்! மதனன் பெரிய தகப்பன்சாமியாயிருக்கிறான். இந்தக்காலத்துப்பிள்ளைகளுக்கு மரியாதைதெரியாது. நாளைக்கு அவன் வந்து கமலத்தை நான் கல்யாணம் செய்துகொள்ளமாட்டேனென்று சொன்னால் நாம் என்ன செய்வது? பண நஷ்டம் ஒன்று! ஊராரெல்லாம் நம்மை ஏளனஞ்செய்வார்கள்! மதனனுக்கு எழுதிக்கேட்போமா?

அலமேலு:- அவனிடம் என்ன கேட்பது? தலையிருக்க வால் ஆடுமோ? நாமாகப் பார்த்து அவனுக்குக் கெடுதலா செய்வோம்? அவன் அவ்வளவு முரடனா? மூடனா? கமலம் ஏழை என்றாலும் பார்க்க நன்றாயிருக்கிறாள். எலுமிச்சம்பழம் போல் நிறம். மூக்கும், விழியுமாக மகாலக்ஷ்மி மாதிரி இருக்கிறாள். நல்ல வளர்த்தி. வயதும் 16 ஆகிறது. தாலிகட்டி பத்து நாளானதும் சாந்தி முகூர்த்தத்தையும் நடத்திவிடலாம். இப்படியொரு பெண்ணை மதனன் இரண்டு 'சலாம்' போட்டுக் கொண்டு கட்டிக்கொள்ளுவான். எதற்கும் அவனை உடனே ஊருக்குவருமாறு லெட்டர் எழுதுங்கள். கல்யாணப் பத்திரிகையும் அனுப்புங்கள். அவன் தனது சிநேகிதர்களுக்கு அழைப்பு அனுப்பவேண்டுமல்லவா?

ஆதிசேஷ:- எனக்கானால் மதனனிடம் நம்பிக்கையில்லை. அவன் சுத்த அதிகப்பிரசங்கி. நாளைக்கு அவன்வந்து குழப்பிவிட்டானென்றால் உன்னை இலகுவாக விடமாட்டேன். ஜாக்கிரதை.

இவ்வாறு மதனசுந்தரனின் பெற்றோர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அப்பய்யா தீக்ஷிதர் வந்துசேர்ந்தார். "பண்ணையார் வாள்! பேஷ்! கல்யாணவிஷயம் கேள்விப்பட்டேன். ரொம்ப சந்தோஷம். பயல்மதனன் இனிமேலாவது தட்டுக்கிட்டு' அலையாமலிருப்பான்" என்றார் தீக்ஷதர்.

ஆதிசேஷ:- தீக்ஷிதர்வாள்! எல்லாம் பெரியவாளுடைய ஆசீர்வாதம். சுபகாரியம் விக்கினமில்லாமல் நடந்தேறவேண்டும். அதுதான் என்னுடைய பிரார்த்தனை.

தீக்ஷிதர்:- அடடா! உங்களுடைய மனசுக்கு ஒரு குறையும் வரமாட்டாது. எத்தனை பிராமணோத்தமர்களுடைய வயிறுகளில் நீங்கள்நெய்யைவார்த்திருக்கிறீர்கள்! அந்ததர்மங்களெல்லாம்வீணாகவாபோய்விடும்? அதெல்லாமிருக்கட்டும். மதனனுக்குத் தகவல் தெரியுமோ?

ஆதிசேஷ:- இனிமேல்தான் அவனுக்கு அறிவிக்கவேண்டும்.

தீக்ஷிதர்:- அவனிடம் கேட்கவில்லையா?

ஆதிசேஷ:- கேட்கவில்லை. ஏன் இவ்வாறு வினவுகிறீர்கள்?

தீக்ஷிதர்:- இது கலிகாலமாச்சே? பிள்ளைகள் தகப்பன்சொல்லுவதைக் கேட்கிறதில்லை. மதனன் சங்கதியோ நமக்கு நன்றாகத் தெரியும். கடைசிநேரத்தில் அவன் சம்மதமில்லையென்று சொல்லிவிடலாகாதேயென்றுதான் எனக்குக் கவலையாயிருக்கிறது.

ஆதிசேஷ:- எனக்கும் இந்த சந்தேகம் உண்டு. என்சம்சாரம் அப்படியொன்றும் நினைக்கவேண்டாமென்று தைரியம்சொல்லுகிறாள்.

தீக்ஷிதர்:- அவளுக்கு என்னதெரியும்? உலகம் போகிறபோக்கென்ன? பிள்ளைகளுடைய நடத்தை என்ன? இதுகளையெல்லாம் கவனிக்கவேண்டாமோ? அதிலும் மதனன் அந்த நீசப்பெண்ணின்வலையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறான். நேற்றுக்கூட அவளுக்கு மதனனிடமிருந்து லெட்டர்வந்தாம்.



ஆதிசேஷ:- அப்படியா? அது உங்களுக்கு எப்படித்தெரியும்?

தீக்ஷிதர்:- இதை அறிவதா ஒரு பெரிய காரியம்? நம்முடைய ஊர் போஸ்ட் மாஸ்டர் சுந்தரத்திடம் கேட்டால் அவன் கதை கதையாய்ச் சொல்லுகிறான்.

ஆதிசேஷ:- என்னசொல்லுகிறான்?

தீக்ஷிதர்:- இரண்டு நாட்களுக்கு ஒருமுறை மதனன் கருப்பாயிக்கு லெட்டர் எழுதுகிறானாம். ஒவ்வொரு லெட்டரிலும் அவன் என்ன எழுதுகிறானென்பதை சுந்தரம் பிரித்துப்பார்த்து பிறகு கவரை ஒட்டித்தான் கொடுக்கிறானாம். அடே! அப்பா! கல்யாணம் செய்துகொண்ட ஸ்திரீ புருஷர்கள் மாதிரித்தான் இரண்டுபேர்களும் கடிதம் எழுதிக்கொள்கிறார்கள்! படிப்பு முடிந்து வந்ததும், அவளை விவாகம் செய்துக்கொள்ளப்போவதாகவும், வேறு எந்தப் பெண்ணையும் தான் கண்ணெடுத்துக்கூட பார்க்கப் போவதில்லையென்றும் மதனன் கருப்பாயிக்கு எழுதியிருக்கிறானாம். பண்ணையார்வாள்! கருப்பாயி சேரியில் பிறந்தவளென்றாலும் பார்வைக்கு லெக்ஷணமாய்த்தானிருக்கிறாள்! அவளைக் கண்டு எல்லாரும் ஆசைப்படத்தான்செய்வார்கள். அந்தச் சண்டாளி, மதனனுக்கு ஏதோ மருந்தைச் செலுத்திவிட்டாளென்று நினைக்கிறேன். அவள் வலையில் சிக்கிக்கொண்டிருக்கும் மதனன் கமலத்தைக் கட்டிக்கொள்ளச் சம்மதிக்கவேண்டுமே? என்று நான் கவலைப்படுகிறேன். நீங்களும், நானும் பழகின பழக்கத்துக்கு உங்களிடம் வந்து இந்த விஷயத்தைச் சொல்லாமலிருக்கலாமா?

ஆதிசேஷ:- தீக்ஷிதர்வாள்! நீங்கள் மிகவும் நல்லவாள். இதற்கு என்னசெய்கிறது? நேற்றைக்குத்தான் கருப்பனைக் கண்டித்தேன். இனிமேல் கருப்பாயி மதனனை அணுகாமல் தடுத்துவிடுவதாக அவன் சொன்னான்.

தீக்ஷிதர்:- பண்ணையார்வாள்! அதெல்லாம் போதாது. பாவம்! கருப்பன் என்னசெய்வான்? மதனன் வந்ததும் நேராகச் சேரிக்குத்தான் போவான். உங்களால் அவனை என்னசெய்ய முடியும்?

ஆதிசேஷ:- அப்படியா? தீக்ஷிதர்வாள்! என் சமாச்சாரம் தெரியாதுபோலிருக்கிறது. இன்றைக்கே அந்தச் சிறுக்கி

கருப்பாயியைக் கொன்றுவிடச்சொல்லுகிறேன். என்னையார் என்னசெய்யமுடியும்?

தீக்ஷிதர்:-பண்ணையாரவர்கள்! அவசரப்பட்டு நீங்கள்ஒன்றையும் செய்துவிடக்கூடாது.கொல்லவா? அதுமகாபாவம்! மேலும் கொலைக்கேஸ் வந்துவிடும். பணம் செலவாகிறதுடன், கேஸ் விபரீதமாக முடிந்தால் நீங்கள் தூக்குமரத்திற்குப் போகவேண்டியதாகும். அதைவிட நான் இன்னொரு யுக்தி சொல்லுகிறேன் கேளுங்கள்.

இப்போது நமக்கு எப்படியாவது காரியம் தானே ஆகவேண்டும்? கழியும் முறியக்கூடாது; பாம்பும் சாகவேண்டும். நீங்கள் என்ன தான் சொன்னாலும் மதனன் கருப்பாயியை விடமாட்டான். பிள்ளைக்கு வயது வந்துவிட்டால் அவனை அடக்க முடியுமோ? அதுவும் இந்தக்காலத்திலா? மதனனை அழையுங்கள். அல்லது நீங்களே நேரடியாக பட்டணம் போய் அவனைப் பாருங்கள். அவன் கமலத்தைக் கல்யாணம் செய்து கொள்வானா என்பதைக் கவனியுங்கள். அவன் வழிக்கு வரமாட்டானென்று தோன்றினால் அவன் போக்குப்போல் விட்டுத்தான் பிடிக்கவேண்டும். கருப்பாயியை அவன் வைப்பாட்டியாக வைத்துக் கொள்ளலாமென்று சொல்லிவிடுங்கள்.

ஆதிசேஷ:- சிவ! சிவ! தீக்ஷதர்வாள்! நீங்களுமா இப்படிச் சொல்லுகிறீர்கள்?

தீக்ஷிதர்:- சிவ சிவவேது? ராம ராமவேது? பண்ணையார்வாள்! காலத்திற்குத் தகுந்தபடிதான் நாமும் நடந்து கொள்ள வேண்டும். பிள்ளையோ முரடன். பெரிய பிடிவாதக்காரன். சிறு பயலாயிருந்தால் அதட்டி உருட்டி அடக்கிவிடலாம். வயதுவந்த மகனை வேறு என்ன செய்வது? உலகத்தில் நடக்காதகாரியத்தை நான் சொல்லவில்லையே? எத்தனையோ குண்டல தீக்ஷதர்கள்கூட இரகசியமாக வைப்பாட்டிகளை வைத்துக் கொண்டுதானிருக்கிறார்கள். அக்கரைப்பட்டி ரெங்கா சாஸ்திரிகள் சேதி தெரியாதா? இருட்டி விட்டால் அவர் சுடலி வீட்டிற்குப் போய்விடுகிறார்! இதெல்லாம் இந்தக்காலத்தில் சகஜமாய்த்தானே இருக்கிறது? இந்த ஊரில் கருப்பாயி இருக்கவேண்டாம். அடுத்த கிராமத்தில் அவளுக்கு ஒரு வீட்டைக் கட்டிக் கொடுத்துவிட்டால் அவளைக் கட்டிக்கொண்டு மதனன் அழட்டுமே? நாலு நாட்களுக்கு ஊரி



லுள்ளவர்கள் பேசுவார்கள். பிறகு வாயை மூடிக் கொள்வார்கள். மேலும் உங்களிடம் பணம் இல்லையா? பணத்தைக் கொண்டு எல்லாவற்றையும் மறைத்துவிடலாம். நான் சொல்லுவது போல் செய்தால் நமது காரியம் பூர்த்தியாகிவிடும். வாலிப முறுக்கு நீங்கினவுடன் மதனன் கருப்பாயியை மறந்து நல்ல பிள்ளையாகி விடுவான். கிருஷ்ணய்யர் பெண் கமலம் ரொம்பக் கெட்டிக்காரி. அவளும் நாளாவட்டத்தில் பயல் மதனனை சரிபண்ணி விடுவாள்.

ஆதிசேஷ:— தீக்ஷதர்வாள்! எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. இப்படியா எனக்குப் பிள்ளைபிறக்கவேண்டும்?

தீக்ஷதர்:— அதைச்சொல்லி என்ன பிரயோஜனம்? தலைவிதி அப்படிஇருக்கிறது!

ஆதிசேஷ:— பெரியவாளுடைய புத்திமதிப்படி நடக்கிறேன். தீக்ஷதர்வாள்! நான் இங்கிருந்து பட்டணத்துக்குப் போகமுடியாது. அந்தப்பயல் மதனனிடம் நான் பேசவும்மாட்டேன். மேலும் கல்யாணக்காரியங்களை நானிருந்துதான் கவனிக்கவேண்டும். எனக்காக நீங்கள் சிரமத்தைப்பார்க்காமல் பட்டணம்போய் மதனனை அழைத்துவாருங்கள். அவனை எப்படியாவது வழிக்குக் கொண்டுவரவேண்டியது உங்கள் பொறுப்பு.

தீக்ஷதர்:— நானா போகவேண்டும்? அட!பாபமே! நாளைக்கு கோபாலய்யர்வீட்டில் சிரார்த்தம். ரகுநாதய்யர்வீட்டில் அடுத்த நாள் ருதுசாந்தி நடக்கிறது. அதன்பிறகு சங்ரய்யர்வீட்டில் தலைப்பிறந்தநாள். இப்படி அடுக்கடுக்காக விசேஷங்களிருக்கின்றனவே? எனக்கோ இது முடையானகாலம். கடைகளுக்குக்கடன் கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. ஏதாவதுசம்பாத்தியம்கிடைக்கிறநாளில் பட்டணத்துக்கு நான் போய்விட்டால் சங்கடப்படுவேனே?

ஆதிசேஷ·— இவ்வளவுதானா? கடைகளுக்குக்கொடுக்க நூறுரூபாய் தருகிறேன். போகவரச்செலவுக்கு நூறுரூபாய்வாங்கிக்கொள்ளுங்கள். தீக்ஷதர்வாள்! கல்யாணகாரியத்தை எப்படியாவது முடித்துவையுங்கள். உங்களை நான் மறவாமல்கவனிப்பேன்.

இவ்வளவுதான்! தீக்ஷதருக்கு ஆனந்தம் பொங்கிவிட்டது. ரூபாய் இரண்டுநூறை வாங்கி தீக்ஷதர் பத்திரப்படுத்திக்கொண்

டார். "பண்ணையார்வாள்! நான் இன்று இரவிலேயே பட்டணத்திற்குப்போகிறேன். என்னல் கூடியவரைபேசி மதனனைச் சரிப்படுத்தப்பார்க்கிறேன். எல்லாம் வாசுதேவனின் கிருபை! என்றார் தீக்ஷதர்.

ஆதிசேஷ:— தீக்ஷதரே! நீங்கள் என்னசெய்வீர்களோ? என்ன பேசுவீர்களோ? எனக்கொன்றும் தெரியாது. கல்யாணம் உங்கள் புண்யத்தினல்தான் நடக்கவேண்டும்.

தீக்ஷதர்:— இன்னெருவிஷயத்தைச்சொல்ல மறந்துவிட்டேனே? மதனன்முரடன். நான் அவனிடம் விஷயத்தைச்சொன்னவுடன் தடபுடலாகப் புறப்பட்டுவருவான். வந்ததும் வராததுமாக நேரடியாக சேரிக்குப்போவான். கருப்பாயியைக் கூட்டிக்கொண்டு எங்காவது ஓடிப்போகவும் அவன் முயற்சிசெய்யக்கூடும். இதற்கு நாம் இடம்கொடுக்கக்கூடாது. கல்யாணம் முடிகிறவரையிலும் கருப்பாயி இந்த ஊரிலிருக்கக்கூடாது. அதற்கான காரியங்களை உடனே செய்யுங்கள்.

ஆதிசேஷ:-ஆம். நீங்கள் சொல்லுவது சரிதான். கருப்பாயியை எங்கே போகச் சொல்லுகிறது?

தீக்ஷதர்:-ஏதாவது யோசித்துப் பார்த்து உசிதம் போல் செய்யுங்கள். நேரமாகிறது நான் போய் வீட்டுக் காரியங்களை ஒழுங்கு பண்ணிவிட்டு ரயிலுக்குப் போகிறேன்.

ஆதிசேஷய்யர் குமாரன் மதனசுந்தரனுக்குக் கல்யாணம் ஆனலென்ன? ஆகாவிட்டாலென்ன? அப்பய்யா தீக்ஷதருக்குக் கொஞ்சம் கூடக் கவலை கிடையாது. அவருக்கு வேண்டியது பணம்! ஏமாந்தவன் அகப்பட்டுக் கொண்டால் அவர் பணத்தை உறிஞ்சி விடுவார். பண்ணையார் ஆதிசேஷய்யர் வீட்டுக் கல்யாணத் தகராறு நடக்கும் காலத்தில் சில ஆயிரம் ரூபாயையாவது அடித்துவிடவேண்டுமென்று தீக்ஷதர் திட்டம் போட்டுவிட்டார். மதனசுந்தரன் தன் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்கவே மாட்டானென்பது தீக்ஷதருக்குத் தெரியும். ரூபாய் இரு நூறை வாங்கிக் கொண்டு வெளிப்பட்ட தீக்ஷதர் வீட்டிற்குப் போகவில்லை. ஆதித்தனூரில் முகாம் போட்டிருந்த போலீஸ் சப் இன்ஸ்பெக்டரிடம் போனர். சப் இன்ஸ்பெக்டர் நாகராஜனை தீக்ஷதருக்கு வெகு நாட்களாகத் தெரியும். கிராமங்களிலுள்ள பண்ணையார்களிடமிருந்து ஏதாவது அடிக்க வேண்டுமானல் சப் இன்ஸ்பெக்டர் நாகராஜன் அப்பய்யா தீக்ஷதரைத் தான் புரோக்கராக உபயோகப்படுத்துவான். புரோகிதப்புலியான தீக்ஷதருக்குக் கொஞ்சம் இங்கிலீஷ் பாஷையும் வரும். நாகராஜன் மிகவும் பொல்லாதவன். ஈவு, இரக்கம், தயவு, தாக்ஷிண்யம், நியாயம்முதலானதுகளை சப் இன்ஸ்பெக்டர் நாகராஜன் கவனிப்பதே கிடையாது. ஏழை மக்கள் அவன் பெயரைக் கேட்டாலே நடுநடுங்குவார்கள். என்றாலும், மேலதிகாரிகள் அவனுக்கு நற்சாக்ஷிப் பத்திரங்களை வழங்கியிருந்தார்கள். அவனைப் பகைத்துக் கொண்டவர்கள் நிச்சயமாக ஏதாவது வழக்குகளில் மாட்டப்பட்டு சிறைச்சாலை போய்ச் சேர்ந்து விடுவார்கள். தடிக்கம்புச் சலம்பத்திலும், சவுக்குவீச்சிலும் நாகராஜன் அதிசமர்த்தன். இத்தகைய நாகராஜனிடம் தீக்ஷதர் ஓடோடியும் சென்றார். தீக்ஷதர் வந்தால் பணவருவாய்க்கு வழியிருக்குமென்பதை யறிந்த சப் இன்ஸ்பெக்டர் அவரைச் சந்தோஷமாக வரவேற்றான். "தீக்ஷதர்வாள்! வரவேண்டும்! வரவேண்டும்! ஏது இந்த நேரத்தில் வந்திருக்கிறீர்கள்? ஏதாவது விசேஷம் உண்டா?" என்று ஆவலுடன் நாகராஜன் கேட்டான்.



தீக்ஷதர்:-இன்ஸ்பெக்டர்வாள்! காரியமில்லாமல் நான் வருவேனே?

நாகரா:-என்ன காரியம்? சில்லரை வேலையானல்வேண்டாம். மொத்தமாக ஏதேனும் கிடைக்குமா?

தீக்ஷதர்:-அவசரப்படாதேயுங்கள். சரியான ஆஸாமியைத்தான் நான் பிடித்திருக்கிறேன். பண்ணையார் ஆதிசேஷய்யரை உங்களுக்குத் தெரியாதா?

நாகரா:-தெரியும் பெரிய பணக்காரர் தான். ஆனல் அந்த மனுஷன் ஒன்றிலும் மாட்டிக்கொள்ள வில்லையே?

தீக்ஷதர்:-இப்போது சரியான சான்ஸ் கிடைத்திருக்கிறது

நாகரா:-ஏதாவது கேஸ்.......

தீக்ஷதர்:-கேஸ் ஒன்றுமில்லை. பண்ணையாருக்கு மதனசுந்தரன் என்று ஒரே ஒரு மகன் இருக்கிறன். அவனுக்கு இன்னும் 15 தினங்களில் கல்யாணம் நடக்கப் போகிறது.

நாகரா:-அவனுக்குக் கல்யாணம் நடந்தால் நமக்கு என்ன சுவாமி?

தீக்ஷிதர்:-சொல்லுவது பூராவையும் கேளுங்கள். மதனன் இந்தக் கல்யாணத்திற்கு ஒப்புக்கொள்ளவே மாட்டான். அவன் இவ்வூர் சேரியிலிருக்கும் கருப்பாயி என்ற பெண்ணைத் தான் கல்யாணம் செய்து கொள்வேனென்கிறான். பிராமணகுலத்தில் பிறந்த ஒருவன் பஞ்சம சாதிப் பெண்ணைக் கட்டிக் கொள்ளலாமா? அந்தப் பெண் இந்த ஊரிலிருந்தால் ஆதிசேஷய்யர் நிச்சயித்திருக்கிற பிராமணப் பெண்ணை மதனன் விவாகம் செய்து கொள்ள மாட்டான். கொஞ்ச நாட்களுக்காவது கருப்பாயியை அயலூருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று நான் பண்ணையாரிடம் சொல்லியிருக்கிறேன். அந்த மனுஷன் என்ன செய்வதென்று தெரியாமல் பரக்கப் பரக்க விழித்துக் கொண்டிருக்கிறான். கருப்பாயியைக் கடத்துவது உங்களால் முடியாத காரியமா? ஆதிசேஷய்யரிடம் சென்று, ஒன்றும் தெரியாததுபோல் கல்யாணப் பேச்சை ஆரம்பம் செய்யுங்கள். அவர் எல்லாவற்றையும் சொல்லுவார். உங்களுடைய உதவியையும் கோருவார். பிறகு என்ன செய்யவேண்டுமென்பதை நான் சொல்லிக் கொடுக்கவேண்டுமா? கொழுத்த பீஸை அட்வான்சாக வாங்கி விடுங்கள். எனக்குண்டான பங்கு தான் உங்களுக்குத் தெரியுமே?

நாகரா:-எல்லாம் சரிதான். கருப்பாயியை எப்படி ஊரைவிட்டு விரட்டுவது சுவாமி? ஏதாவது காரணம் வேண்டுமே?

தீக்ஷிதர்:-அதுக்கும்வழி இருக்கிறது. கருப்பாயி படித்தவள், காந்தி கோஷ்டியைச் சேர்ந்தவள். கள்ளுக்கடை முன்னால் நின்று பிரசங்கம் செய்கிறாள். கள்ளுக்கடை மறியல் செய்து குழப்பத்தை யுண்டாக்கினதாகக் கதை கட்ட முடியாதா?

நாகரா:-பேஷ்! தீக்ஷிதர்வாள்! நீங்கள் போலீஸ் உத்தியோகத்திற்கு வந்திருக்க வேண்டும், சரி! சரி! நான் இதைக் கவனித்துக்கொள்கிறேன். நீங்கள் சென்று வாருங்கள்.

இவ்வளவுடன் அப்பய்யா தீக்ஷிதர் சப் இன்ஸ்பெக்டரிடம் விடைபெற்றுக் கொண்டு அப்பாற்பட்டார்.

மாலை மணி ஐந்து ஆயிற்று. நாகராஜன் தன்னுடைய உத்தியோக உடையுடன், இடுப்பில் ஒரு கைத் துப்பாக்கியைச் சொருகிக் கொண்டு வலக்கரத்தில் பிரம்பை வைத்துக்



கொண்டு அக்கிரகாரத்திற்குட் பிரவேசித்தான். கிராமவாசிகளுக்குப் போலீசார் என்றால் பயம் உண்டல்லவா? எல்லோரும் எட்டி நின்று ஆச்சரியத்துடன் நாகராஜனைக் கவனித்தார்கள். பண்ணையார் ஆதிசேஷய்யர் சர்க்கார் உத்தியோகஸ்தர்களைக்கண்டால் கும்பிட்டுவிழுவார். பண்ணையார் வீட்டின் முன்பு சென்றவுடன் நாகராஜன் ஆதிசேஷய்யரைத் திரும்பிப் பார்த்துப் புன்னகை செய்தான். உடனே பண்ணையார் எழுந்து நின்று "வரவேண்டும்! வரவேண்டும்!" என்று நாகராஜனை அழைத்தார்.

ஆதிசேஷ:-அபூர்வமாயிருக்கிறதே? என்ன விசேஷமாக இவ்வூருக்கு வந்திருக்கிறீர்கள்?

நாகரா:-நான்கு நாட்களாக நான் இங்கு முகாம்போட்டிருக்கிறேன். ஒரு கொள்ளைக் கேஸ் விசாரணைக்காக வந்தேன்.

ஆதிசேஷ:-ஓகோ! நான்கு தினங்களாகி விட்டதா? எனக்குத் தெரியாதே? என்ன போங்கள்! கல்யாண வேலையின் தடபுடலில் ஊர் விஷயங்களையே என்னால் விசாரிக்க முடியவில்லை.

நாகரா:-அப்படியா? கல்யாணமா? யாருக்கு?

ஆதிசேஷ:-எனக்கு ஒரே ஒரு குமாரன் இருக்கிறான். அவனுக்கு இந்த ஆனி மாதம் 22-ந் திகதி விவாகம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. தாங்கள் அது வரையிலும் கட்டாயம் இங்கிருக்க வேண்டும்.

நாகரா:-மிகுந்த சந்தோஷம். உங்கள்குமாரனுக்கு விவாகமா? பெண் யார்?

ஆதிசேஷ:-இந்த ஊர் கிருஷ்ணசாமி அய்யரின் குமாரத்தி கமலத்தை மதனனுக்கு மணஞ்செய்து வைக்கத் தீர்மானித்திருக்கிறது.

நாகரா:-பேஷ்! கல்யாண முகூர்த்த தினம் வரையிலும் நான் இங்கிருந்தால் கட்டாயம் வருகிறேன். பண்ணையார்வாள்! உங்களைப் பற்றி நம்முடைய அப்பய்யா தீக்ஷிதர் என்னிடம் விசேஷமாகச் சொல்லியிருக்கிறார். என்னால் உங்களுக்கு ஏதாவது காரியம் ஆகவேண்டியிருந்தால் சொல்லுங்கள். செய்து முடிக்கிறேன்.

பண்ணையார் ஆதிசேஷய்யருக்கு உடனே காந்தாமணியின் ஞாபகம் வந்துவிட்டது. மதனசுந்தரன் சென்னையிலிருந்து ஊருக்கு வந்தால் காந்தாவைத் தேடிக்கொண்டு போய்விடுவானென்றும், கல்யாண காலம் வரை காந்தாமணியை அப்பாற்படுத்திவைக்க வேண்டியது அவசியமென்றும் அப்பய்யா தீக்ஷிதர் சொன்ன யோசனையும் பண்ணையாரின் நினைவிற்கு வந்தது. தானாக காந்தாவைக் கடத்தினால் பெண் கடத்தினவழக்கும் வம்பும் தோன்றிவிடுமே யென்ற அச்சமும் ஆதிசேஷய்யருக்கு உண்டு. போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் நாகராஜனின் உதவியைக் கோரலாமென்ற முடிவிற்கு அவர் வந்தார்.

ஆதிசேஷ;-சப் இன்ஸ்பெக்டர்வாள்! நீங்கள் கட்டாயமாக கல்யாணம் முடிகிற வரையிலும் இந்த ஊரிலிருந்தால் அனுகூலமாயிருக்கும்.

நாகரா:-ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? உங்களுக்கு விரோதிகள் யாராவது இவ்வூரிலிருக்கிறார்களா? கல்யாணத்தை அவர்கள் குறுக்கிட்டுக் குழப்பி விடுவார்களென்று நீங்கள் பயப்படுகிறீர்களா? அப்படியானால் சொல்லுங்கள். அந்தப் பயல்கள் யாராயிருந்தாலும் இமைப் பொழுதில் அடக்கி விடுகிறேன். சப் இன்ஸ்பெக்டர் நாகராஜனைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டது கிடையாதா?

ஆதிசேஷ:-அடடா! எனக்கு எல்லாம் தெரியும். உங்களுடைய கீர்த்திதான் இமசேது பரியந்தம் பாவியிருக்கிறதே! காந்தி குழப்பத்தில் சேர்ந்தவர்களின் கால் கைகளை முறித்த வீரரான உங்களுக்குத் தங்கப் பதக்கம் பரிசாக சர்க்காரால் வழங்கப்பட்டதென்று கூடச் சொன்னார்கள். இன்ஸ்பெக்டர்வாள்! எனக்கு ஒரு சின்னக் காரியம் உங்களால் ஆகவேண்டும்.

நாகரா:-என்ன விஷயம் சொல்லுங்கள்.

ஆதிசேஷ:-எனக்கு இந்தக் கிராமத்தில் விரோதிகள் கிடையாது. ஆனால்....

நாகரா:-ஆனால் என்ன? தயங்காதேயுங்கள். சங்கோஜமில்லாமல் வேண்டியதைச் சொல்லுங்கள். பண்ணையார்வாள்! மனிதருக்கு மனிதர் பரஸ்பரம் உபகாரம் செய்து கொள்ளவேண்டியது தானே கடமை?



ஆதிசேஷ:-என் சங்கடத்தைச் சொல்லுவதற்கு எனக்கே வெட்கமாயிருக்கிறது.

நாகரா:-என்ன சுவாமி! இவ்வாறு சலிப்புடன் பேசுகிறீர்கள்?

ஆதிசேஷ:-கல்யாணம் விக்கினமில்லாமல் நடந்தேற வேண்டுமே என்று தான் நேற்று முதல் எனக்கு விசாரம். என்னவோ! எல்லாம் அந்தப் பரம்பொருளின் கிருபை! அந்தத் தெய்வம்தான் நல்ல நேரத்தில் உங்களைக் கொண்டு வந்து விட்டிருக்கிறதென்று நம்புகிறேன்.

நாகரா:-பண்ணையார்வாள்! காரியத்தைச் சொல்லுங்கள். உங்களுக்கு ஒரு கவலையுமில்லாதபடி நான் பார்த்துக் கொள்கிறேன்.

ஆதிசேஷ:-இன்ஸ்பெக்டர்வாள்! என் மகன் ஒரு பெரிய தடிப்பயல். நான் சொல்லுவதைக் கேட்கிறானில்லை. காந்தியின் உபதேசத்தைக் கேட்டு அவன் கெட்டுப்போய் விட்டான். சாதி, வர்ணம், குலம், கோத்திரம் ஒன்றையும் அவன் மதிப்பதுகிடையாது. அவன் இவ்வூரிலுள்ள ஒரு ஹீன சாதிப் பெண்ணுடன் சிநேகம் கொண்டிருக்கிறான், அவளையே கல்யாணம் செய்து கொள்ளப் போவதாயும் அவன் சொல்லுகிறான்.

நாகரா:-ஓகோ! ஆம் நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன். சிலர் வந்து என்னிடம் இவ்வாறு உங்கள் மகனைப் பற்றி சொன்னார்கள். ஆனால் அதை நான் நம்பவில்லை சேரியில் வாழும் பெண்ணோடு உங்கள் மகன் நேசமாயிருக்கிறானோ?

ஆதிசேஷ:-ஆம்! ஆம்! உங்கள் வரைக்கும் இந்த மானக்கேடான விஷயம் எட்டி விட்டதா?

நாகரா:-சுவாமி! இதில் நான் என்ன செய்ய வேண்டுமென்பதை நீங்கள் சொல்லவில்லையே?

ஆதிசேஷ:-இன்ஸ்பெக்டர்வாள்! மதனனைக் கேட்காமல் நான் கல்யாணத்தை நிச்சயித்திருக்கிறேன். அவன் வந்து கூச்சல் போடுவான். வந்ததும் வராததுமாகச் சேரிக்குப் போய் கருப்பாயியைப் பார்ப்பான். அந்தச் சண்டாளி மாயக்காரியோ? மந்திரவாதியோ? என்னவோ தெரியவில்லை. அவள் என் மகனுக்கு வசிய மருந்தைச் செலுத்திவிட்டாளென்று சோதிடர்கள் சொல்

லுகிறார்கள். மதனன் அவளைப் பார்த்து விட்டால் நிச்சயமாக வீட்டிற்குத் திரும்பி வரவேமாட்டான். நான் ஏற்பாடு செய்திருக்கிற கல்யாணம் நின்று விடும். ஊராரெல்லாரும் பார்த்து என்னைப் பரிகாசம் செய்வார்கள். எனக்கு மதனனைத் தவிரவேறு பிள்ளைகள் இருந்தால் கொஞ்சம் கூடக் கவலைப்படவே மாட்டேன். எனக்கு அவன் ஒருவன் தான் வாரீசாயிருக்கிறான். அவனும் சாதி கெட்டலைந்தால் என்னால் சகிக்கமுடியுமா? கல்யாணம் எப்படி நடக்குமோ? ஆண்டவன் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறானோ? ஒன்றும் தெரியவில்லை. நீங்கள் பெரிய அதிகாரியாயிருக்கிறீர்கள். இந்தவகையில் நீங்கள் எனக்கு ஒத்தாசை செய்தால் ஒரு குடும்பத்தைக் காப்பாற்றினவர்களாவீர்கள்.

நாகரா:-ஓகோ! பண்ணையார்வாள்! சரி. நீங்கள் சொன்ன விஷயம் நன்றாகத் தெரிந்து விட்டது. மதனன் கல்யாண விஷயத்தைக் கேள்விப்பட்டு இவ்வூருக்கு வரும் பொழுது, கருப்பாயி யென்ற பெண் இங்கே இருக்கக் கூடாது. அவ்வளவு தானே?

ஆதிசேஷ:-ஆம்.

நாகரா:-கல்யாணம் முற்றுப்பெறுகிற வரையிலும் கருப்பாயி இருக்குமிடம் ஒருவருக்கும் தெரியவும் கூடாது.

ஆதிசேஷ:-ஆம். ஆம். உங்களுக்குத் தெரியாத விஷயமா? நான் கேட்காமலிருக்கும் பொழுதே நீங்கள் என் மனத்திலுள்ளதைச் சொல்லி விட்டீர்களே? அடடா! உங்களுடைய புத்திசாலித்தனத்தை என்னென்று மெச்சுவது?

நாகரா:-சுவாமி! விஷயம் மிகவும் பெரிய காரியம். நீங்கள் நினைப்பதைப் போல சின்ன விஷயமல்ல.

ஆதிசேஷ:-உங்களால் இதுமுடியாதா? இன்ஸ்பெக்டர்வாள்! இந்த நேரத்தில் என்னை நீங்கள் கைவிட்டு விடக் கூடாது.

நாகரா:-சுவாமி! நிரபராதியான ஒரு பெண்ணைக் கடத்திக் கொண்டு போவதென்றால் சின்ன குற்றமென்று நினைக்கிறீர்கள்? மேல் அதிகாரிகளுக்குத் தெரிந்தால் ஏழு வருஷம் ஜெயிலுக்கு அனுப்பிவிடுவார்களே?

ஆதிசே:- ஐயோ! நீங்களுமா என்னைக் கைவிட்டுவிடப் போகிறீர்கள்? இந்தசர்க்காரே உங்கள் கைவசமிருக்கிறதென்று எல்லா



ரும் சொல்லுகிறார்களே? இன்ஸ்பெக்டர்வாள்! எப்படியாவது தயவுசெய்து என்னை இந்தத் தடவை நீங்கள் ஆதரிக்க வேண்டும். என்னுடைய குடும்பத்தின் எதிர்காலம் உங்கள் கைவசமிருக்கின்றது.

நாகரா:- நீங்கள் சொல்லுவதெல்லாம் சரிதான். பெரிய காரியங்களுக்குப் பெருந்தொகையான பணம் செலவாகுமே யென்றுதான் நான் யோசிக்கிறேன். பாருங்கள்! கருப்பாயியைத் தூக்கிக் கொண்டுபோகவேண்டும். கூப்பிட்டால் அவள் என்னுடன் வருவாளா? அதற்கு ஆட்கள் வேண்டும். அந்த ஆட்கள் வெளியே விஷயத்தைச் சொல்லாமலிருக்க வேண்டும். எனக்குக்கீழேயுள்ள போலீஸ் சிப்பந்திகள், மேலேயுள்ள இரண்டு அதிகாரிகள் முதலானவர்களுடைய வாயைக் கட்டவேண்டும். இவ்வளவிற்கும் தயாராயிருந்தாலொழிய இந்தக் காரியத்தில் இறங்கக் கூடாது. மேலும் உயிரை வெறுத்துத்தான் இதில் பிரவேசிக்கலாம்.

ஆதிசே:- இன்ஸ்பெக்டர்வாள்! பணம் வேண்டுமா?

நாகரா:- ஆம். பணத்தினால் தான் காரியத்தைச் சாதிக்க முடியும். அதுவும் என்னால்தான் முடியும். வேறு எவனாலாவது ஆகாது. இந்த மாதிரிப் பெண்கடத்தும் விஷயத்தில் நான் இதுவரையிலும் பிரவேசித்ததே கிடையாது. நீங்கள் கண்ணியம் வாய்ந்த கிரகஸ்தராயிருப்பதாலும், உங்களைப்பற்றி அப்பய்யாதீக்ஷதர் என்னிடம் சொல்லியிருப்பதாலும் இக்காரியத்தைச் செய்ய நான் சம்மதிக்கிறேன்.

ஆதிசே:- அது எனக்குத் தெரியாதா? எவ்வளவு தொகை தேவைப்படும்.

நாகரா,- உங்கள் காரியமாகையினால் எனக்கு ஒன்றுமே வேண்டாம். கல்யாணமெல்லாம் முடிந்த பிறகு நீங்களாகப் பார்த்து எனக்குச் சந்தோஷமாய்க் கொடுப்பதை நான் பெற்றுக்கொள்ளுவேன். சில்லரைச் சிப்பந்திகளுக்கு ஆளுக்குக் கொஞ்சம் கொடுப்பதா யிருந்தாலும் இரண்டாயிரம் வேண்டும். மேல் அதிகாரிகள் சில்லரைத் தொகைக்கு வழிப்பட மாட்டார்கள். அவர்கள் வகைக்கு நாலாயிரமாவது குறைந்தது வேண்டும். ஆக மொத்தம் ஆறாயிரம் ரூபாய் கொடுப்பீர்களானால் உங்களுக்கு

எந்த விதமான கவலையுமில்லாமல் காரியத்தை முடித்து கொடுத்து விடுகிறேன்.

ஆதிசே:- அடே அப்பா! ஆறாயிரம் ரூபாயா?

நாகரா:- என்ன சுவாமி? தொகையை மட்டும் பிரமாதமாக நினைக்கிறீர்களே? காரியம் எவ்வளவு பெரிதென்பதை யோசித்துப்பார்த்தீர்களா?

ஆதிசேஷ:- இன்ஸ்பெக்டர்வாள்! நெல்லுக்கு விலை இல்லை. காலம் பஞ்ச காலம். இதுகளை யெல்லாம் யோசிக்க வேண்டாமா?

நாகரா:- சுவாமி! நான் பேரம் பேசும் வழக்கம் கிடையாது எனக்கு இதில் ஒரு இலாபமும் இல்லை. உங்களுக்கு இஷ்டமுண்டானால் சொல்லுங்கள். இல்லாவிட்டால் விட்டுவிடுங்கள். உங்களை நான் கட்டாயப்படுத்தவா செய்கிறேன்?

என்ன செய்வார் ஆதிசேஷய்யர்! பணம் போகிறதே என்ற கவலையை விட பஞ்சமப் பெண்ணை மதனன் கட்டிக்கொண்டு விடுவானே என்ற கவலை அவருக்கு அதிகமாயிருந்தது. தானாகக் காந்தாவைக் கடத்தினால் ஜெயிலுக்குப் போகவேண்டியதாகி விடுமேயென்ற அச்சம் ஒருபக்கத்தில் அவரை வருத்திற்று. நெடுநேரம் அவர் யோசித்தார். பணத்தை வாரியிரைத்தாவது எடுத்த காரியத்தை நிறைவேற்றி விட வேண்டுமென்ற முடிவிற்கு பண்ணையார் வந்தார். "இன்ஸ்பெக்டர்வாள்! கொஞ்சம் கூடத் தொகையைக் குறைக்க வழியில்லையா?" என்று திரும்பவும் வினவினார்.

நாகரா:- சுவாமி! எனக்கு வேறு வேலையிருக்கிறது. எனக்கு பேரம் பேச நேரமில்லை

ஆதிசேஷ:- சரி! கோபித்துக் கொள்ளாதேயுங்கள். என்ன செய்யலாம்! எனக்கு இப்படியொரு மகன் பிறந்து பணம் போகிறது! மானம் போகாமலிருந்தாலே போதும். ரூபாய் ஆறாயிரம் தருகிறேன். காரியத்தை முடியுங்கள்.

நாகரா:- பண்ணையார்வாள்! இந்தமாதிரி வேலைகளுக்கெல்லாம் கடன் சொல்லக்கூடாது. முன்கூட்டியே பூராத்தொகையும் வந்துவிடவேண்டும்.



ஆதிசேஷ:- இன்ஸ்பெக்டர்வாள்! என்வார்த்தையில் நம்பிக்கை இல்லையா? நான் சொன்னால் மாறவே மாட்டேன்.

நாகரா:- நீங்கள் கூறுவதெல்லாம் சரிதான். எனக்குச் சேர வேண்டிய பணமாயிருந்தால் நீங்கள் சொல்லுவதை நான் கேட்பேன். ஆறாயிரம் ரூபாயும் வேறு ஆட்களுக்கு கொடுக்கப்பட வேண்டியது. அவர்கள் கண்டிப்பாகப் பணத்தை கேட்பார்கள். பணம் கையில் கிடைக்காமல் விரலைக்கூட அவர்கள் அசைக்கமாட்டார்கள்.

பாவம்! ஆதிசேஷய்யர் வேறு வழியில்லாமல் இரும்புப் பெட்டியைத் திறந்து ரூபாய் ஆறாயிரத்தை எடுத்து சப்இன்ஸ்பெக்டர் நாகராஜனிடம் கொடுத்தார். நாகராஜனும் வாங்கி வைத்துக் கொண்டான். "ஐயா பணத்தைக் கொடுத்து விட்டேன். காரியத்தை உடனே முடியுங்கள்" என்றார் ஆதிசேஷய்யர். "பண்ணையார்வாள்! இனிமேல் உங்களுக்குக்கவலையே வேண்டாம். கருப்பாயி முகத்தையே இனிமேல் உங்கள் மகன் பார்க்க முடியாது. இது நிச்சயம். ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நமக்குள் நடந்த பேச்சும், ஒப்பந்தமும் வேறொருவருக்கும் தெரியக்கூடாது. உங்கள் மனைவியிடமாவது, தீக்ஷதரிடமாவது சொல்லாதேயுங்கள். சொன்னால் காரியம் பழுதாவதுடன் நீங்களும் அகப்பட்டுக் கொண்டு விடுவீர்கள். ஜாக்கிரதை!" என்று எச்சரித்து விட்டு நாகராஜன் சென்றான். பணத்தைக் கொடுத்த பண்ணையார் ஏக்கத்துடன் கொட்டாவி விட்டார். பணத்தை அடித்த நாகராஜன் தமாஷாகத் தனது முகாம் போய்ச்சேர்ந்தான்.

## அத்தியாயம் 4!

### காமுகன் நாகராஜன்.

செல்வி காந்தாமணி தன்னுடைய நிலையை நினைந்து நினைந்து வருந்திக் கொண்டிருந்தாள். தான் முந்தின நாள் மதனனுக்கு எழுதிய கடிதத்திற்குப் பதில் கிடைத்த பின்னர் மேல் நடக்க வேண்டியதை நிர்ணயிக்கலாமென்பது அவளுடைய துணிபு. காந்தாமணி மகா தைரிய சாலி. புத்திசாலி. தன்னருமைக் காதலனுக்காக அவள் எதை வேண்டுமென்றாலும் தியாகம் செய்யச் சித்தமாயிருந்தாள். தானும் மதனனும் நதிக் கரையோரத்தில் அந்நியோந்நியமாகச் சம்பாஷித்ததெல்லாம் அவளது நினைவிற்கு வந்தன. "ஆம்! ஆம்! மதனனும் நானும் மனம்போல் சேர்ந்து வாழ்வது அசாத்தியமென்று தோன்றுகிறது. மமதை பிடித்த மேல் சாதிக்காரர் ஒரு பக்கத்தில் குறுக்கிடுகிறார்கள். அடிமைப்புத்தி தடித்த என்னினத்தார் இன்னொரு பக்கத்தில் தடையாக நிற்கிறார்கள். இவ்விரு கோஷ்டியாரையும் மீறுவது எவ்வாறு முடியும்? மதனா! என் காரணமாக நீ துன்பத்திற்கோ இழிவிற்கோ இலக்காகக் கூடாது. அது ஒன்றுதான் எனது கோரிக்கை," என்றெல்லாம் இரவு நேரத்தில் காந்தாமணி நினைந்து கொண்டிருந்தாள்! அவளுக்கு உறக்கமில்லை. இரவு மணி பத்து இருக்கும். காந்தாவின் தகப்பன் கறுப்பன் அவசரமாகவும், சந்தோஷமாகவும் வீட்டிற்குள் வந்தான். தன் மனைவி குப்பியுடன் சம்பாஷிக்கலானான். சிறுமி காந்தாமணி படுத்திருந்தபடியே தன்னுடைய பெற்றோரின் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

கறுப்பன்:- மங்களகரமான சேதி கொண்டு வந்திருக்கிறேன்.

குப்பி:- அதென்ன விஷயம்?

கறுப்பன்:- எதுவாயிருக்குமென்று நீ யோசித்துப்பார்.

குப்பி:- எனக்கு யோசனையொன்றும் தெரியாது.

கறுப்பன்:- ஊரெல்லாம் பேசிக்கொள்கிறதே? உன் காதுக்கு அந்தச் சேதி இன்னும் எட்டவில்லையா?



குப்பி:- நான் எதைக் கண்டேன்? வீட்டைவிட்டு வெளியே போவதற்கு நேரம் எங்கிருக்கிறது? மகள் கருப்பாயி முந்தாநாள் வரையிலும் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் வீட்டு வேலைகளில் எனக்கு உதவி செய்து வந்தாள். அதுக்கும் வழியில்லாமல் நீங்கள் செய்து விட்டீர்கள்.

கறுப்பன்:- கருப்பாயிக்கு இனிமேலாவது புத்தி வரும். அவள் இனி நம்முடைய சின்ன எஜமான் திசைக்குக் கூடப் போகமாட்டாள்.

குப்பி:- என்னென்னவோ சொல்லுகிறீர்களே? எனக்கு ஒன்றும் புரியவில்லை.

கறுப்பன்:- அட! அசடே! நமது பண்ணையாரின் மகனுக்குக் கல்யாணம் நடக்கப் போகிறது.

குப்பி:- எப்போது?

கறுப்பன்:- இந்த மாதம் 22-ம் தேதியன்று கல்யாண முகூர்த்தம் வைத்திருக்கிறார்கள். இன்னும் 12 நாட்கள் தானிருக்கின்றன. கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் துரிதமாக நடந்து வருகின்றன.

குப்பி:- அப்படியா? மிகவும் சந்தோஷம். நமது பண்ணை வீட்டுக் கல்யாணமென்றால் கேட்கவா வேண்டும்?

கறுப்பன்:- அதற்கென்ன சந்தேகம்? இருபத்தைந்தாயிரம் ரூபாய் செலவு செய்யப்போகிறார்களாம். பண்ணை எஜமான் எனக்கு ஒரு வேலை கொடுத்திருக்கிறார். நானும், இன்னும் பத்துப் பேர்களும் இன்றைக்கே புறப்பட்டுக் காட்டிற்குப் போகிறோம். காட்டிலிருந்து கல்யாணப் பந்தலின் அலங்காரத்திற்காக சில கொடிகள் கொண்டு வரவேண்டுமாம். சீக்கிரமாக எனக்குக் கஞ்சியைக் கொடு. நேரமாகிறது. நான் போகவேண்டும்.

குப்பி:- கல்யாணப் பெண்ணுக்கு எந்த ஊர்?

கறுப்பன்:- இந்த ஊர்தான். கிருஷ்ணய்யர் என்றொருவர் இருக்கிறார். அவர் ஏழைதானும். அவருடைய மகள் கமலம் ரொம்ப அழகுள்ளவளாம். அந்தப் பெண்ணைத்தான் சின்ன எஜமானுக்குப் பேசியிருக்கிறார்கள்.

இவ்வாறு பேசிவிட்டுக் கறுப்பன் கஞ்சியைக் குடித்தான்.

காட்டிற்குச் சென்று ஐந்து தினங்களில் திரும்பி வருவதாகச் சொல்லிவிட்டு கறுப்பன் அப்பாற்பட்டான். தனது பெற்றோரின் சம்பாஷணையைக் கேட்ட காந்தாமணிக்கு அதிர்ச்சியுண்டாயிற்று. அவளுக்கு ஏமாற்றமும், துக்கமும் நெஞ்சை அடைத்தன. தன்னுடைய மனத்துயரை அவள் யாரிடம் சொல்லுவாள்? பெற்றோரோ அவளுக்கு விரோதி. சேரிவாசிகளோ அவளை வேசையென்று மதிக்கலானார்கள். மேல் சாதிக்காரர் அவளை இகழ்ந்தார்கள். அகன்ற உலகத்தில் அவளுக்கு ஆதரவாயிருக்கக்கூடியவன் மதனசுந்தரன் ஒருவன் தான். அவனுக்கும் விவாகம் நிச்சயிக்கப் பட்டிருக்கிறதென்ற செய்தி வந்துவிட்டது. காந்தாமணி மனம் என்ன பாடுபட்டிருக்குமென்பதை வாசக நண்பர்களே இலகுவாக ஊகித்துக் கொண்டு விடலாம். அவளுடைய உள்ளம் மத்தாலடிக்கப்பட்ட தயிரைப்போல் கலங்கிக் கொண்டிருந்தது. "சரி! எல்லாம் தொலைந்தது! என்னென்னவெல்லாமோ எண்ணி நான் ஆகாயக் கோட்டை கட்டினேன். மதனனுடன் இன்பமாக வாழலாமென்று கனவு கண்டேன். கடவுளுக்கு அது சம்மதமில்லை. மதனா! நான் முன்பு கூறியது உண்மையாகி விட்டது பார்த்தாயா? பார்ப்பனுக்கும் பஞ்சம சாதிப் பெண்ணுக்கும் கல்யாணமென்றால் பாழாய்ப்போன இந்த சமூகம் ஒப்புக்கொள்ளுமோ? நடந்த காரியத்தை நினைந்து வருந்துவதால் என்ன பிரயோசனம்? அவரவர் கொடுத்து வைத்தது தானே கிடைக்கும்? மதனா! என்னை நீ மறந்து விட்டாயா? என்னிடம் நீ என்னென்னவெல்லாம் சொன்னாய்? எத்தனை வாக்குறுதிகளை அளித்தாய்? அவையெல்லாம் பொய்யாகி விட்டனவா? வாஸ்தவம்தானே? சாதியபிமானம் சந்நியாசியைத்தானும் விடுமோ? நீ என்னை முற்றாக மறந்து விட்டாலும் சரி. நான் உன்னை மறவேன். என்னை நீ மணந்து கொள்ளவில்லையே என்பதற்காக உன்னை நான் கடிந்து கொள்ளமாட்டேன். நீ என்னுடைய குரு. எனக்கு நீ கல்வியை அளித்தாய். எனது அறிவைக் கூர்மையாக்கினாய். அந்த வகையில் நான் உனக்கு உயிருள்ள வரையிலும் கடமைப்பட்டவளாயிருப்பேன். மதனா! நீ சந்தோஷமாகவும் நிம்மதியுடனும் வாழ்ந்தாலே போதுமானது. அதைக் கேட்டு நான் ஆறுதலடைவேன்.



சீ! சீ! நான் என்ன நினைக்கிறேன்? என்ன சொல்லுகிறேன்? எனது காதலன் மதனசுந்தரன் ஒரு காலத்திலும் பொய்பேச மாட்டானே? சொன்ன சொல்லை மீறவும் மாட்டானே? அவனா என்னை மறந்து இன்னொரு பெண்ணைக் கட்டிக்கொள்வான்? ஐயோ! இதென்ன விபரீதம்! இதை என்னால் நம்பமுடியவில்லையே? சூரியன் மேற்கே உதயமானானென்று கூறினால்கூட அதை நம்பலாம். சத்தியவந்தனான மதனன் வாக்குறுதியை மீறுகிறானென்றால் அதை நம்பமுடியுமோ? என் தந்தை வேண்டுமென்றே பொய்யைச் சொன்னாரா? நான் மதனனை மறந்துவிட வேண்டுமென்பதற்காக இக்கட்டுக் கதையை அவன் கூறினானா? அவ்வாறிருக்க முடியாது. இதில் ஏதோ ஒரு மர்மமிருக்கின்றது. மதனனைக் கேட்காமல் ஆதிசேஷய்யர் விவாகத்தை நிச்சயித்திருக்க வேண்டும். ஐயோ! பண்ணையாருக்குப் பணமும், பதவியுமிருந்து என்ன பயன்? தன் மகனின் குணத்தை அவர் இன்னும் தெரிந்து கொள்ளவில்லையே? திருமண ஏற்பாட்டைக் கேட்டவுடன் மதனன் விரைந்தோடி வருவான்; தன் தந்தையாருடன் சண்டையிடுவான். பிரமாதமான குழப்பம் இந்த கிராமத்தில் உண்டாகி விடக்கூடும். ஐயோ! என்னால் தான் இவ்வளவும் வந்துவிட்டதென்று ஊரார் பேசுவார்களே? அட! தெய்வமே! இதென்ன சோதனை! என்னால் என்ன செய்யமுடியும்? நடப்பவைகளையெல்லாம் பொறுமையோடு சகித்துக் கொண்டிருக்கவேண்டியதைத் தவிர எனக்கு வேறு கதியே கிடையாது. மதனன் என்ன சொல்லுகிறானோ அதன்படியே நான் நடந்து கொள்கிறேன்" என்று காந்தாமணி தனக்குள்ளாக நினைந்து ஒரு முடிவிற்கு வந்தாள்.

பண்ணையாரிடமிருந்து ஆறாயிரம் ரூபாயைக் கைப்பற்றிச் சென்ற நாகராஜன் சிறுமி காந்தாவை எவ்வாறு கடத்திச் செல்லுவதென்று சிந்தித்தான். சேரியில் பிறந்த பெண் வெறும் பயங்கொள்ளியாகத்தானிருப்பாளென்பது அவனுடைய எண்ணம். அதட்டியும், மிரட்டியும் காந்தாமணியை இலகுவாக விரட்டிவிடலாமென்று நாகராஜன் நம்பினான். வெகு சுளுவாக ரூபாய் ஆறாயிரம் தனக்குக் கிடைத்துவிட்டதென்று அவன் ஆனந்தப்பட்டான். சப்இன்ஸ்பெக்டர் நாகராஜனின் வரலாற்றைச் சுருக்க

மாக இங்கே குறிக்க விரும்புகிறேன். அவன் பொல்லாதவன் இரக்கமற்றவன். அவனுக்கு விவாகமாகியிருந்தது. மனைவியை அவன் இழிவாக நடத்தினான். அடிக்கடி அடிதடியில் இறங்கிவிடுவான். புருஷனுடைய கொடுமைகளைச் சகிக்கமுடியாமல் நாகராஜனுடைய மனைவி வேறொரு மனிதனுடன் சிங்கப்பூருக்குக் கம்பியை நீட்டிவிட்டாள். அதன்பின்னர் நாகராஜன் விவாகம் செய்துகொள்ளவில்லை. தனக்கிருந்த அற்பமான அதிகாரங்களைத் துஷ்பிரயோகம்செய்து அநேகம் பெண்களை அவன் கெடுத்தான். நாகராஜன் காமுகன்.

இரவு மணி 12 இருக்கும். கிராம ஜனங்களெல்லோரும் நித்திரையிலிருந்தார்கள். நிலவொளி பிரகாசித்துக்கொண்டிருந்தது. நாகராஜ்ன் போலீஸ்காரர் இருவருடன் புறப்பட்டு சேரியை நோக்கி நடந்தான். காந்தாமணியின் சிறிய வீடு ஒரு ஓரத்திலிருந்தது. வீட்டுக் கதவை போலீஸ்காரரில் ஒருவன் தட்டினான். நடுநிசியில் வீட்டுக் கதவு தட்டப்படுவதை முதற்கண், உறங்காமலிருந்த சிறுமி காந்தாமணி கேட்டாள். அவள் எழுந்து சென்று கதவைத் திறக்கவில்லை. போலீஸ்காரன் படபடவென்று கதவைத் தட்டலானான். இதற்குள் குப்பி எழுந்திருந்துவிட்டாள். கருப்பன் காட்டிற்குப் போகாமல் திரும்பி வந்துவிட்டான் போலும் என்றெண்ணிய் குப்பி அவசர அவ்சரமாக விளக்கை எடுத்துக்கொண்டு வாயிற் கதவைத் திறந்தாள். இரண்டு போலீஸ் ஜவான்களும், இடுப்பில் துப்பாக்கியுடன் சப் இன்ஸ்பெக்டர் நாகராஜனும் நிற்பதைக் கண்டதும் ஏழை குப்பிக்கு நடுக்கமுண்டாகிவிட்டது. அவளுடைய கைவசமிருந்த விளக்கு நழுவிக் கீழே விழுந்துவிட்டது. போலீஸ் அதிகாரிகளென்றால்—அதிலும் அவர்கள் நடு இரவில் வந்தால்—படித்தவர்கள்கூட அஞ்சுவது இயல்பல்லவா? பாவம்! குப்பி என்ன செய்வாள்! அவளுடைய நாவு அசைய மறுத்தது. மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. உடல் கிடுகிடென்று நடுங்கிற்று. நாகராஜன் குப்பியைப் பார்த்து, "இதுதானே கருப்பாயி வசிக்கும் வீடு?" என்று அதிகாரதோரணையில் வினவினான். இதைக் கேட்ட காந்தாமணி விரித்த கூந்தலுடன் வெளியே வந்தாள். போலீசாரைக்கண்டு அவளும் பேராச்சரியமடைந்தாள். பண்ணையார் ஆதிசேஷய்யரு



டைய ஏவுதலின்பேரிலேயே அவர்கள் வந்திருக்கவேண்டுமென்பதைப் புத்திசாலியான காந்தாமணி ஊகித்துக்கொண்டாள். தன்னெதிரே தோன்றிய பதினெண் வயதுச் சிறுமி காந்தாவைக் காமுகன் நாகராஜன் நிமிர்ந்து பார்த்தான். தன்னிடமிருந்த மின்சாரக் கைவிளக்கின் ஒளியை எழில்மிகு காந்தாவின் வதனத்தின்மேல் செலுத்தினான். அவனுக்கும் பேராச்சரியமுண்டாயிற்று. "இவள் சேரியில் பிறந்த பெண்தானா?" என்று தனக்குள்ளேயே அவன் வினவிக்கொண்டான். காந்தாமணி பசும்பொன்னால் வார்க்கப்பட்ட சிலையைப்போல் நின்றுகொண்டிருந்தாள். சுருண்டுசுருண்டு நீண்டு வளர்ந்திருந்த அவளுடைய கூந்தல் முழங்கால்வரையிலும் தொங்கிக்கொண்டிருந்தது. நாகராஜன் அவ்வடிவழகியின் சொரூபத்தைக் கண்டு சொக்கிப்போய்விட்டான். அசட்டுத்தனமாகப் புன்னகைசெய்தான். ஒன்றும் பேசாமல் நின்றுகொண்டிருந்த நாகராஜனை நோக்கி மரியாதையுடன் காந்தாமணி பேசலானாள்.

காந்தா:- ஐயா! போலீஸ் உத்தியோகஸ்தரான நீங்கள் நடுநிசி வேளையில் இங்குவரக் காரணம் என்ன? எங்களுடைய உறக்கத்திற்கு நீங்கள் இடையூறு செய்துவிட்டீர்களே?

நாகரா:- நீதான் கருப்பாயி என்னும் பெண்ணா? உனக்குக் காந்தாமணி என்றொரு பெயரும் உண்டோ?

காந்தா:- ஆம். நான்தான் நீங்கள் குறிக்கும் பெண். உங்களுக்கு என்ன வேண்டும்? என்னை நீங்கள் எதற்காகத் தேடுகிறீர்கள்?

நாகரா:- உன்னிடம் நான் ஒரு விஷயம்பற்றி விசாரிக்கவேண்டியதாயிருக்கிறது. அதற்காகவே வந்திருக்கிறோம்.

காந்தா:— என்னிடம் எதைப்பற்றி விசாரணை செய்யப் போகிறீர்கள்?

நாகரா:- அது பிறகு தெரியும்?. தனிமையாகவும், இரகசியமாகவும் அவ்விசாரணையை நான் நடத்தவேண்டும். ஆகையால் நீ இப்பொழுதே எம்முடன் எமது முகாமுக்கு வரவேண்டும்.

காந்தா:- ஐயா! இதென்ன விநோதமாயிருக்கிறது! இரகசிய விசாரணையா?

நாகரா:- ஆம்.

காந்தா:- என்ன இரகசியம் நமக்குள்ளிருக்கமுடியும்? நான் குற்றவாளியா? போலீஸ் உத்தியோகஸ்தரே! நீங்கள் விரும்புகிற காரியம் என்னவென்பதைத் திட்டமாகச் சொல்லுவீர்களானால் நான் எனக்குத் தெரிந்தவைகளை இங்கேயே அறிவிக்கிறேன். இதற்காக நான் உங்களுடைய முகாமுக்கு வரவேண்டிய அவசியமே கிடையாது.

நாகரா:- பெண்ணே! என்ன சொல்லுகிறாய்?

காந்தா:- ஏன் அதட்டுகிறீர்கள்? நியாயத்தைத்தான் நான் கூறினேன். உங்களுடைய முகாமில் எனக்கு என்ன வேலை? மேலும் வழக்கு விசாரணைசெய்வதற்கும், மனிதரைக் கண்டு பேசுவதற்கும் இதுவா நேரம்? காலையில் வாருங்கள், நாம் பேசிக்கொள்ளலாம்.

நாகரா:- நீ மெத்தப்படித்தவளைப்போலப் பேசுகிறாய். இங்கு வந்திருக்கும் நான் யாரென்பதை அறியமாட்டாய்போலும்!

காந்தா:- ஐயா! உங்களை நான் நன்றாக அறிவேன், நீங்கள் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர். உங்களுக்குள்ள அதிகாரங்களை நீங்கள் எவ்வாறு பிரயோகிக்கவேண்டுமென்பதைத் தெரிந்துகொள்ளாமல் பேசுகிறீர்களே?

நாகரா:- பெண்ணே! உன்னை நான் துன்புறுத்த விரும்பவில்லை. உன்னுடைய நன்மையைமுன்னிட்டு நான் சொல்லுவதைக் கேள். அரைமணிநேரத்திற்குள்ளாக நீ திரும்பி வந்துவிடலாம். வீண் விவகாரம் பேசாதே.

காந்தா:- நிச்சயமாக நான் உங்களுடன் வரவே முடியாது. நீங்கள் போகலாம். என்னைக் கூப்பிட்டு ஏதாவது விசாரிக்க வேண்டுமானால் சட்டப்பிரகாரம் சமன் அனுப்புங்கள்.

இவ்வாறு பேசிவிட்டு காந்தாமணி தன் தாயின் கையைப் பற்றி இழுத்து வீட்டிற்குள் புக எத்தனித்தாள். நாகராஜனுக்குக் கோபம் வந்துவிட்டது. காந்தாமணி இவ்வளவுதூரம் விபரம்தெரிந்தவளாகவும், புத்திசாலியாகவுமிருப்பாளென்று அவன் எதிர்பார்க்கவில்லை. "இவளை நான் இலகுவாக விட்டுவிடுவதா? ஒருகாலத்தும் கூடாது. காந்தாமணியைப்போல அழகுமிக்க பெண்ணை நான் இதுவரை பார்த்தது கிடையாது. ஆம்.



4170

மதனசுந்தரன் இவளிடம் மயங்கியிருப்பது ஆச்சரியமல்ல. இப்பெண்மணியை நானே வயப்படுத்திக்கொள்ளவேண்டும்" என்ற பொல்லாத எண்ணம் காமுகன் நாகராஜனுக்குண்டாயிற்று. வீட்டிற்குள் புக நினைத்த காந்தாவையும், அவளது தாயையும் நாகராஜன் குறுக்கிட்டு வழிமறித்தான். "அடி! உனக்கு அவ்வளவு துணிவா? இன்ஸ்பெக்டர் நாகராஜனைக் கேவலம் சேரிவாசியான நீயா எதிர்க்கிறாய்? மரியாதையாக எங்களுடன் வருகிறாயா? அல்லது உன்னையும் உன் தாயையும் இவ்வீட்டிலடைத்து நெருப்புவைக்கவேண்டுமா?" என்று நாகராஜன் பூச்சாண்டி காட்டினான். குப்பிக்கு அச்சம் மிகுந்துவிட்டது. "எஜமானே! எங்களை ஒன்றும் செய்யாதேயுங்கள். நாங்கள் பரம ஏழைகள்!" என்று குப்பி மன்றாடினாள்.

நாகரா:—நீ காந்தாமணியின் தாயாரா? உன் மகளுக்கு நற்புத்தி சொல்லு. அவளைப்பற்றி மிகப் பெரிய புகார்கள் வந்திருக்கின்றன. அவள் சேரியிலும் இந்த கிராமத்திலும் குழப்பங்களை உண்டாக்குகிறாளாம். கள்ளுக்கடைக்கு முன்னால் நின்று பிரசங்கம் செய்கிறாளாம். சேரியிலுள்ளவர்களும், அக்கிரகாரத்திலுள்ளவர்களும் புகார் மனுக்களை சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஏழைகளான உங்களைத் தண்டனைக்குள்ளாக்காமல் காப்பாற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன் நான் வந்திருக்கிறேன். அதை அறியாமல் உன்மகள் அதிகப்பிரசங்கம் செய்கிறாள். அவளை இன்று எனது முகாமுக்கு அனுப்புகிறாயா? அல்லது உன் வீட்டை அனலுக்கு இரையாக்க வேண்டுமா? டிஸ்டிரிக்ட் கலெக்டர் துரை முகாமில் காத்துக்கொண்டிருக்கிறார். பொழுது விடிந்ததும் அவர் அயலூருக்குப் போக வேண்டுமாகையால் உன்மகளை அழைத்து வரும்படி சொன்னார். மரியாதையாக அவள் வந்து ஏதாவது வாக்குமூலத்தைக் கொடுத்தால் ஒரு கஷ்டமுமிருக்காது. இல்லாவிட்டால் உங்கள் குடும்பம் அதோகதியாகிவிடும்.

இதைக் கேட்டதும் குப்பி தன் மகளின் மீது சீறிப்பாய்ந்தாள். "அடி! பாவி! உன்னால் என்னென்ன கஷ்டங்களெல்லாம் வந்துவிட்டன? நீ படித்ததும் போதும்! நாம் படுகிறபாடும் போதுமடி! என்னடி பிரசங்கம் வேண்டியிருக்கிறது?

கருப்பாயி! நீ பிறந்த என் வயிற்றைக் கிழித்துக் கொள்ளத்தான் வேண்டும். ஐயோ! இந்த எஜமான் சொல்லுகிறபடி கேள். பெரிய துரை வந்திருக்கிறாராம். சீக்கிரமாகச் சென்று அவரிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டுவாடி. பொழுது விடிந்தால் ஊராருக்கெல்லாம் விஷயம் தெரிந்துவிடும். எல்லாரும் சிரிப்பார்கள். இவ்வளவு கேவலங்கள் நமக்கு வந்தது போதுமடி! சர்க்காரின் கோபத்தையும் கொண்டு வந்துவிடாதே!" என்று குப்பி கதறலானாள். என்ன செய்வாள் காந்தாமணி! தன் தாய் என்ன சொன்னாலும் திருப்தியடையமாட்டாளென்பது அவளுக்குத் தெரியும். டிஸ்டிரிக்ட் கலெக்டர் வந்திருக்கிறாரென்று நாகராஜன் கூறியதை அவள் நம்பிவிட்டாள். பொறுப்புள்ள ஒரு அதிகாரியிடம் சென்று பேசினால் நியாயம் கிடைக்குமென்ற எண்ணம் அவளுக்குண்டாயிற்று. தன்னைப்பற்றி ஆதிசேஷய்யர் தான் பொய்ப்புகார்களை அதிகாரிகளுக்கு எழுதியிருப்பாரெனவும் காந்தா நம்பினாள். போலீசாருடன் போகாவிட்டால் குப்பி பெருங் கூச்சல் போடுவாளென்று அஞ்சி, மிகுந்த துயரத்துடன் தன் தாயின் வேண்டுகோளுக்கு அவள் இணங்கினாள். தீண்டாமை என்ற பிசாசு நிரபராதியான தன்னைத் துன்புறுத்துவதை நினைத்து அவள் கண்ணீரை வடித்தாள். "ஐயா! என்னுடைய தாயின் நிர்ப்பந்தத்திற்காக நான் உங்களோடுவருகிறேன். அரை மணிநேரத்தில் என்னை விட்டுவிடுவீர்களா?" என்று காந்தா நாகராஜனிடம் கேட்டாள். தன் காரியம் ஜெயமடைந்து விட்டதென்ற மகிழ்ச்சியில் நாகராஜன், "அப்படியே செய்கிறேனெ"ன்று வாக்களித்தான்.

நிம்மதியற்ற மனத்துடன் காந்தாமணி போலீசாரைப்பின்பற்றி நடந்தாள். ஆறாயிரம் ரூபாயுடன் அழகு மிக்க ஆரணங்கும் தனக்குக் கிடைத்துவிட்டாளென்று நாகராஜன் உடல் பூரித்தான். காலக்கிரமத்தில் எல்லோரும் முகாம் போய்ச் சேர்ந்தார்கள். போலீஸ்காரர்கள் வெளியே நின்று விட்டார்கள். நாகராஜன் காந்தாமணியை ஒரு அறைக்குள்ளிட்டுச் சென்றான். அங்கே ஒருவரையும் காணவில்லை. புன்னகை செய்துகொண்டு நாகராஜன் ஒரு நாற்காலியில் அமர்ந்தான். உடனே ஒரு போலீஸ்காரன் வந்து அறைக்கதவுகளைச் சாத்திப் பூட்டிவிட்-



டான். அப்போதுதான் சிறுமி காந்தாவிற்குச் சந்தேகமுண்டாயிற்று. கடுகடுத்த முகத்துடன் அவள் நாகராஜனை நோக்கினாள். "பெண்ணே! ஏன் நிற்கிறாய்? நாற்காலியிலுட்கார்ந்து கொள்ளு. உனது கால்கள் நோவக்கூடாது. இவ்வறையில் நாமிருவரும் தனிமையாகத் தானே இருக்கிறோம்? எனக்கு நீ மரியாதை செய்ய வேண்டாம். நாம் இருவரும் சந்தோஷமாக வார்த்தையாடலாம்" என்றான் நாகராஜன்.

காந்தா:- ஐயா! டிஸ்டிரிக்ட் கலெக்டர் வந்திருப்பதாகச் சொன்னீர்களே? அது பொய்யா?

நாகரா:- அடி! பைத்தியமே! டிஸ்டிரிக்ட் கலெக்டராவது இவ்வூருக்கு வருவதாவது! நான் தானடி இன்றைக்கு இந்த ஜில்லாவிற்கு அரசன்!

காந்தா:- அதிருக்கட்டும். என்னை எதற்காக இங்கே அழைத்து வந்தீர்கள்? ஏதேதோ விசாரிக்க வேண்டுமென்று சொன்னீர்களே? சீக்கிரமாக விசாரணையை முடியுங்கள்.

நாகரா:- காந்தாமணி! உன்னிடத்திலிருந்து நான் எதைத் தான் ஒளிக்கப்போகிறேன்? இந்த ஊராரெல்லாரும் உனக்கு விரோதிகளாய் இருக்கிறார்கள்.

காந்தா:- இருந்தாலென்ன? அதைப்பற்றி உங்களுக்கென்ன கவலை?

நாகரா:- காந்தா! நீ சிறு பெண். பயமில்லாமல் பேசுகிறாய். சேரியில் பிறந்த பெண்ணான நீ தைரியமாகவும் புத்திசாலித்தனமாகவும் விவகாரம் செய்வது எனக்கு சந்தோஷத்தையளிக்கிறது.

காந்தா:- எனக்கு உங்களுடைய நற்சாக்ஷிப் பத்திரம் தேவையில்லை.

நாகரா:- காந்தாமணி! உன் உயிரை வாங்குவதற்குச் சிலர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். உன்னுடைய எஜமானான பண்ணையார் உன்னைக் கொலை செய்ய வேண்டுமென்றிருக்கிறார்.

காந்தா:- ஓகோ! அப்படியா! நீங்கள் அவரால் ஏவப்பட்டிருக்கிறீர்களென்ற சந்தேகம் எனக்கிருந்தது. அதை நீங்கள் ஊர்ஜிதம் செய்துவிட்டீர்கள். சரிதான்! சப் இன்ஸ்பெக்டரே! கேவலம் பணத்திற்காக நீங்கள் ஏழைப் பெண்ணான என்னைக்

கஷ்டப்படுத்த துணிந்திருக்கிறீர்கள்! சீ! சீ! இதென்ன மானங்கெட்ட உத்தியோகம். போலீஸ் அதிகாரியான நீங்கள் என் போன்ற ஒடுக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும். அவ்வாறிருக்க வேலியே பயிரை அழித்ததைப்போன்று, நீங்கள் எம்மைக் கெடுக்க முயலுகிறீர்கள். ஐயா! உங்களுடைய நோக்கம் தான் என்ன? அதைத் திட்டமாகச்சொல்லிவிடுங்கள்.

நாகரா:- காந்தா! கோபித்துக்கொள்ளாதே. நான் நடந்ததைச் சொல்லி விடுகிறேன் கேள். பண்ணையார் ஆதிசேஷய்யரின் ஒரே மகனை நீ வசப்படுத்திக் கொண்டிருக்கிறாயல்லவா?

காந்தா:- உங்களுக்கு யார் அவ்வாறு சொன்னார்கள்?

நாகரா:- ஊரெல்லாம் சொல்லுகிறது. காந்தாமணி! மதனசுந்தரனுக்கு கல்யாணம் பேசி முடிக்கப்பட்டிருப்பதை நீ அறிவாயல்லவா?

காந்தா:- நன்றாக அறிவேன்.

நாகரா:- அவனை நீ மறந்துவிடு. உன்னுடைய நலத்தைக் கோரியே நான் இவ்வளவு தூரம் சமாதானமாக உன்னிடம் பேசுகிறேன். எவரிடமும் இன்பமாகச் சம்பாஷிக்கும் வழக்கம் எனக்குக் கிடையாது. ஆதிசேஷய்யர் மட்டுமல்ல—இவ்வூரார் அனைவரும் உன்னைக் கொல்லுவதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஊருடன் பகைக்க வேருடன் கெடும் என்பதை நீ அறிய மாட்டாயா? ஆதிசேஷய்யர் பணக்காரர். அவர் சொல்லுவது போல் ஆட எல்லோரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நீ அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளவே முடியாது. மாலையில் நான் ஆதிசேஷய்யரிடம் பேசிக்கொண்டிருந்தேன். உன்னைப்பற்றி அவர் என்னென்னவெல்லாமோ சொன்னார். நீ சமூகத்துரோகியென்றும், உன்னால் பிரமாதமான குழப்பம் இக்கிராமத்தில் ஏற்பட்டுவிடுமென்றும், உன்னை உடனே எப்படியாவது சிறையிலடைத்துப் பூட்டிவிட வேண்டுமென்றும் அவர் என்னிடம் மன்றாடினார். இன்றைக்கு தேசம் இருக்கிற நிலைமையில் பணக்காரரான ஆதிசேஷய்யருடைய வார்த்தைக்குத்தான் அதிகாரிகள் விசேஷ மதிப்பு வைப்பார்கள். அவர்கூறியவைகளை எல்லாம் கேட்ட எனக்கே உன்னிடம் மிகுந்த ஆத்திரமுண்டாயிற்று. உனக்கு விலங்குகளைப்பூட்டி இழுத்துக்கொண்டு வரவேண்டுமென்றும்,



பயங்கரமான குழப்பக்காரியென்று உன்னை நீண்டகாலச்சிறைவாசத்திற்கு அனுப்பிவிடவேண்டுமென்றும் நான் தீர்மானித்தேன். காந்தாமணி! இந்தத் தீர்மானத்துடன்தான் நான் உன்னுடைய வீட்டிற்குவந்தேன். உன்னைக் கண்டேன். கண்டதும் எனது முரட்டு வைராக்கியம் போனவிடம் தெரியவில்லை.

காந்தா:-ஐயா! பண்ணையார் ஆதிசேஷய்யர் உங்களுக்கு ஒன்றும் கொடுக்கவில்லையா?

நாகரா:- அடி! பைத்தியமே! கூலி வாங்காமல் யாராவது வேலைசெய்வார்களோ? உனக்கும் எனக்கும் இனிமேல் வித்தியாசமே கிடையாது. உன்னிடம் பொய்பேசுவானேன்? ஆறுபிரம் ரூபாய்வாங்கினேன்!

காந்தா:- பேஷ்! போலீஸ் இலாக்காவிற்கு நீங்கள்தான் சரியான ஆபரணம்! ஐயா! கூலிவாங்கினீர்கள், உங்களுடைய கடமையை நீங்கள் நிறைவேற்றிவைக்கலாமே? சிறைவாசத்திற்குச் செல்ல நான் சித்தமாயிருக்கிறேன்.

நாகரா:- காந்தாமணி! என்னுடைய மனப்பான்மை உனக்குத் தெரியவில்லையா? உன்னையோ நான் சிறைச்சாலைக்கு அனுப்புவேன்? ஒரு காலத்திலும் மாட்டேன்.

காந்தா:- அப்படியானால் நான் போகலாமா?

நாகரா:- எங்கே?

காந்தா:- எனது வீட்டிற்கு,

நாகரா:-அடி! அசடே! உன்னுடையகுடிசைக்கு நீஎதற்காகவடி போகவேண்டும்? காந்தா! துலக்கமாக நான் பேசவேண்டுமா? உன்னைப் பார்த்தது முதல் என் புத்தி ஒரு நிலையிலில்லை.

காந்தா:- அதை நான் தெரிந்துகொண்டேன்.

நாகரா:- எவ்வாறு தெரிந்துகொண்டாய்?

காந்தா:- சுயபுத்தியும், நல்லறிவுமுள்ளவர்கள் உங்களைப் போல பேசுவார்களா?

நாகரா:- காந்தாமணி! என்னைப் பரிகாசம்செய்யாதே. நான் உனக்கு அடிமை! நான் உன்னைப்போலும் ஒரு பெண்ணை இதுவரையிலும் பார்த்ததே கிடையாது. நீதான் என்னுடைய உயிர். கண்மணி! என்னைப் பார்க்கிலும் மதனசுந்தரன்எந்த வகையிலடி சிறந்தவன்? நீ அவனையே நம்பிக்கொண்டிருந்தாயே? அவன் என்னசெய்திருக்கிறான் பார்த்தாயா? அவன்கமலம்என்ற

பெண்ணைக் கட்டிக்கொள்ளப்போகிறான். அவன் உன்னை மறந்துவிட்டான். நம்பிக்கைமோசம்செய்த அவனை நீ இனிமேல் கனவிலும் கருதலாமோ? கண்மணி! ஆதிசேஷய்யரும், கிராமவாசிகளும் பேசுவதைப் பார்த்தால் நீ மதனனுடன் சேர்ந்து வாழவே முடியாதுபோல் தோன்றுகிறது. இந்தச் சங்கடங்களெல்லாம் தேன் மொழிப் பாவையான உனக்கு எதற்காக வேண்டும்? இதோ பார்! நான் உன்னை அக்கினி சாக்ஷியாக விவாகம் செய்துகொள்ளுகிறேன். எனக்கு என்னகுறை? நல்ல உத்தியோகமிருக்கிறது. போதியவளவு பணத்தையும் நான் தேடிவைத்திருக்கிறேன். நீ இராணியைப்போல சொகுசாக என்னுடன் ஆயுள்பரியந்தம் வசிக்கலாம். கண்மணி! சந்தோஷகரமான பதிலை அளிக்கமாட்டாயா?

காந்தா:- அளிக்காவிட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

நாகரா:-உன் பாதங்களில் எனது பிராணனை விட்டுவிடுவேன்!

காந்தா:-நிச்சயமாக?

நாகரா:-ஆம்.

காந்தா:- ஐயா! என்றைக்காவது ஒருநாள் மனிதன் இறந்துபோகத்தான் வேண்டும். நாளைக்குப்போகிற ஜீவன் இன்றைக்கே போய்விட்டால் என்ன சேதம் வந்துவிடும்?

நாகரா:- காந்தாமணி! உன்னுடைய கனிவாயினால் என்னை மாண்டுபோகும்படியா சொல்லுகிறாய்? ஐயோ! எனது வாழ்வும் தாழ்வும் உன் கைவசமிருக்கின்றது. கண்மணி! என் மனத்திற்குகந்த நாயகி ஒருத்தி இதுவரையிலும் கிடைக்கவில்லை. உன்னை நான் இழக்கவேமுடியாது. இது நிச்சயம்.

காந்தா:- இன்ஸ்பெக்டரே! நீங்கள் இவ்வாறு பேசுவது சரியல்ல. முன்பின் அறியாத ஒரு யுவதியிடம் இவ்வாறுதான் சம்பாஷிக்க வேண்டுமென்பதை நீங்கள் தெரிந்துகொள்ளவில்லையே?

நாகரா:- காந்தா! உன் நெஞ்சம் கல்லால் சமைக்கப்பட்டிருக்கிறதா? உன் திருமுகத்தைக் கண்டதிலிருந்து எனக்கு ஒரு விஷயத்திலும் புத்தி செல்லவில்லையடி. இதுவரை நான் எவரிடமும் இவ்வளவு பணிவுடன் பேசினதே கிடையாது. என்னை நீ ஏற்றுக்கொள்ளமாட்டாயா?



காந்தா:-ஐயா! என்னிடம் தகாத வார்த்தைகளைச் சொல்லாதீர். இதற்காகத்தான் என்னைத் தனிமையாக இங்கு அழைத்துவந்தீர்களா?

சப்இன்ஸ்பெக்டர் நாகராஜன் பொறுமையை இழந்துவிட்டான். எவ்வளவோ பணிந்து கேட்டும் கீழ்ச்சாதிப் பெண்ணான காந்தாமணி எதிர்த்துப் பேசவா? என்று அவன் ஆத்திரமடைந்தான். பலாத்காரத்தைப் பிரயோகித்தேனும் காரியத்தைச் சாதித்துவிடவேண்டுமென்ற எண்ணம் அவனுக்குண்டாயிற்று. உண்டானதும் அவன் நாற்காலியிலிருந்து எழுந்தான். "அடி! பெண்ணே! உனக்கு இவ்வளவு தெம்பா? சேரியில் பிறந்த சண்டாள வகுப்புச் சிறுமியான நீயா என்னை எதிர்த்துப் பேசினாய்? நான் யாவனென்பதை நீ அறியமாட்டாய்போல் தோன்றுகிறது. அடி! உன்னிடம் எனக்கு என்னை அறியாமலே ஏற்பட்ட அன்பின் மிகுதியினால் இவ்வளவுநேரம் சாப்தீகமாகப் பேசினேன். அதை நீ தெரிந்துகொள்ளவில்லை. போலீஸ் இன்ஸ்பெக்டர் நாகராஜன் நினைத்த காரியத்தை எப்படியும் முடித்துக்கொண்டுவிடுவான். காந்தாமணி! வேண்டாம்! வேண்டாம்! அநியாயமாகக் கெட்டொழிந்துபோய்விடாதே. என்னுடைய பகைக்கு இலக்கானவர்கள் ஒருவரும் உருப்படியானதில்லை. கடைசிமுறையாக உன்னை நான் எச்சரிக்கைசெய்கிறேன். உன்னுடைய இன்றைய நிலைமை என்னவென்பதைச் சிந்தித்துப் பார். உனது பெற்றோர் உன்னை வெறுக்கிறார்கள். உன்னினத்தார் உன்னை வேசை யென்று இகழ்கிறார்கள். மேல்சாதியாரோ உனது மரணத்தை விரும்புகின்றனர். பண்ணையார் ஆதிசேஷய்யர் உன்னை அப்புறப்படுத்த பதினாயிரக்கணக்கான பணத்தை அள்ளிவீசச் சித்தமாயிருக்கிறார். நீ நம்பிக்கொண்டிருக்கும் வாலிபன் மதனசுந்தரனும் உன்னைக் கைவிட்டுவிட்டான். அவனது சம்மதத்துடனேயே கல்யாணத்தை ஆதிசேஷய்யர் நிச்சயம்செய்திருக்கிறார். காந்தாமணி! நீ நிற்கதியாய் இருக்கிறாய். என்னால் மட்டும்தான் உனக்கு விமோசனம் கிடைக்க வழியிருக்கின்றது. என்ன சொல்லுகிறாய்?" என்று கடுகடுத்த முகத்துடன் நாகராஜன் வினவினான்.

காந்தா:- ஐயா! நான் அனாதையாக எங்கேனும் போய்விடுகி

றேன். என் பொருட்டு நீங்கள் ஏன் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்கிறீர்கள்?

நாகரா:- காந்தா! எனக்கு நீ இணங்கவேமாட்டாயா?

காந்தா:- முடியாது.

நாகரா:- சரி! நீ என்னசெய்வாய்! உன் தலைவிதி இவ்வாறிருக்கின்றது! காந்தாமணி! இங்கு நீ தனிமையாயிருக்கிறாய். உன்னையும், என்னையும்தவிர இவ்வறையில் வேறொருவருமில்லையென்பதைக் குறித்துக்கொள். உன்னை வாரியணைந்து, உனது கற்பை நான் பலாத்காரமாகச் சிதைத்துவிடுவேன். அவ்வாறு செய்வது எனக்கோர் பிரமாதமான காரியமல்ல; அப்பால் நான் உன்னை என்னசெய்வேன் தெரியுமா? சிறைச்சாலைக்கு உன்னை நான் அனுப்பிவிடுவேன். எத்தனையோவிதமான பழிகளை உன் தலையில் சுமத்துவதற்கு எனக்குத் தெரியும். நீ எந்தக்காலத்திலும் மதனசுந்தரனுடன் வாழமுடியாதபடி நான் தடுத்துவிடத் தீர்மானித்திருக்கிறேன். உன்னுடைய வாழ்க்கையை நான் முற்றாகப் பாழாக்கிவிடுவேன். அடி! சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். இன்றிருந்து நீ எனக்கே சொந்தமானவள். நீ எனக்கு மனைவி; ஆசை நாயகி. அவ்வாறிருந்து இன்பமாகவும், சுகமாகவும் வாழ்வதற்கு உனக்கு விருப்பமில்லையாயின் ஆயுள்பரியந்தம் நீ இன்பமாக வாழமுடியாமலே நான்செய்து விடுவேன். எனது வேட்கையையும் நான் எளிதாக இந்த நிமிஷத்திலேயே பூர்த்தி செய்து கொண்டு விடுவேன். காந்தா! நான் பூச்சாண்டி காட்டுகிறேனென்று நினைக்காதே. உன்னைத் தவிர வேறொரு பெண்ணாயிருந்தால் அப்பொழுதே அவளை நான்கெடுத்திருப்பேன். இனியேனும் பிணங்காமல் எனது நோக்கத்திற்கு இணங்குவாயா?

பாவம்! காந்தாமணி இவ்வார்த்தைகளைக் கேட்டதும் நடுநடுங்கினாள். தனது பதட்டத்தை அவள் வெளிக்காட்டவில்லை. தன்னுடைய நிற்கதியான நிலைமையை அவள் நிதானத்துடன் சிந்தித்துப் பார்த்தாள். " அட பாவமே! பட்டகாலிலே படும், கெட்டகுடியே கெடுமென்று சொல்லுவது உண்மையாகி விட்டதே. எத்தனை இக்கட்டுகள் ஒன்றன்பின்னொன்றாக வருகின்றன. தெய்வமே! ஏ பாழும் தெய்வமே! தீண்டத்தகாதவர் என்ற சாதியில் பிறந்த குற்றத்திற்காக என்னை நீ இவ்வளவு கொடுமையாகத்



தண்டிக்கிறாயா? சாதிப்பேய் என்னைப் புடைத்து விடும் போல் தோன்றுகிறது. இப்பொழுது நான் என்ன செய்வது? காமப்பிசாசைப் போலிருக்கும் நாகராஜனை எதிர்த்தால் மோசம்வந்துவிடுமென்பது நிச்சயம். அவன் பலிஷ்டன். நானோ சிறுபெண். அவன் பலாத்காரத்தை உபயோகித்தால் என்னால் தப்பித்துக் கொள்ளவே முடியாது. மூர்க்கனான அவன் என் வாழ்க்கையை அறவே பாழாக்கி விடுவான். மானபங்கம் ஏற்பட்ட பின்னர் பிராணனை நான் வைத்துக்கொண்டிருக்க மாட்டேன். நாகராஜனுடன் விவகாரம் பேசுவதால் பலன் கிடைக்கமாட்டாது. இவனிடமிருந்து தந்திரமாகத்தான் தப்பித்துக் கொள்ள வேண்டும். பிறகு மதனசுந்தரனுக்குத் தந்தியைக் கொடுத்து அவனை வருவிக்கிறேன். அது தான் சிறந்த உபாயம்" என்று அறிவாளியான காந்தாமணி நிச்சயித்துக் கொண்டாள். கவலையையும், துக்கத்தையும் விடுத்தாள். நாகராஜனைப் பார்த்து நகைத்தாள். "பேஷ்!" என்று அவள் அவனை மெச்சினாள்.

நாகரா:- பெண்ணே! என்ன தீர்மானத்திற்கு வந்தாய்?

காந்தா:- தீர்மானமென்ன இருக்கிறது? நீங்கள் சொல்லுவதெல்லாம் சரியென்று நான் ஆமோதிக்கிறேன். ஆனால் ஒரு விஷயம்.

நாகரா:- கண்மணி! என்ன விஷயம்?

காந்தா:- உங்களிடமிருந்து உண்மையை ஒளிப்பானேன்? நான் மதனசுந்தரனை உண்மையில் நேசிக்கவில்லை. அவன் பணக்காரனாயிற்றே யென்றுதான் அவனோடு பழகினேன். அவனோ என்னை ஏமாற்றிவிட்டு வேறொரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளப்போகிறான். நாளைக்கு அவன் வந்து என்னைத் தொந்தரவு செய்வானே?

நாகரா:- இவ்வளவு தானா? நான் இருக்கும்பொழுது எந்தப் பயலடி உன்னை அணுகமுடியும்?

காந்தா:- என் ராஜாவே! உங்களிடம் நான் இதுவரை வாதாடினதை விகற்பமாக நினைக்கப் படாது. கேட்டவுடன் கல்யாணத்திற்கு நான் சம்மதித்து விட்டால் நீங்கள் என்னை அற்பமாக நினைத்து விடுவீர்களல்லவா? அதற்காகத்தான் கொஞ்சம் விவகா

ரம் பேசிப்பார்த்தேன். உங்களுக்குக் கோபம் வந்துவிட்டது. நாளைக்கு நாமிருவரும் சதிபதிகளாக வாழும் பொழுதும் இப்படித்தான் என்னை அடிக்க வருவீர்களோ? ஆனாலும் இப்படிக் கோபித்துக் கொள்ளலாமா?

நாகரா:- கட்டிக்கரும்பே! உன்னிடமா நான் கோபிப்பேன் ஒருகாலத்தும் மாட்டேனடி!

காந்தா:- உங்களிடம் ஒரு வரம் கேட்கிறேன். தருவீர்களா?

நாகரா:- நீ எதைக் கேட்டாலும் தருகிறேன். ஏன் சந்தேகப்படுகிறாய்?

காந்தா:- பாருங்கள்! பண்ணையார் ஆதிசேஷய்யர் என்னை மிகவும் கேவலமாகப் பேசினார். அவருடைய மகன்—அந்த ஏமாற்றுக்காரன்-மதனசுந்தரனுக்கு என்ன துணிவு பாருங்கள்! என்னை அவன் ஆசைவார்த்தைகளைச் சொல்லி வஞ்சித்திருக்கிறான். இவ்வூரார் யாவரும் என்னை அலக்ஷியமாக நினைத்து இகழுகிறார்கள். இவ்வளவு பேர்களது கண்முன்னால் என்னை நீங்கள் கௌரவப்படுத்த வேண்டும்.

நாகரா:- பேஷ்! கண்மணி! நீ க்ஷத்திரிய குலத்தில் பிறந்திருக்க வேண்டும். அப்படியே செய்கிறேன். உனது அபிப்பிராயம் என்ன?

காந்தா:- வஞ்சகன் மதனசுந்தரனுக்கு இம்மாதம் 22ம் தேதி விவாகம் நடக்கப் போகிறதல்லவா? அதே நாளில் அதே முகூர்த்தத்தில் நீங்கள் எனக்கு இந்த ஊரில் வைத்துத் தாலிகட்ட வேண்டும். வெகு விமரிசையாக நமது கல்யாணம் நடக்க வேண்டும். பண்ணையார் உங்களுக்கு ஆறாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறாரல்லவா? அதை வைத்துக் கொண்டு கல்யாண ஏற்பாடுகளைச் செய்யுங்கள். பந்தல் போடுவதற்கு நாளைக்கே ஆடர் கொடுங்கள். அப்படியானால் தான் எனக்கு மனது குளிரும்.

நாகரா:- காந்தா! உன் வார்த்தைக்கு மறுவார்த்தையுண்டா? அவ்வாறே நடக்கும். சந்தேகமே வேண்டாம்.

காரியம் கைகூடி விட்டதென்ற மகிழ்ச்சியில் நாகராஜன் எழுந்துசென்று செல்வி காந்தாவின் வலக்கரத்தைப் பற்றினான். காந்தாமணி புன்னகை செய்தவண்ணம் அவனை நோக்கி "என்ன



அவசரம்? ஆக்கப் பொருத்தவருக்கு ஆரப் பொருக்க முடியாதோ? " என்று சொல்லிக் கொண்டு கையைப் பின்வாங்கிக் கொண்டாள்.

நாகரா:- கண்ணே! என் மடிமீது வந்து அமர மாட்டாயா?

காந்தா:- நான் இப்போது மாதவிடாயாயிருக்கிறேன். இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் நீங்களும், நானும் மனம்போல் சுகிக்கலாம். ஆனாலும் ஆண்பிள்ளைகளுக்கு இந்த அவசரம் கூடாது. என் ராஜாவே! கிணற்று நீரை வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விடுமா? இரண்டு நாட்கள் பொறுத்து கொள்ளுங்கள். மாதவிடாய்க்காலம் முடிந்ததும் என் வீட்டிற்கு வாருங்கள். நமது விவாக விஷயம் இரகசியமாயிருக்கட்டும். சீக்கிரமாக பந்தல்களெல்லாம் போட்டுமுடியுங்கள். என்னை வீட்டில்கொண்டு போய் விடமாட்டீர்களா?

ஆனந்தமாகவும், இனிமையாகவும், காந்தாமணி பேசியதைக்கேட்டு நாகராஜன் மருண்டு போனான். அவளிஷ்டப்படியே காந்தாவை அவளது வீடு கொண்டு சேர்த்தான். "கண்மணி! இரண்டு நாட்களும்எனக்கு இரண்டு யுகங்களாயிருக்கும்!" என்றான் நாகராஜன். "எனக்கோ ஒரு நிமிஷம் ஒரு யுகமாய்த் தோன்றுகிறது" என்றாள் காந்தாமணி! "கட்டழகி காந்தாமணி எனக்கே சொந்தம்! என்று ஆனந்தத் தாண்டவமாடிக்கொண்டு நாகராஜன் தனது முகாமிற்குத் திரும்பிப் போய்ச்சேர்ந்தான்.

## அத்தியாயம் 5'

### போ! போ! போய்விடு!

"போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் நாகராஜனின் உதவியிருக்கும் பொழுது நமக்கென்ன கவலை? கருப்பாயி இருந்த விடம் தெரியாமல் போய்விடுவாள். நாம் நினைத்தகாரியம் கைகூடி விடும்," என்று பண்ணையார் ஆதிசேஷய்யர் சந்தோஷமாயிருந்தார். கல்யாண ஏற்பாடுகள் வெகு தடபுடலாக நடந்து கொண்டிருந்தன. "என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! பணத்திற்குப்பணம்! பெண்ணுக்குப்பெண்! அடடா! என்ன அழகு! என்ன சிங்காரம்! பஞ்சமர்வதியும் சேரியில் இத்தகைய ஒரு அழகு சுந்தரி எனக்கென்றே பிறந்திருக்கிறாள். ஆம்! இரண்டு நாட்கள்! இரண்டு தினங்கள் சென்றதும் கண்மணி காந்தாவை ஆசை தீர நான் அணைவேன்! என்று எண்ணியெண்ணிக் காமுகன் நாகராஜன் ஆகாயக் கோட்டை கட்டிக் கொண்டிருந்தான். "ஒரு வகையாக சப்இன்ஸ்பெக்டர் நாகராஜன் கையிலிருந்து தப்பித்துக் கொண்டோமே? அதுவே போதுமானது. திக்கற்றவருக்குத் தெய்வம்தான் துணை. இனிமேல் நான் தாமதிக்கக் கூடாது. நெருக்கடி பலத்து விட்டது. இதைச் சமாளித்துக்கொள்ள எனக்குச் சக்தியில்லை. நாகராஜன் போலீஸ் உடையுடன் வந்தால் என்னினத்தாரான சேரிவாசிகள் ஓடி ஒளித்துக் கொண்டு விடுவார்கள். எனக்கு அவர்கள் ஒரு உதவியையும் செய்யமாட்டார்கள். மேல்சாதியாரோ தீண்டத்தகாத வகுப்பில் பிறந்த என்னைக் கேவலம் புழுவிலும் இழிவாக மதிக்கிறார்கள். அவர்களும் என்னைக் காப்பாற்ற மாட்டார்கள். வீரன் மதனசுந்தரன் வந்தாலொழிய விமோசனமே கிடையாது. அவனுக்கு நான் இதோ தந்தியை அனுப்புகிறேன்" என்று சிறுமி காந்தாமணி நிச்சயித்தாள். பொழுது விடிந்ததும் மெதுவாக அடுத்த ஊரிலுள்ள தந்தி ஆபிசுக்குச் சென்று மதனனுக்கு அவசரத் தந்தியை அவள் கொடுத்தாள்.

இனி, சென்னையில் மதனசுந்தரன் என்ன செய்கிறானென்பதைக் கவனிப்போம். ஞாயிற்றுக்கிழமையாகையால் அவன் கலாசாலைக்குப்போகவில்லை. தன்னுடைய அறையிலிருந்தபடியே அவன் ஹரிஜன் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தான். அதில் மகாத்மாஜி கீழ்க்கண்டவாறு ஒரு கட்டுரையில் வரைந்திருந்தார்.

"ஹரிஜனங்களுக்குக் கல்வியளிக்கப்பட்டால் அவர்கள் சாதி



ஹிந்துக்களைவிட அழகாக வாழ்க்கையை நடத்துவார்கள். இயற்கையிலும், சிருஷ்டியிலும் ஒடுக்கப்பட்டோர் மற்ற சாதியாருக்கு இளைத்தவர்களல்ல. அவர்களை அஞ்ஞானத்தில் சாதி இறுமாப்புள்ளவர்கள் ஆழ்த்திவைத்திருக்கிறார்கள்................"

எம். கே. காந்தி.

இதை மதனசுந்தரன் படித்தான். உடனே அவனுக்குக் காந்தாமணியின் ஞாபகம் வந்துவிட்டது. "ஆம்! ஆம்! உண்மைதான் மகாத்மஜி சொல்லுவது முற்றிலும் நியாயம். அதை நான் அனுபவ பூர்வமாக தெரிந்து கொண்டிருக்கிறேன். என் அருமைக் காந்தாவுக்கு நான் ஆரம்பக் கல்வியைப் போதித்தேன். அவ்வளவுதான். பிறகு அவளாகத் தனது கல்வியறிவைப் பெருக்கிக் கொண்டிருக்கிறாள். எவ்வளவு நுண்ணிய அறிவு! என்ன உயர்ந்த குணம்! அவள் இனிமையாகப் பேசுகிறாள். அழகாய்ப் பாடுகிறாள். அவளைவிட பிராமண சாதிப் பெண்கள் எந்தவகையில் உயர்ந்தவர்கள்? இன்னும் எத்தனையோ காந்தாமணிகள் ஒடுக்கப்பட்டோர் சமூகத்திலிருப்பார்கள். ஐயோ! ஏழை மக்கள்—பரம சாதுக்கள்—எவருக்கும் எந்தவிதமான துன்பத்தையும் நினைக்காத சகோதரர்கள்—அநியாயமாக நமது நாட்டில் மிருகங்களைப்போல நடத்தப்படுகிறார்களே? அடி! காந்தா! உன்னிடமிருந்து இன்று கடிதம் வரவேண்டுமே? ஏன் இன்னும் தபால்காரனைக் காணோம்?" என்று மதனசுந்தரன் தனக்குள் வினவிக் கொண்டிருக்கும் பொழுதே தபாற்சேவகன் ஒரு லெட்டரைக் கொண்டுவந்து கொடுத்தான். மேல்விலாசத்தைப் பார்த்ததும் அது காந்தாமணியினால் தான் வரையப்பட்டதென்பது மதனனுக்குத் தெரிந்து விட்டது. மிகுந்த ஆவலுடன் கடிதத்தைப் பிரித்துப் படித்தான். புன்னகை தவழ்ந்து கொண்டிருந்த அவனுடைய முகம் வாட்டமடைந்தது. பெருமூச்சுவிட்டபடியே அவன் நாற்காலியிலுட்கார்ந்தான். திரும்பத் திரும்ப காந்தாவின் கடிதத்தை அவன் படித்தான்.

"ஆஹா! என்ன இது? ஆதித்தனூரில் பெரிய பரபரப்பு ஏற்பட்டிருக்கிறதா? காந்தாவுக்கு வாய்ப்பூட்டா? தடையுத்திரவுகளா? அவள் வசைமொழிகளால் இகழப்படுகிறாளா? ஐயோ! இதென்ன கொடுமை! அடி காந்தா! ஆம்! ஆம்! நீ கேட்பது

சரிதான். "நான் ஒடுக்கப்பட்ட சாதியில் பிறந்தது என் குற்றமா? இல்லையே? என்றாலும் சமூகம் என்னைத் தண்டிக்கிறது," என்று நீ எழுதியிருக்கிறாய். காந்தாமணி! உன்னுடைய இவ்வார்த்தைகள் மேல்சாதியானான எனது நெஞ்சத்தைப் பிளக்கின்றன. சமூகம்! ஜனசமூகம்! என்ன முட்டாள் தனம்? காந்தாமணி யாருக்கு என்ன குற்றத்தைச் செய்தாள்? அவளால் எவருக்கு என்ன கேடுவந்து விட்டது? ஒன்றுமில்லையே? அவள் என்னோடு சிநேகமாயிருக்கிறாள். நானும் அவளும் காதலராயிருக்கிறோம். இவ்வளவு தானே? ஏ! ஹிந்து சமூகமே! இது பெரியவோர் குற்றமா? ஒரு யுவனும் யுவதியும் காதலராயிருப்பது பாபமா? இதற்காக ஒரு பெண்ணை நசுக்கலாமா? அப்பப்பா! இந்தக் கொடுமையை என்னால் சகிக்க முடியவில்லை. ஐயோ! காந்தாமணி நிரபராதி. அவள் என்னிடம் முறையிட்டுக் கொண்டாள். சேரிவாசிகளும், அக்கிரகார வாசிகளும் இகழ்ச்சியாகப் பேசுவதாக அவள் கூறினாள். எதிர்காலம் பயங்கரமாயிருக்கிறதென்றும் அவள் கண்ணீரை வடித்தாள். சாதி ஹிந்துக்களே! உங்களுக்கு இரக்கமில்லையா? மனச்சாட்சியென்பது கிடையாதா? நியாய உணர்ச்சி இல்லையா? திருமணமென்பது காந்தாவின் சொந்தக்காரியம். அதில் தீண்டாமைப் பிசாசு புகுந்துவிட்டதே? தன்னிஷ்டப்பிரகாரம் விவாகம்செய்துகொள்ளும் பாத்தியதைகூட ஹரிஜன சகோதரிக்குக் கிடையாதா? காந்தாமணி! என்பொருட்டு,-எனக்காக-நீ கஷ்டங்களை அனுபவிக்கிறாய். இவ்வளவும் என் தந்தையினால் தான் நேர்ந்திருக்கவேண்டும். ஆம்! அதற்குச் சந்தேகமே கிடையாது! தந்தை! என்ன மனிதன்! சாதிச் செருக்கு! பணத் திமிர்! இவ்விரண்டையும் நீங்கலாக வேறொன்றையும் என் தகப்பனிடம் நான் காணவில்லை. காந்தாமணி! இனி நான் பொறுக்கமாட்டேன். என்னை நீ உடனே வருமாறு எழுதவில்லை. உனது சகிப்புத்தன்மையை மெச்சினேன்! ஆனால், கண்மணி! நீ வருந்தும்போது நான் எவ்வாறு இங்கே நிம்மதியுடனிருப்பேன்? நான் என்ன செய்வது? உடனே ஆதித்தனூர் போவதா? அல்லது விபரம் என்னவென்று காந்தாவுக்குத் தந்திகொடுத்துக் கேட்பதா?" என்றெல்லாம் எண்ணிய மதனசுந்தரன் தன்னுடைய



அறையில் அங்கும் இங்கும் உலவிக்கொண்டிருந்தான். அந்நேரத்தில் யாரோ ஒருவர் அறைக் கதவைத் தட்டினார். 'யார் அது?' என்று கோபத்துடன் கேட்டுக்கொண்டே மதனன் கதவைத் திறந்தான். ஆதித்தனூர் அப்பய்யா தீக்ஷதர் குண்டலமும் காதுமாக எதிரே தோன்றினார்!

தீக்ஷதரைக் கண்டதும் மதனன் ஆச்சரியமடைந்தான். வைதீகப் பார்ப்பானுக்கும் தனக்கும் வெகுதூரமென்பது அவனுக்குத் தெரியுமல்லவா? சென்னைக்கு வந்தவிடத்தில் தன்னிடம் ஏதாவது யாசகம் கேட்டுப் பெறுவதற்கு தீக்ஷதர் வந்திருக்கிறார்போலும் என்றே மதனன் நினைத்தான். காந்தாமணியின் கடிதத்தில் கண்டபடி ஊரில் ஏதாவது கலவரம் நடந்ததாவென்பதை தீக்ஷதரிடம் கேட்டு அறியலாமென்ற எண்ணமும் மதனனுக்கு உண்டாயிற்று. தனது மனச் சஞ்சலத்தை ஒருவாறாக மறைத்துக்கொண்டு மதனன், "தீக்ஷதரே! உள்ளே வாரும்" என்று அழைத்தான். தீக்ஷதர் ஒரு நாற்காலியிலுட்கார்ந்துகொண்டார். சற்று அப்பாலிருந்த மேஜையின்மேல் மதனன் அமர்ந்தான். தீக்ஷதரின் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. வந்த காரியத்தை வெளியிட்டால் மதனன் என்ன சொல்லுவானோ? என்ன செய்வானோ? என்று அவர் அஞ்சினார். நாவெடுத்துப் பேச அவருக்குத் தைரியமில்லை. மதனன் சம்பாஷணையை ஆரம்பித்தான்.

மதனன்:- தீக்ஷதரே! எப்போது சென்னைக்கு வந்தீர்?

தீக்ஷதர்:- இப்போதுதான் வந்தேன். நேரடியாக ரயிலிலிருந்துதான் வருகிறேன்.

மதனன்:- அப்படியா! பசியுடனிருப்பீர்களே? சாப்பாடு கொண்டுவரச் சொல்லட்டுமா?

தீக்ஷதர்:- இப்போது வேண்டாம். நீராடினபிறகுதான் நான் சாப்பிடுவேன். ரயில்வே நிலையத்தில் பழமும் பாலும் கிடைத்தன. அவற்றை அருந்தியதால் எனக்கு இப்போது பசியில்லை

மதனன்:- எங்கிருந்து வருகிறீர்கள்?

தீக்ஷதர்:- நேராக ஊரிலிருந்துதான் வருகிறேன்.

மதனன்:- சென்னையில் ஏதேனும் அலுவலை முன்னிட்டு வந்தீர்களா?

தீக்ஷதர்:- ஆம்.

மதனன்:- தாமதம் உண்டா?

தீக்ஷதர்:- வந்தகாரியம் முடிந்தால் போகவேண்டியது தான். பட்டணவாசம் எனக்கெல்லாம் ஒத்துப்போகுமோ?

மதனன்:- உங்களுடைய அலுவல் என்னவென்பதை நான் கேட்க விரும்பவில்லை. அது உங்களது சொந்தக் காரியம். என்னால் உங்களுக்கு ஏதாவது உதவி வேண்டுமானால் சொல்லுங்கள். என்னாலானதைச் செய்கிறேன்.

தீக்ஷதர்:- ரொம்ப சந்தோஷம்! உன்னால்தான் நான் வந்த விஷயம் கைகூடவேண்டும்!

மதனன்:- சரி! அதற்கென்ன? நியாயமான உதவிசெய்ய நான் காத்துக்கொண்டிருக்கிறேன். தீக்ஷதரே! ஊரிலிருந்து எப்போது புறப்பட்டீர்?

தீக்ஷதர்:- நேற்று இரவுதான்போட்மெயிலில் புறப்பட்டேன்.

மதனன்:- ஊரில் எல்லோரும் க்ஷேமம்தானே?

தீக்ஷதர்:- ஒரு குறைவுமில்லை. உன் தகப்பனார், தாயர் யாவரும் சௌக்கியமாயிருக்கிறார்கள்.

மதனன்:- நமது கிராமத்தில் ஏதாவது விசேஷம் உண்டா?

தீக்ஷதர்:- அப்படியொன்றும் இல்லையே? ஏன் அவ்வாறு கேட்கிறாய்?

மதனன்:- காரணமில்லாமல் கேட்பேனா?

தீக்ஷதர்:- எனக்கு ஒன்றும் தென்படவில்லையப்பா. நீ கேட்பதுதான் புதுமையாயிருக்கிறது.

மதனன்:- தீக்ஷதரே உம்முடைய செவிக்கு ஊர் வம்புகளெல்லாம் எட்டுமே? நீர் ஒரு விஷயமும் கேள்விப்படவே இல்லையா?

தீக்ஷதர்:- அப்படிப் பிரமாத காரியம் எதுவும் நடந்துவிடவில்லை. நீ ஏதாவது கேள்விப்பட்டாயா?



மதனன்:- ஆம், கேள்விப்பட்டேன். அதுதானே உம்மிடம் வற்புறுத்திக் கேட்கிறேன்?

தீக்ஷதர்:- ஊரிலிருந்து யாராவது வந்தார்களா?

மதனன்:- ஒருவரும் வரவில்லை. ஆனால் லெட்டர் வந்தது.

தீக்ஷதர்:- பண்ணையார்வாள் ஏதாவது எழுதியிருக்கிறார்களோ?

மதனன்:- இல்லை! என் தகப்பனார்தான் எனக்குக் கடிதம் எழுதுவதை நிறுத்திவிட்டாரே! அதிருக்கட்டும் தீக்ஷதரே! நம்முடைய கிராமத்தில் ஏதாவது கலவரம் நடந்ததா?

தீக்ஷதர்:- கலவரமா? அப்படியொன்றுமே கிடையாதே?

மதனன்:- உமக்கு விஷயமொன்றும் தெரியாதுபோலிருக்கிறது.

தீக்ஷதர்:- என்ன விஷயமென்பதை நீதான் சொல்லக்கூடாதா?

மதனன்:- விஷயமா? என்னைப்பற்றின சங்கதிதான். நான் வர்ணாசிரம தர்மத்தையும், சாதிக் கட்டுப்பாட்டையும் கெடுத்துவிட்டேனென்று ஊரில் எல்லாரும் பேசுகிறார்களாமே? அது உமக்குத் தெரியாதா?

தீக்ஷதர்:-மதனா! நான் சொல்லுவதைக்கேள். நீசிறுபிள்ளை. உனக்கு இன்னும் உலகம்தெரியவில்லை. ஊர்வாயைமூட உலைமூடி உண்டோ? நாவைப்படைத்தவர்கள் பலவிதமாகப் பேசத்தான்செய்வார்கள். அவர்களைக் குற்றம்சொல்லுவதால் என்ன பிரயோஜனம்? ஊரார் வம்புபேசுவதற்கு உன்னைப்போலுள்ள புத்திசாலிகள் இடங்கொடுக்கக்கூடாது.

மதனன்:- தீக்ஷதரே! என்னைப்பற்றி ஊர்க்காரர்கள் என்ன வேண்டுமென்றாலும் பேசட்டும். அதைக் குறித்து எனக்குக் கொஞ்சங்கூடக் கவலைகிடையாது. நான் சிறுகுழந்தையல்ல. எனக்குக் கடவுள் நுண்ணிய அறிவை அளித்திருக்கிறார். எனது பகுத்தறிவிற்கும் மனச்சாக்ஷிக்கும் எது நியாயமானதென்று தோன்றுகிறதோ அதைச்செய்ய நான் தயங்கவே மாட்டேன். ஊராரின் அபிப்பிராயத்தைக் கேட்டு வெட்கமடையவேண்டிய

காரியத்தை நான் செய்துவிடவில்லை. நான் கொள்ளையடித்தேனா? மோசநாசம்செய்தேனா? பிறருக்கு எந்தவிதமான கெடுதலையேனும்செய்தேனா? இல்லையே? தீக்ஷதரே! என்னை இகழுவதோடில்லாமல் ஏழை எளியவர்களை நம்மவர் நெருக்கித் துன்புறுத்துவதைத்தான் என்னால் சகிக்கவே முடியவில்லை.

தீக்ஷதர்:- மதனா! நீ பேசுவதொன்றுமே எனக்குப்புரியவில்லை. யார்யாரைத் துன்பப்படுத்திவிட்டார்கள்?

மதனன்:-உம்மிடம் ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறேன். நானும் நம்முடைய சேரியிலிருக்கும் கறுப்பனின் மகள் காந்தாமணியும் சிநேகமாயிருப்பதை நீர் அறிவீரல்லவா?

தீக்ஷதர்:--ஆம். அறிவேன்.

மதனன்:-நான் அவளோடு பழகினால் என்னைக் கண்டிப்பதைவிட்டுவிட்டு, அவளையும் அவளைச் சேர்ந்தவர்களையும் எதற்காகத் துன்பப்படுத்தவேண்டும்?

தீக்ஷதர்:- ஓகோ! அந்தவிஷயமா? மதனா! அப்படியொன்றும் பிரமாதமானகாரியம் நடந்துவிடவில்லை. ஏதோ உன்னுடைய தகப்பனார் கறுப்பனைக்கூப்பிட்டுக் கண்டித்தாராம். இதை உனக்குப் பிரமாதமாக யார் எழுதியிருக்கிறார்கள்?

மதனன்:-எழுதினவர் யாராயிருந்தாலென்ன? என் தகப்பனார் கறுப்பனிடம் எதற்காகக் கோபித்துக்கொள்ள வேண்டும்? அவன் பரம ஏழை. எழுத்துவாசனையில்லாதவன். அவனை அதட்டி உருக்கினால், அந்த மூடன் தன் மகளை அடித்து நெருக்குகிறான். தீக்ஷதரே! என் தந்தை என்னைக்கூப்பிட்டு விவரமென்னவென்று கேட்கக்கூடாதா? நான் கிட்டத்தட்ட இரண்டுமாதகாலம் ஆகித்தனாரிலிருந்தேனே? அப்பொழுதெல்லாம் ஒன்றும் பேசாமலிருந்துவிட்டு, நான் சென்னை வந்தபிறகு காந்தாமணியின் குடும்பத்தைக் கெடுக்க என் தகப்பனார் ஏன் முனையவேண்டும்?

தீக்ஷதர்:- மதனா! கோபித்துக்கொள்ளாதே. பெற்றவர்களுக்கன்றோ பிள்ளையின் அருமை தெரியும்? நீயே நன்றாக யோசித்துப்பார். அவருக்கு நீ ஒரே குழந்தை. நீ சேரியில் பிறந்த பெண்ணுடன் நெருங்கிப் பழகினால் பலர் பலவிதமாகப்



பேசுகிறார்கள். அதைக்கேட்டு ஆதிசேஷய்யருடைய மனது புண்படாமலிருக்குமா? அவருக்கு வருத்தமாகத்தானே இருக்கும்? நீயும் தான் இவ்வளவு பகிரங்கமாகக் காந்தாமணியுடன் கட்டிப்பிரளலாமா?

மதனன்:- தீக்ஷதரே! என்னுடைய மனப்பான்மை உமக்குத்தெரியாது. தேசத்தின் போக்கை நீர் அறியமாட்டீர். உம்மிடம் சமூகச் சீர்திருத்தத்தைப்பற்றியாவது, தீண்டாமையைப்பற்றியாவது பேசுவதால் பயனுமுண்டாகமாட்டாது. ஒருவிஷயத்தைமட்டும் நீர் என் தகப்பனாரிடம் சொல்லும். அவர் காந்தாமணியை நெருக்கி விரட்டிவிட்டால் அவளுக்கும் எனக்குமுள்ள தொடர்பு அறுந்துவிடுமென்று சொப்பனத்தில்கூட நினைக்கவேண்டாம். அவள் நிரபராதி. நான்தான் அவளை என்னோடு இணைத்துக்கொண்டேனே தவிர, அம்மாதரசி ஒருகேட்டையும் செய்யவில்லை.

தீக்ஷதர்:- மதனா! அந்தவிஷயம் அப்படியிருக்கட்டும். எனக்கு வயதாகிவிட்டது. உலகப்போக்கையும், சமூக சீர்திருத்தத்தையும் பற்றி நான் எதை அறிவேன்? எனக்கொன்றும் தெரியாது. நான் ஊருக்குப் போனவுடன் உன் தகப்பனாரிடம் சொல்லி காந்தாமணி வழிக்கே போகாதிருக்கும்படி செய்கிறேன். அதைக்குறித்து நீ கொஞ்சம்கூடக் கவலைப்படவேண்டாம். இவ்வளவுதானா? இந்த அற்ப காரியத்துக்காக நீ உன்மனதைப் புண்ணாக்கிக்கொள்வானேன்? மதனா! நான் வந்தகாரியத்தை இன்னும் ஆரம்பம்கூடச்செய்யவில்லையே.

மதனன்:- ஓகோ! தயவுசெய்துமன்னிக்கவேண்டும். அதை நான் மறந்துவிட்டேன். நீங்கள் வந்தவிஷயம் என்ன?

தீக்ஷதர்:- எல்லாம் உன்னைப்பற்றிய சங்கதிதான்!

மதனன்:- என்னைப்பற்றியதா? ஓகோ! என் தகப்பனார் உங்களை அனுப்பிவைத்தாரோ?

தீக்ஷதர்:-ஆம்

மதனன்,- எதற்காக? நான் சாதிகெட்ட தடிப்பயலாகிவிடக்கூடாது; காந்தாமணியின் முகத்தில்கூட விழிக்கப்படாது: நமது அக்கிரகாரத்திலுள்ள பிராமணர்கள் சொல்லுகிறபடி

யெல்லாம் ஆடவேண்டும்; தொட்டால் தோஷம்; கண்டால் பாபம்; பார்த்தால் தீண்டல் என்ற குருட்டுக்கொள்கைகளை அனுஷ்டிக்கவேண்டும் என்று எனக்குப் புத்திமதி கூறுவதற்காகவா உம்மை சென்னைக்கு அனுப்பியிருக்கிறார்? அடபாபமே! இதற்கு இக்கிழவயதில் நீர் வரவேண்டிய அவசியமே கிடையாதே! எனக்கு என் தந்தை விஸ்தாரமாகக்டிதத்தை எழுதலாம். அல்லது என்னை ஊருக்கு வரச்சொல்லி எனக்கு உபதேசம் செய்யலாம். தீக்ஷதரே! என் தகப்பனார் பணக்காரராயிருந்தும் பெரிய பயங்கொள்ளியாயிருக்கிறாரே யென்று இரங்குகிறேன்.

தீக்ஷிதர்:- மதனா! நீ படித்தவன். புத்திசாலி. உன்னோடு விவகாரம்பேச என்னாலும், பண்ணையாராலும்முடியுமோ? உன்னிடம் பேசுவதற்கு அவர் கூச்சப்படுகிறார். அருமைக் குழந்தையான உன்னைக் கண்டித்துப்பேச அவருக்குத் துணிவுண்டாகுமா? மதனா! நீ என்னவேண்டுமென்றாலும் நினைத்துக்கொள். அவருக்கு உன்மேலுள்ள வாஞ்சையை அளவிட்டே சொல்லமுடியாது.

மதனன்:- தீக்ஷதரே! என்தந்தைக்கு என்னிடம் அன்பு இல்லையென்று நான்சொன்னேனா? இல்லையே? இந்தக்கதையெல்லாம் எதற்கு? உம்மை அவர் எதற்காக இப்பொழுது இங்கே அனுப்பியிருக்கிறார்?

தீக்ஷிதர்:- மதனா! நான் சொல்லப்போகிற விஷயத்தை நீ சாந்தமாகக் கேட்கவேண்டும். கோபதாபங்களைக் காட்டக்கூடாது.

மதனன்:- தீக்ஷதரே! உம்மிடம் எனக்கென்ன கோபம்? என் தகப்பனாரிடம்தான் எனக்கு என்ன கோபமிருக்கிறது? அவர் அனாவசியமாகச் சேரியில் வதியும் ஏழைகளைப் பயமுறுத்திக் கஷ்டப்படுத்துகிறாரே என்றுதான் வருந்துகிறேன். பண்டமொருபக்கம் பழியொருபக்கமென்பார்கள். அதைப்போல என்னிடம் பேசாமல், காந்தாமணியின் தகப்பனிடம் எதற்காகச் சாமர்த்தியத்தைக் காட்டவேண்டும்? காந்தாமணியாக வலுவில் என்னைத் தேடிக்கொண்டுவந்தாளா? இல்லை. நான்தான் அப்



பெண்ணுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்தேன். நாகரீகமாகவும், கண்ணியமாகவும், தைரியத்துடனும் வாழ்வதைக் கற்றுக்கொடுத்தேன். அதிபுத்திசாலியான அவள் இன்றைக்கு அதிமேதையாயிருக்கிறாள். தீக்ஷதரே! அவள் எல்லோரையும்போல நன்றாயிருப்பது ஒரு குற்றமா? அவள் படிப்பது தோஷமா? பிராமணப்பெண்களைப்போன்றுதானே அவளும் தன்னுடைய தாயின் கர்ப்பத்தில் பத்துமாதமிருந்து பிறந்திருக்கிறாள்? அவள் எவருடைய வழிக்காவது வருகிறாளா? யாரைப்பற்றியாவது தூஷணமாகப் பேசுகிறாளா? நிரபராதியான அச்சிறுமியை, மதம்பிடித்த அக்கிரகாரவாசிகள் நெருக்குவது பேடித்தனமல்லவா?

தீக்ஷிதர்:- மதனா! என்னிடம் பிரசங்கம் செய்கிறாயே?

மதனன்:- பிரசங்கமொன்றுமில்லை. சாதிக் கொடுமைகளையும் ஏழைகள் படும்பாட்டையும் நினைக்கும்பொழுது என் நெஞ்சம் பதைபதைக்கின்றது. என்னையறியாமலே எனக்கு ஆத்திரம் பொங்கி எழுகின்றது. தீக்ஷதரே! நீர் வந்த காரியத்தைச் சொல்லவில்லையே?

தீக்ஷிதர்:- உன்னுடைய நிலையையும், நீ பேசுகிற பேச்சையும் பார்த்தால் எனக்குப் பயமாயிருக்கிறது.

மதனன்:- நான் என்ன புலியா? சிங்கமா? நீர் எதைவேண்டுமானாலும் சொல்லலாம். ஒவ்வொருவருக்கும் அவரவர் அபிப்பிராயங்களை வெளியிட உரிமையுண்டு. நீர் ஒரு காரியத்தைச்சொன்னால் அதை நான் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டுமென்ற கட்டாயமிருக்கிறதா? கிடையாதே? தாராளமாகச் சொல்லும்.

தீக்ஷிதர்:- பொறுமையுடனும், நிதானத்தோடும் கேட்பாயா?

மதனன்:- நீர் போடுகிற பீடிகையைப் பார்த்தால் பிரமாதமாயிருக்கிறதே?

தீக்ஷிதர்:- ஆம். விஷயம் பெரிய காரியம்தான்.

மதனன்:- அதுதான் என்ன? சீக்கிரமாகச் சொல்லித் தொலையும்.

தீக்ஷிதர்:- மதனா! மங்களகரமான விஷயத்தை நான் கொண்டுவந்திருக்கிறேன். “சொல்லித் தொலையும்” என்று சலிப்போடு பேசுகிறாயே?

மதனன்:- மங்களகரமான விஷயமா? அப்படியானால் எனக்கு நீர் சாதிக் கட்டுப்பாடுகளைப்பற்றி உபதேசம் செய்யவரவில்லையோ?

தீக்ஷிதர்:- இல்லை. உனக்கு நான் உபதேசம் செய்யவர வேண்டும்? நீயே ஒரு பெரிய பிரசங்கியாயிருக்கிறாயே? மதனா! உனக்கு....

மதனன்:- எனக்கு என்ன? ஏன் இந்தப் பதட்டம்? ஏன் வார்த்தைகளை விழுங்குகிறீர்? நீர் பேசுகிற மாதிரியைப்பார்த்தால், நல்ல செய்தியைக் கொண்டுவந்திருப்பவராகத் தோன்றவில்லையே?

தீக்ஷிதர்:- அப்பா! உனக்குக் கல்யாணம் பேசி முடித்திருக்கிறார்கள். இந்த மாதம் 22ந்தேதி முகூர்த்தம் கல்யாண ஏற்பாடுகளெல்லாம் தடபுடலாக நடக்கின்றன. உன் தகப்பனார் உனக்காகப் பேசியிருக்கும் பெண் அழகுப் பொக்கிஷம். ரதிதேவி கூடத் தோற்றுப்போய்விடுவாள்!

இதைக் கேட்டதும் மதனனுக்குப் பேராச்சரியமுண்டாயிற்று. அவன் விழுந்து விழுந்து சிரித்தான்! "தீக்ஷிதரே! பேஷ்! எனக்குக் கல்யாணமா? என் தகப்பனார் பெண் பேசி முடித்துவிட்டாரா? கல்யாண ஏற்பாடுகளும் நடக்கின்றனவா? நன்றாயிருக்கிறது!" என்று மதனன் வேடிக்கையாகப் பேசினான்.

தீக்ஷிதர்:- மதனா! ஏன் சிரிக்கிறாய்? நான் பொய்சொல்லவில்லை. வாஸ்தவம். உன்னை உடனே கையோடு கூட்டிக்கொண்டு வருமாறு பண்ணையார் என்னை அனுப்பியிருக்கிறார்.

மதனன்:- தீக்ஷிதரே! என் கல்யாணத்தைப்பற்றி என்னிடம் கேளாமல் என் தந்தை எவ்வாறு தீர்மானித்தார்?

தீக்ஷிதர்:- அப்பா! நம்முடைய சாதி வழக்கம் உனக்குத் தெரியாதா? ஆத்திலுள்ள பெரியவர்கள்தான் கல்யாணம் பேசி முடிப்பார்கள். நீ நம்முடைய கிருஷ்ணசுவாமி அய்யர் குமாரி கமலத்தைப் பார்த்திருப்பாயே? பெண் எப்படி? அழகு சுந்தரி! ஜாதகப் பொருத்தமும் நன்றாயிருக்கிறது.

மதனன்:- பேஷ்! நானும்கமலமும் சதிபதிகளாகப் பல்லாண்டு பல்லாண்டு வாழ்வோமென்றும் சோதிடர் சொன்னாரா?

தீக்ஷிதர்:- ஆம்.



மதனன்:— எதற்காகச் சொன்னார்? என் தகப்பனார் பத்து ரூபாய் கொடுத்ததற்காகத்தானே? சீ! சீ! இது என்ன கேவலம்! தீக்ஷிதரே! சோதிட சாஸ்திரத்தையும், புனிதமான வேதங்களையும் உம்மைப்போன்றவர்கள் கேவலப்படுத்துகிறார்கள். மேல் சாதியாம்! பார்ப்பினனாம்! சாதகப் பொருத்தம் பார்த்தானாம்! எல்லாம் அண்டப்புளுகுகள்! கேவலம் பணத்திற்காக சாஸ்திரத்தைப் பொய்யாக்கி, மனச்சாக்ஷியை விற்கிரயம் செய்யும் மனிதரை உயர்ந்த வகுப்பாரென்று பகுத்தறிவுள்ளவர்கள் ஒப்புக்கொள்வார்களா? தீக்ஷிதரே! உடனே நீர் ஊருக்குச் சென்று என் தந்தையிடம் கண்டிப்பாகக்கல்யாண ஏற்பாடுகளை நிறுத்தச் சொல்லும். எனக்கு இப்போது கல்யாணம் வேண்டாம். எனக்காகத் தோன்றும்போது நான் விவாகம் செய்துகொள்வேன். வீணாகப் பணத்தை விரயம் செய்யவேண்டாம்.

தீக்ஷிதர்:— மதனா! இப்படிச் சொல்லலாமா? உன் தகப்பனார் வார்த்தைக்கு மதிப்பு வேண்டாமா?

மதனன்:- தீக்ஷிதரே! ஒவ்வொரு மனிதனும் தனது மரியாதையைத்தானே காப்பாற்றிக்கொள்ளவேண்டும். நான் எனது தந்தையை மரியாதைக்குறைவாக ஒன்றும் பேசவில்லை. என்னைக் கலந்துகொள்ளாமல் அவர் எனது கல்யாணத்தைத் தீர்மானித்தது பிசகு. அவர் நினைப்பதுபோல் நடக்கவேமாட்டாது.

தீக்ஷிதர்:— இதுதான் உன்னுடைய முடிவான பதிலா?

மதனன்:- ஆம்.

தீக்ஷிதர்:- மதனா! நீ வேறு எவளைத் தான் விவாகம் செய்துகொள்ளப் போகிறாய்?

மதனன்:— அது எனது சொந்த விஷயம்.

தீக்ஷிதர்:- ஊருக்குள் பலவிதமாய்ப் பேசிக்கொள்ளுகிறார்களே யென்று தான் கேட்டேன்.

மதனன்:- என்ன பேசிக்கொள்ளுகிறார்கள்?

தீக்ஷிதர்:- நீ காந்தாமணியைக் கல்யாணம் செய்துகொள்ள நினைக்கிறாயா?

மதனன்:- இருக்கலாம்! உமக்கேன் அந்தக் கவலை?

தீக்ஷிதர்:- அவ்வாறு செய்வது நன்றாயிருக்குமா?

மதனன்:- ஏன் நன்றாயிருக்காது? காந்தாமணி எந்த வகையில் தாழ்ந்தவள்? அவன் அங்கஹீனியா? படிப்பில்லாதவளா? விகாரமானவளா? குணக்கேடுள்ளவளா?

தீக்ஷிதர்:- மதனா! அவளிடம் உனக்குப் பிரியம் அதிகம் போலிருக்கிறது?

மதனன்:- அடடா! அதைக் கண்டுபிடிக்க உமக்கு இவ்வளவு நேரமாகிவிட்டதா?

தீக்ஷிதர்:- அப்பா! நான் ஒரு யுக்தி சொல்லுகிறேன். கோபப்படாமல் கேட்பாயா?

மதனன்:- இன்னும் நீர் சொல்லவேண்டிய விஷயம் பாக்கியிருக்கிறதா?

தீக்ஷிதர்:- காந்தாமணியுடன் நீ வாழ்வதற்குக் கூட உன் தகப்பனாரை நான் சம்மதப்படும்படி செய்கிறேன்.

மதனன்:- அப்படியா? அவ்வளவு தைரியம் அவருக்கு வந்துவிட்டதா?

தீக்ஷிதர்;- ஆம். நான் அவருக்கு விஷயாத்தை யெல்லாம் பக்குவமாகச் சொல்லி சரிப்படுத்தியிருக்கிறேன். மதனா! நீ என்னவோ என்னை சுத்த, வடிகட்டின மடிஸஞ்சிப்பேர்வழியென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். எனக்கும் கொஞ்சம் லௌகீகம் தெரியும்.

மதனன்:-பேஷ்! தீக்ஷிதரே! இப்போது தான் உமது பேச்சு சுவாரஸ்யமாயிருக்கிறது. காந்தாமணியுடன்நான் சேர்ந்து வாழ்வதற்கு என் தந்தை சம்மதிப்பாரென்றால், இப்போது எதற்காக எனக்குக் கல்யாண முகூர்த்தம் வைத்திருக்கிறார்? நீர் சொல்லுவது ஒன்றுக்கொன்று தாக்கலில்லாமலிருக்கின்றதே?

தீக்ஷிதர்:- மதனா! நான் சொல்லுகிற யுக்தியைக் கேள். உன் மனோபீஷ்டமும் நிறைவேற வேண்டும். உன் தகப்பனாரின் எண்ணமும் கைகூடவேண்டும். உலகமும் பார்த்துக் குறை சொல்லாமலிருக்க வேண்டும். இவ்வளவு பேர்களையும் திருப்திப்படுத்த ஒரு வழியிருக்கிறது. அதைக் கூறுகிறேன். அதன்படியாவது நடந்து கொள்வாயா?



மதனன்:- தீக்ஷிதரே! நீர் ஒரு பெரிய இராஜதந்திரியைப் போல் பேசுகிறீரே? எல்லா மனிதரையும் ஏககாலத்தில் ஒருவனால் திருப்திப்படுத்தமுடியுமா? எங்கே! உம்முடைய யுக்தியையும் பார்ப்போம்.

தீக்ஷிதர்:- மதனா! உலகத்தில் சர்வ சாதாரணமாக நடக்கக்கூடிய விஷயத்தைத் தான் நான் சொல்லப்போகிறேன்.

மதனன்:- அதென்ன?

தீக்ஷிதர்:- நீ கமலத்தை ஊரார் அறிய விவாகம் செய்து கொள். காந்தாமணியை வைப்பாட்டியாக வைத்துக்கொள். பணக்காரர்களுக்கு இது சகஜம் தானே?

மதனசுந்தரன் இதைக் கேட்டான். அவனுடைய உதிரம் கொதிக்கலாயிற்று. கடுஞ்சினம் மண்டி எழுந்தது. தீப்பொறி பறக்கும் கண்களுடன் அவன் அப்பய்யா தீக்ஷிதரை நோக்கினான். "சீ! சீ! நீர் ஒரு குருட்டு வைதீகனென்று மட்டுமே இது வரையிலும் நான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஐயோ! இதென்ன அருவருக்கத்தக்க எண்ணம்? என்னை விபசாரம் செய்யவா சொல்லுகிறீர்? என்னை முற்றாக நம்பியிருக்கும் பரிசுத்தவதி காந்தாமணியை நான் வஞ்சித்துக்கெடுக்கவேண்டுமா? என்ன இழிவான எண்ணம்? நீ படித்த சாஸ்திரங்களில் இவ்வாறு தான் எழுதப்பட்டிருக்கிறதா? பார்ப்பனனாம்! மேல் சாதியாம்! சாஸ்திர விற்பன்னனாம்! ஏ. மனிதனே! நீ என்ன கற்றும் என்ன பயன்? பிராமணர் வம்சத்தில் பிறந்தவர்களெல்லோரும் பிராமணர்களாகிவிட முடியுமோ? அந்தணன் என்பவன் அறவோனாயிருக்க வேண்டும். அவன் தண்ணளி நிறைந்தவனாகவும், யோக்கியதையிற் சிறந்தவனாகவும், ஒழுக்கமுள்ளவனாகவும் திகழவேண்டும். இவ்வளவும் உன்னிடமில்லை. என்றாலும் நீ பார்ப்பனனென்று பகட்டித் திரிகிறாய். என்ன யோசனை சொன்னாய்? காந்தாமணி எளிய குடும்பத்தில், உன்னைப் போன்ற சாதித்திமிர் கொண்டவர்களால் நசுக்கப்பட்டிருக்கும் குலத்தில், பிறந்திருப்பதால் அவள் வேசையாடுவாளென்று நினைத்துவிட்டாயா? ஐயோ! என்ன இறுமாப்பு! என்ன துணிவு! காந்தாமணி கற்பின் கொழுந்து! அவள் மகா புனிதவதி! அயோக்கியத்தனத்தை எனக்கு உபதேசம் செய்யவா நீ வந்தாய்? போ! போ! போய்

விடு! என் முன்னால் நிற்காதே," என்று மடமடவென்று அடங்காச் சினத்துடன் மதனசுந்தரன் பேசியதைக் கேட்ட அப்பய்யா தீக்ஷதர் கிடுகிடென்று நடுங்கினர். அங்கே தாமதித்தால் மதனன் அடிதடியிலிறங்கிவிடுவானோ என்று கூட அவருக்கு அச்சமுண்டாகிவிட்டது. உடனே மடிசஞ்சியை எடுத்துக் கொண்டு தீக்ஷதர் வெளியே நழுவிவிட்டார்!

தீக்ஷதர் அப்பாற்பட்ட அடுத்த வினாடியில் தந்திக்காரன் ஓடோடியும் வந்து மதனனிடம் தந்தி ஒன்றைக் கொடுத்தான். தந்தியின் மேல் "அர்ஜண்ட்" என்று கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது. காந்தாமணிக்கு என்ன ஆபத்தோ? என்ற கலக்கத்துடன் தந்தியை மதனன் பிரித்தான். அவனது கைகள் நடுங்கின. தந்தியில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது.

"பயங்கரமான நிலைமை. ஆபத்துச் சூழ்ந்திருக்கிறது. நிர்க்கதியாயிருக்கிறேன். ஒருமுறையாவது உன்னைப்பார்க்கவேண்டும். நாளைக்கே பார்க்கவேண்டும். தவறினால் மரணத்தின்மூலம் விடுதலைபெறுவேன். உடன்பதில்." காந்தா.

இத்தந்தியை மதனன்படித்தான். அவனுடைய தலை சுழலவாரம்பித்தது. கையிலிருந்து தந்தி நழுவிக் கீழேவிழுந்துவிட்டது. அவனுக்கு என்னசெய்வதென்று தெரியவில்லை. சித்தப்பிரமை வந்தவனைப்போல அவன் சோர்ந்து கீழேஅமர்ந்தான். "ஹா! காந்தாமணிக்கு ஆபத்தா? கண்மணி நிர்க்கதியாகநின்று தவிக்கிறாளா? நாளைக்கு நான்போகவில்லையானால், மரணத்தின் மூலமா அவள் விடுதலைபெறுவாள்! எவ்வளவுபயங்கரமான செய்தி! என்நெஞ்சம் துடிக்கிறதே. என்னுடைய உதிரம் கொதிக்கிறதே. அவளுக்கு என்ன ஆபத்து? ஆம்! ஆம்! தீண்டாமைப் பிசாசு! இந்தப்பிசாசு என்னை இகழ்ச்சிக்கும் பழிச்சொல்லுக்கும் இலக்காக்குகிறது. நான் உயர்சாதியெனப்படும் வகுப்பில்பிறந்தவனாகையால் தீண்டாமைப்பேய் என்னைக்கொல்ல அஞ்சுகிறது. காந்தாமணி ஏழையாகவும், தீண்டத்தகாதவளாகவும், பிறந்திருப்பதால் தீண்டாமைப்பிசாசு அவளைப் புடைத்துப் புசிக்கப்பார்க்கிறது! அப்படியா? பிறப்புச்சாதிக்கு அவ்வளவு துணிவுண்டா? தீண்டாமைக்குச் சாவுமணியடிக்கவென்றே அவதரித்திருக்கும்



காந்தாமணியா மரணத்தின்மூலம் விடுதலைபெறப்போகிறாள்? சாதி ஹிந்துக்களே! இதென்னகொடுமை! இதென்ன அநீதி! ஏழைப்பெண்! சின்னஞ்சிறுபெண்! எத்தகைய பாவத்தையும் நினைக்காத உத்தமி! அவளை ஏன் நீங்கள் கொலைசெய்கிறீர்கள்? நான் அவளைநேசித்தால் என்னை நீங்கள் தண்டிக்கலாம். அவளை ஏன் வதைக்கிறீர்கள்? ஐயோ! "பார்ப்பானை அய்யரென்றகாலமும் போச்சே; வெள்ளைப்பறங்கியைத் துரையென்றகாலமும் போச்சே" என்று பாரதிமுழக்குகிறானே? அது பொய்த்துவிட்டதா? கண்மணி! காந்தா! அன்றைக்கே என்னை நீ எச்சரிக்கை செய்தாய். முட்டாளான நான் உன்னைத்தனிமையாக கிராமத்தில் விட்டுவிட்டுவந்தேன். கண்மணி! இதோபுறப்படுகிறேன். ரயில் இரவில்தான் புறப்படுகிறது. அதுவரையிலும் நான் தாமதிக்கமுடியாது. இப்பொழுதே ஒருமோட்டாரை அமர்த்திக் கொண்டு வருகிறேன். இரவு இரண்டுமணிக்கே நான் உன்னைச் சந்திக்கிறேன். தீண்டாமைப் பிசாசே! உன்னுடைய ஆணவத்தை நான் ஒடுக்கிவிடுகிறேன்" என்று மதனன் தனக்குள் ஆவேசத்துடன் பேசித் தீர்மானித்தான். அடுத்தவினாடியில் கீழ்க்கண்ட அவசரத்தந்தியை காந்தாவுக்கு அனுப்பினான்.

"தயங்காதே. மோட்டாரில் வருகிறேன். இரவு 2 மணிக்கு உன்வீட்டிற்கு வருவேன். நிச்சயம்." மதனன்.

மாலை மணிநாலுக்கு ஸ்பெஷலாக மோட்டாரை அமர்த்திக் கொண்டு மதனசுந்தரன் ஆதித்தனூருக்குப் பிரயாணப்பட்டான்.

## அத்தியாயம்—6.

### அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமில்லையே.

பண்ணையார் ஆதிசேஷய்யர் தெருவில் கல்யாணப் பந்தல் வெகு அலங்காரமாக அமைக்கப்பட்டுவந்தது. அதேகாலத்தில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் இறங்கியிருந்த சத்திரத்தின் முன்னும் சிறிதாகவோர் பந்தல் போடப்பட்டது. பண்ணையாருடைய உத்திரவின் பேரிலேயே சத்திரத்தின் முன்பக்கம் அலங்கரிக்கப்படுகிறதென்று ஊரார் நினைத்துக்கொண்டிருந்தார்கள். நாகராஜன் செல்வி காந்தாமணி தனக்கே சொந்தமாகிவிட்டாளென்ற நம்பிக்கையுடன் தனது கல்யாண ஏற்பாடுகளைச் செய்யலானான். ஆறாயிரம் ரூபாயை வாங்கிக்கொண்ட நாகராஜன் தமாஷாகச் சத்திரத்தில் பந்தலமைத்துக்கொண்டிருப்பதைக் கேள்விப்பட்ட ஆதிசேஷய்யருக்கு ஒன்றும் புரியவில்லை. கருப்பாயியை சப்-இன்ஸ்பெக்டர் என்ன செய்யப்போகிறாரென்பதை அறியவேண்டுமென்ற ஆசை அவருக்குண்டாயிற்று. மறுநாள் காலையில் மதனசுந்தரன் வருவதற்கு முன்பு கருப்பாயி கடத்திக்கொண்டு போகப்படவேண்டுமென்பதை மீண்டும் நாகராஜனுக்கு நினைப்பூட்டுவதற்காகப் பண்ணையார் ஆதிசேஷய்யர் சத்திரம்வந்து சேர்ந்தார். நாகராஜன் தனது தனியறையில் வெகு சந்தோஷத்துடன் சாய்மான நாற்காலியில் சயனித்திருந்தான். "கருப்பாயி! சீ! கருப்பாயி அல்ல—காந்தாமணி! என்னுடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். காந்தாமணியென்ற கட்டழகி எனக்குக் கிடைத்துவிட்டாள். நாளை இரவு நான் அவளுடைய வீட்டிற்குப்போவேன். ஆனந்தமாக ஆலிங்கனம் செய்துகொள்வேன். அப்பய்யா தீக்ஷதர் வந்து என்னிடம் விபரத்தைச் சொல்லாவிட்டால் இந்த பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கமாட்டாது. நாளை இரவு வரையிலும் நான் எப்படிப் பொழுதைப் போக்கப் போகிறேன்! ஒரு நிமிஷம் போவது ஒரு யுகமாயிருக்கிறதே" என்று நாகராஜன் நினைவிட்டவண்ணம் அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தான். அச்சந்தர்ப்பத்தில் பண்ணையார் ஆதிசேஷய்யர் அறைக்குள் நுழைந்து நாற்காலியிலுட்கார்ந்தார்.



நாகரா:- பண்ணையார்வாள்! வரவேண்டும்! கல்யாண ஏற்பாடுகளெல்லாம் எவ்வாறிருக்கிறது? முகூர்த்த நாள் நெருங்கிவிட்டதே?

ஆதிசே:- உங்களை நம்பி எல்லாக் காரியங்களையும் ஒருகுறையுமில்லாமல் செய்துவருகிறேன்.

நாகரா:- என்னை நம்பினால் ஒரு காலத்திலும் பழுதுவரவேமாட்டாது. பண்ணையார்கள்! என்ன என்கிறீர்கள்? நீங்கள் கொடுத்த வேலை ரொம்பக் கஷ்டம்.

ஆதிசே:- அப்படியானால் இன்னும் வேலை முடியவில்லையோ? இன்ஸ்பெக்டர்வாள்! நாளைக் காலை ரயிலில் மதனசுந்தரன் இவ்வூருக்கு வந்துவிடுவான். அவன் வந்து என்ன குழப்பம் செய்யப்போகிறானோவென்று எனக்குப் பயமாயிருக்கிறது. வந்ததும் வராததுமாக அவன் கருப்பாயி வீட்டுக்குத்தான் ஓடுவான். அவள் அங்கிருந்தால் என் குடிகெட்டுப் போய்விடும்.

நாகரா:- பண்ணையார்வாள்! நாகராஜன் சேதி உங்களுக்குத் தெரியாதுபோலிருக்கிறது! நான் ஒரு காரியத்தில் பிரவேசிப்பது; அது தவறுவதா? நீங்கள் என்னவோ ஆறாயிரம் ரூபாயைப் பிரமாதமாகச் சொன்னீர்களே? நான் நேற்றுமுதல் இதுவரையிலும் பட்ட கஷ்டம் உங்களுக்குத் தெரியுமா? சில்லரைச் சிப்பந்திகளுக்கு இரண்டாயிரம் போதுமென்று நினைத்தேன். மேலதிகாரிகளுக்கு நான்காயிரம் போதுமென்று எண்ணினேன். அவர்கள் அதிகத்தொகை வேண்டுமென்று கேட்டார்கள். காரியம் முடிந்தபிறகு பண்ணையார்வாளிடம் கேட்டுவாங்கித்தருவதாய்ச் சொல்லியிருக்கிறேன்.

ஆதிசே:- அதைப்பற்றி நாம் பிறகு பேசி முடிவு கட்டலாம். கருப்பாயி தொலைந்தாளா?

நாகரா:- உங்களுக்கேன் இந்தச் சந்தேகம்? அவள் இருந்தாலென்ன? தொலைந்தாலென்ன?

ஆதிசே:- ஐயா! நீங்கள் கூறுவது எனக்குத் திருப்தியை அளிக்கவில்லை.

நாகரா:- பண்ணையார்வாள்! உங்கள் மகனைக் கருப்பாயி இனிமேல் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டாள். அவனும் அவளை இனிமேல் பார்க்கமுடியாது.

ஆதிசே:- நிச்சயம்தானா?

நகரா:- நிச்சயம்.

ஆதிசே:- இன்ஸ்பெக்டர்வாள்! மதனசுந்தரன் மிகவும் பொல்லாதவன். கருப்பாயி இந்த ஊரிலிருந்தால் அவன் இலகுவாக விடமாட்டான்.

நாகரா:— மதனனுடைய சாமர்த்தியமெல்லாம் என்னிடம் பலிக்காது. பண்ணையார்வாள்! கருப்பாயி இப்போது என் கைவசமிருக்கிறாள். நான் சொல்லுகிறபடியெல்லாம்ஆடுகிறாள். நேற்று இரவே அவளை நான் சேரிக்குச்சென்று கண்டேன். அவளை இவ்விடத்திற்குக் கொண்டுவந்தேன். சரியான பேதிமாத்திரை கொடுத்தேன். ஆஸாமி கிடுகிடென்று நடுங்கிக்கொண்டிருக்கிறாள். உங்களுடைய மகன்கண்ணில் அவள் தென்படவேமாட்டாள். நீங்கள் கொஞ்சம்கூடச் சந்தேகப்படாமல் கல்யாணவேலைகளைக் கவனியுங்கள்.

ஆதிசேஷ:— நீங்கள் சொல்லுவதை நான் நம்புகிறேன். கவனித்துக்கொள்ளுங்கள். இன்ஸ்பெக்டர்வாள்! இங்கு எதற்காகப் பந்தல் போடுகிறீர்கள்?

நாகரா:— ஓகோ! உங்கள்கிரகத்தில் கல்யாணம் நடக்கிறதல்லவா? அவ்விபரத்தை மேலதிகாரிகளுக்குச் சொல்லியனுப்பினேன். அவர்கள் கல்யாணத்திற்கு வருவதாக அறிவித்திருக்கிறார்கள். பெரியஉத்தியோகஸ்தர்கள் வந்து தங்குகிறமுகாம் அலங்காரமாயிருக்கவேண்டாமா? அதற்காகத்தான் பந்தல் அமைக்கச் சொன்னேன்.

ஆதிசேஷ:— அப்படியா? என்னிடம் சொல்லியிருந்தால் நானே இதைச்செய்திருப்பேனே?

நாகரா:— இந்தச்சில்லரைவிஷயத்தை உங்களிடம் கேட்பானேனென்று தான் நினைத்தேன்.

ஆதிசேஷ:— எனதுவீட்டுக்கல்யாணத்தைமுன்னிட்டு நீங்கள் கையிலிருந்து பணத்தைச் செலவுசெய்யக்கூடாது. இப்பந்தலுக்கு என்ன கொடுப்பதாய்ப் பேசியிருக்கிறீர்கள்?

நாகரா:— அதிகமில்லை. ஐம்பது ரூபாய்தான்.



ஆதிசேஷ:— ரூபாய் ஐம்பதையும் நான் அனுப்பிவைக்கிறேன். இன்ஸ்பெக்டர்வாள்! ஞாபகமிருக்கட்டும். உங்கள் திருமையால்தான் காரியம் நடந்தேறவேண்டும்.

நாகரா:— அடடா! திரும்பத்திரும்பச் சொல்லுகிறீர்களே? நிம்மதியுடன் போங்கள். நானல்லவா கருப்பாயியைக் கைவசம் வைத்துக்கொண்டிருக்கிறேன்.

ஒருவாறு சமாதானத்துடன் பண்ணையார் ஆதிசேஷய்யர் வீடுபோய்ச்சேர்ந்தார். காமுகன் நாகராஜன் "காந்தாமணி! கட்டழகி! காதற்கிளி!" என்று உச்சரித்துக்கொண்டேயிருந்தான்.

மதனசுந்தரனுக்குத் தந்தியை அனுப்பிய சிறுமி காந்தாமணி அவனுடைய பதிலை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு மனநிம்மதியேயில்லை. "ஐயோ! நான் மகா துர்அதிர்ஷ்டசாலியாயிருக்கிறேனே! பரிசுத்தவானான மதனனின் சிநேகம் எனக்குண்டாயிற்று. அவனால் நான் முன்னிலைக்குவந்தேன். எம்மிருவருடைய தொடர்பு மெதுவாகக்காதலாய் முதிர்ந்துவிட்டது. என்னுள்ளத்தில் திடீரென்றுதோன்றிய காதலுணர்ச்சியை நான் அவனிடம் தெரிவிக்க அஞ்சினேன். சாதிக்கொடுமைகள் குறுக்கிடுமேயென்று நான் நடுங்கினேன். அக்கோத்தில் மதனனே என்னிடம் காதல்மொழிகளைப் பகர்ந்தான். எனக்குத்தைரியம் சொன்னான். தன்னம்பிக்கையையுண்டாக்கினான். மகாபாக்கியசாலியென்று நினைத்து நான் உடல்பூரித்திருந்தேன். மின்னாமல் இடிவிழுந்ததைப்போல பேராபத்துக்கள் வந்துவிட்டனவே! ஐயோ! பண்ணையார் ஆதிசேஷய்யரும் அவருடைய சகாக்களும் என்னை இகழ்வாகப் பேசுவதையாவது நான் சகித்துக்கொண்டுவிடுவேன். பழையகாலத்துக் குருட்டுக்கொள்கைகளில் மூழ்கிக்கிடக்கும் அவர்களிடமிருந்து நான் வேறொன்றையும் எதிர்பார்க்கமுடியாது. சனியனைப்போல நாகராஜன் குறுக்கிட்டிருக்கிறானே? அவனிடமிருந்து நான் எவ்வாறு தப்பித்துக்கொள்ளப்போகிறேன்? நாளைக்கு இரவில் அவன் வருவான். என மானத்தைப்பறிக்கமுயலுவான். எங்கேயாவது ஓடிப்போகலாமா? அதற்கும் பயமாயிருக்கிறது. நான் எங்கேசென்றாலும், அங்கங்கே காமப்பேய்கள் சஞ்சரிக்கத்தானே செய்யும்? அடா! தெய்வமே! நாளைக்கு மதனன்வருவானா? அவனுக்குஎனது

தந்தி கிடைத்திருக்குமா? என்னுடைய துர்அதிர்ஷ்டம் குறுக்கிட்டு தந்தியும் அவனைப்போய்ச்சேராமல் தடுத்துவிடுமா? ஆம்! மதனன் வரவில்லையானால் நான் தற்கொலை செய்துகொள்ளவேண்டியதைத்தவிர வேறு வழியே கிடையாது. மானத்தையிழந்து வாழ்வதைப்பார்க்கிலும் மடிந்துபோவது எவ்வளவோ மேன்மையாகும். சாதிக்கொடுமை என்ற பிசாசு எத்தனையோபேர்களைப் புடைத்துச் சாப்பிட்டாகிவிட்டது. அது என்னையும் பக்ஷிக்கட்டும்" என்றெல்லாம் காந்தாமணி நினைத்தாள். பிற்பகலில் அவள் தந்திஆபீசுக்குச்சென்று காத்துக்கொண்டிருந்தாள். மாலை ஐந்து மணிக்குமேல்மதனனின் தந்தி அவளுக்குகிடைத்தது. அதைஅவள் படித்துப்பார்த்தாள். கவலை அவளுடைய முகத்திலிருந்து அகன்றுவிட்டது. அவளுக்கு ஆனந்தம் பொங்கிற்று. உடல் பூரித்தது. அச்சமில்லை, அச்சமில்லை அச்சமில்லையே என்று அவள் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள்.

"மதனன்! என் உயிர்! எவ்வளவு அழகான செய்தியை அவன் அனுப்பியிருக்கிறான்! 'மயங்காதே!' என்று அவனுடைய தந்தி எனக்குத் தேர்தல் சொல்லுகிறது! "காந்தா! இதென்ன தயக்கம்? இதென்ன அதைரியம்? நம்முடைய கட்சியில் நியாயமிருக்கின்றது. அறக்கடவுள் நமது பக்கத்திலிருக்கிறார். மகாத்மாக்களின் ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக்கொண்டிருக்கிறோம். இந்நிலைமையில் நீயும் நானும் யாருக்கடி அஞ்சவேண்டும்? தீண்டாமை யென்பதற்கு நமது மதத்தில் ஆதாரமில்லையடி. காந்தாமணி! என்ன நேர்ந்தாலும் தயங்காதே! மயங்காதே!" என்று என்னருமை மதனன் எனக்கு அடிக்கடி சொல்லுவான். அவ்வீரமொழிகள் எனது செவிகளில் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அதே சொல்லை இத்தந்தியிலும் அவன் பிரயோகித்துள்ளான். மதனா! மோட்டாரில் வருகிறாயா? இன்றிரவு 2 மணிக்கே உன்னைத் தரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கப் போகிறதா? நானே அதிர்ஷ்டசாலி! நானே பாக்கியசாலி! மதனா! உனக்கு என்ன அன்பு! என்ன பிரியம்! சேரியில் பிறந்த பரம ஏழையான எனக்காக நீ எவ்வளவு கஷ்டநஷ்டங்களை அனுபவிக்கிறாய்? நான் உனக்கு என்ன கைம்மாறுதான் செய்யப் போகிறேன். மதனா! உனக்குக் கொடுப்பதற்கு என்னிடம்



ஒன்றுமே கிடையாது. என்னிடத்துப் பணமில்லை! உயர்குடிப்பிறப்பில்லை! சிறந்த கல்வியும் இல்லை. ஆனால் என்னுடைய இருதயத்தில் குன்றாத, குறையாத காதல் இருக்கிறது. அது பரிசுத்தமானது. தெய்வத்தன்மை வாய்ந்தது. அந்த ஹிருதயத்தைத்தான் உனக்கு நான் கொடுப்பேன்.

என்னைப் பிடித்த சனியன்களெல்லாம் இன்றோடு தொலைந்துவிடும். என்னருமைக் காதலனை நான் கண்டாலேபோதும். அவனுடைய உதவியிருக்கையில் எனக்கென்ன குறை? அவன் வரட்டும். அவனிடம் நடந்தவைகளையெல்லாம் சொல்லுவேன். அவனுடைய எதிர்காலம் பழுதடைந்துவிடக்கூடாதே என்ற ஒருகவலைதான் எனக்கிருக்கின்றது. அதைக் குறித்தும் அவனிடம் நான் பேசுகிறேன்." இவ்வாறெல்லாம் நினைந்தவண்ணம், களிபூத்த முகத்துடன் காந்தாமணி தனது வீடு வந்து சேர்ந்தாள். வந்ததும் அவளது தாய் குப்பி "எங்கேயடி போயிருந்தாய்? இவ்வளவுதூரம் சந்தி சிரித்தது போதாதா? உனக்கு வெட்கமில்லை? மானமில்லை? வெளியில் தலையை நீட்ட உனக்கு என்னடி யோக்கியதை இருக்கிறது?" என்று வெறுப்போடு பேசினாள்.

காந்தா:- அம்மா! நீயுமா என்னை இவ்வாறெல்லாம்கோபித்து இகழுகிறாய்?

குப்பி:- உன்னைக் கோவிலில் வைத்துக் கும்பிடுவார்களா? நேற்றைக்குத்தானே போலிஸ் எஜமான்கள் வந்து எச்சரித்துவிட்டுப்போனார்கள்? இதோ பார்! போலிஸ் இன்ஸ்பெக்டர் உன்னிடம் கொடுக்கும்படி ஏதோ அனுப்பியிருக்கிறார். அது சர்க்கார் காரியமாம். அதில் கண்டபிரகாரம் நீ நடக்கவேணுமாம்.

இவ்வாறு பேசிவிட்டு குப்பி தன்மகளிடம் ஒரு பார்சலைக் கொடுத்தாள். காந்தாமணிக்கு ஒன்றும் விளங்கவில்லை. நாகராஜன் என்ன அனுப்பியிருக்கிறானோ? என்ன எழுதியிருக்கிறானோ? என்று அவள் நடுங்கினாள். ஒரு மூலையில் போய் பொட்டணத்தை அவிழ்த்துப் பார்த்தாள். அதில் "இரதிமன்மதலீலைகள்" என்றவோர் சிற்றின்பப் புஸ்தகம் இருந்தது. அதோடு கூட ஒரு கடிதமும் காணப்பட்டது. அக்கடிதத்தில் நாகராஜன் கீழ்கண்டவாறு எழுதியிருந்தான்.

கடிதம்.

ஆதித்தனூர்,

என் கண்மணி காந்தா!

இதோடு கூட "இரதி மன்மதலீலைகள்" என்ற புஸ்தகம் அனுப்பியிருக்கிறேன். அதை நீ படித்துப்பார். நீதான் ரதி! நான்தான் மன்மதன்! நாமிருவரும் நாளை இரவில் ஒன்றுவோம். கண்ணே! எப்போதும் நான் உன் நினைவாகவே இருக்கிறேன். நீ சொன்னபடி நம்முடைய கல்யாணத்திற்கு வேண்டியஏற்பாடுகளெல்லாம் நடந்துவருகின்றன. காத்திருந்தவன் பெண்சாதியை நேற்று வந்தவன் கொண்டுபோனானென்பார்கள். அதைப்போல மதனன் கைப்பற்ற நினைத்த நீ எனக்கே சொந்தமாகப்போகிறாய். பிரியமுள்ள காந்தா! உன்னை ஊரிலிருந்தே கடத்திக் கொண்டுபோவதற்காக பண்ணையார்ஆதிசேஷய்யர் எனக்கு ஆறாயிரம் ரூபாய் கொடுத்தாரல்லவா? அந்தத்தொகையை அப்படியே வைத்திருக்கிறேன். அவ்வளவிற்கும் உனக்கு ஆபரணங்கள் செய்து போடப்போகிறேன். மதனன், கமலத்தைக் கட்டிக்கொள்ளுகிற முகூர்த்தத்தில் நானும் உன்னைப் பகிரங்கமாக மனைவியாக்கிக் கொள்ளுவேன். காந்தா! நாளை இரவு சரியாக பத்து மணிக்கு நான் உன்னைத் தேடிக்கொண்டு உன் வீட்டுக்கு வரலாமென்று தீர்மானித்திருக்கிறேன். எல்லாவற்றுக்கும் நாளைக்காலையில் நான் ஒரு ஆள் அனுப்புகிறேன். அவனிடம் பதில் கொடுத்துவிடு.

உன்னையே நினைத்து உருகும்,

நாகராஜன்.

போலிஸ்சப்இன்ஸ்பெக்டர்

இக்கடிதத்தைக் காந்தாமணி படித்தாள். அவளுக்கு ஆத்திரமும் பொங்கிற்று. "மதனன் வரட்டும். அவனிடம் இக்கடிதத்தைக் காட்டுகிறேன். தெய்வமே! நீதான் என்னை இக்காமப்பேயிடமிருந்து காப்பாற்றவேண்டும்," என்று காந்தாமணி பிரார்த்தித்தாள். நாகராஜனின் லெட்டரைத் தன் மடியில் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டாள். இதற்குள்ளாகக் குப்பி கஞ்சி குடித்துவிட்டு நித்திரையில் மூழ்கிவிட்டாள். மதனன்



கொடுத்திருந்த கடிகாரத்தை எடுத்துக் காந்தா அடிக்கடி மணியைப் பார்த்தாள். வேண்டுமென்றே கடிகாரம் மெதுவாக ஓடுவதாகக் கூட அவளுக்குத் தோன்றிற்று. மதனன் வருகிறானென்று ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண்டே நின்றாள். சென்னையிலிருந்து புறப்பட்ட மதனன் ஓரிடத்திலும் நிற்கவில்லை. இரவு போஜனத்தைக்கூட அவன் மறந்துவிட்டான். தந்தியில் குறித்தபடி இரவு 2 மணிக்கு எப்படியாவது காந்தாமணியைச் சந்தித்துவிடவேண்டுமென்ற வைராக்கியத்துடன் அவன் பிரயாணம் செய்தான்.

மணி இரண்டடித்தது. மதனனைக் காணவில்லை. கண்மணி காந்தாவுக்குக் கவலைவந்துவிட்டது. கண்களில் நீர்பெருகிற்று. "மதனா! மதனா!" என்று அவள் முணுமுணுத்துக்கொண்டாள். சரியாக மணி 2-10க்கு மடமடவென்று ஒருவாலிபன் வருவதைக் காந்தா கண்டாள். பள்ளத்தைநோக்கி ஆற்றுநீர் பாய்வதைப்போல சிறுமி காந்தா குப்பிக்குத்தெரியாமல் வீட்டுக்கதவைத்திறந்துகொண்டு வாலிபனைநோக்கி ஓடினாள். "என்உயிரே! மதனா!" என்றாள் காந்தா! "காதலி! காந்தாமணி!" என்றான் மதனன். அதற்கதிகம் பேச்சைக்காணவில்லை. இறுக்கமான ஆலிங்கனத்தில் பார்ப்பனச்சிறுவனும், பஞ்சமச் சிறுமியும் கட்டுண்டனர். மெய்க்காதலின் மணம் அங்கே கம்மென்று கமழ்ந்துகொண்டிருந்தது. தர்மதேவதை ஆசீர்வதிப்பதைப்போல மரங்களின் இலைகள் காற்றில் அசைந்து ஒருவகையான மெல்லிய ஒலியைக் கிளப்பின. கண்கொளா அக்காக்ஷியை கண்டுகளிக்க அவாவிய சந்திரன் அப்பொழுது மேகக்கூட்டங்களிலிருந்து வெளியேவந்தான். பலநிமிஷங்கள் இருவரும் ஆனந்தமயமான ஆலிங்கனத்திலிருந்தார்கள். "கண்மணி! நீ சுகம்தானே? உனக்கு ஒன்றுமில்லையே?" என்று பரிவுடன் மதனன் வினவினான். "ஆருயிரே! நீயிருக்கையில் எனக்கென்னகுறை! நாம் ஆற்றோரத்திற்குச்சென்று பேசுவோம். உனக்குச்சொல்லவேண்டிய காரியங்கள் பலவாயிருக்கின்றன" என்றாள் கிள்ளைமொழியாள் காந்தாமணி. காதலர் இருவரும் ஆற்றுமணலில் அமர்ந்து பேசலானார்கள்.

மதனன்:- காந்தா! உன்னுடையகடிதம் நேற்று முற்பகல் 11 மணிக்குக் கிடைத்தது. எனக்குண்டான ஆத்திரத்திற்கு

அளவேகிடையாது. பிறகு பிற்பகல் ஒரு மணிக்கு உனது தந்தியும் வந்துவிட்டது! தந்தியைப்படித்தவுடன் என்மனம் என்ன பாடுபட்டிருக்குமென்பதை நான் சொல்லவேண்டுமா? காந்தா! இங்கு என்னநடந்தது? "மரணத்தின்மூலமாக விடுதலைபெறுவேன்" என்று நீ தந்தியில்வரைந்தாயே? பிரமாதமான சங்கதி நடந்திருந்தாலொழிய நீ அவ்வாறு எழுதியிருக்கமாட்டாயென்ற நம்பிக்கை எனக்குண்டு. எதையும் நீ ஒளிக்காதே. என்தந்தையென்றாவது, மேல்சாதியார் என்றாவது தயவுதாக்ஷிண்யம் காட்டாமல் யாவற்றையும் நீ எனக்குக்கூறவேண்டும். என்ன ஆபத்து உன்னைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது?

காந்தா:- காதல! ஒன்றிரண்டுஆபத்துகளாயிருந்தாலல்லவா இலகுவாகச் சொல்லமுடியும்? நீ சென்னைக்கு இங்கிருந்து புறப்பட்டுப்போனாய். அடுத்ததினத்திலேயே பிரமாதமான பரபரப்பைக் கிளப்பிவிட்டார்கள்.

மதனன்:- யார்?

காந்தா:- அக்கிரகார வாசிகள். உன்தந்தையாரிடம் ஊரிலுள்ளவர்கள் ஏதேதோ சொன்னார்களாம்.

மதனன்:- என்ன சொல்லியிருப்பார்கள்? நான் சேரியில் பிறந்த பஞ்சமப்பெண்ணைக் கல்யாணம்செய்துகொள்ளப் போகிறேனென்று கூறியிருப்பார்கள். அதைக்கேட்ட என்தகப்பனார் கூத்தாடினாரா?

காந்தா:- அன்பே! உன்தந்தை ஒருநாள் சேரியின்பக்கமாக வந்தார். எனது பிதாவும் வேறுசிலரும் அப்போது இருந்தார்கள். நீ எனக்கு ஒருவாரத்திற்குமுன்பு ஒரு கடிதம் எழுதியிருந்தாயல்லவா? அதை நான்படித்து ஆனந்தவெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தேன். உன்தந்தையார் எனதுபிதாவிடம் மிகுந்த கோபத்துடன் படபடத்துப்பேசலானார். என்பெயரை அவர் வெறுப்போடு உச்சரித்தார். நான் உடனே என்வீட்டிற்குச் சென்றுவிட்டேன். மதனா! பண்ணையார் என்னென்னசொன்னாரோ? அது எனக்குத்தெரியாது. என்தகப்பன் அடங்காச்சினத்துடன் ஓடோடியும் வந்தான். என்னை அளவுகடந்து இகழ்ந்தான். ஐயோ! எனக்கு வேசிஎன்ற பட்டத்தையும்கூட ஊரார் கட்டிவிட்டார்கள். சேரியில் பிறந்த நான் படிக்கக்கூடாதாம்.



பேசக்கூடாதாம். எழுதக்கூடாதாம். நான் வீட்டைவிட்டு வெளிச்செல்லவே கூடாதென்று என்தகப்பன் தடுத்தான். அவனோடு என்தாயும், சுற்றத்தாரும் சேர்ந்துகொண்டார்கள். என்னால் தமது வயிற்றுப்பிழைப்பில் மண்விழுந்துவிடுமேயென்று அவர்கள் கதறினார்கள். ஏழைகளும், படிப்பில்லாதவர்களுமான அவர்கள் என்னசெய்வார்கள்? எனது தந்தையிடம் நான் விவகாரம்பேச வாயெடுத்தேன். அவன்கோபத்தில் என்னை அடித்தான். பிறகு நீகொடுத்த புத்தகங்களையெல்லாம் அவன் நெருப்பிற்கு இரையாக்கினான். அவற்றையெல்லாம் நான் சகித்துக் கொண்டேன்.

மதனன்:- கண்மணி! என்னால்தானே உனக்கு இவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டன! துன்பத்தின் மூலமாகத்தான் இன்பத்தை நாம் ஈட்டிக்கொள்ளவேண்டும். கண்ணே! ஊரார் உன்னை வேசையென்று இகழ்ந்ததற்காகவா நீ பிராணனை விட்டுவிட நேரிடுமென்று தந்தி பேசினாய்? காந்தா! உன்னுடைய உயிருக்கு விலையோ, மதிப்போ கிடையாதென்று எண்ணினாயா? நீ என்னுடையவள் அல்லவா? எனது அனுமதியில்லாமல் உன்னை நீயே கொன்றுகொள்ள நினைக்கலாமா?

காந்தா:- மதனா! நீ நினைப்பது பிசகு. மேல்சாதியாரின் கொடுமைகளையும், அடிமைப் புத்தி தடித்த பரம ஏழைகளான என்னினத்தாரின் இகழ்ச்சிகளையும் நான் சகித்துக்கொள்ளுவேன். என் உயிருக்கு—என்னுடைய மானத்திற்கு—ஆபத்துவந்துவிட்டது.

மதனன்:- என்ன? என்ன? உன் மானத்திற்கா? உனது மானத்தைக் குலைக்க எந்த மூர்க்கன் துணிந்தான்?

காந்தா:- காதல! ஆத்திரப்படாதே. வருகிற கஷ்டங்கள் வந்துதானே தீரும்? பொருந்துவன போமினென்றால் போகுமோ?

மதனன்:- கண்மணி! விபரம் என்ன? சீக்கிரமாகச்சொல்லு. தீண்டாமை என்ற பிசாசு மாந்தரது உயிரை வாங்குவதுடன் நிற்குமென்றுதான் நான் நம்பியிருந்தேன். அது உன்போன்ற பெண் இரத்னங்களின் கற்பையுமா பறிமுதல் செய்யப்பார்க்கிறது?

காந்தா:- என் உயிரே! உள்ளதை உள்ளபடி நான் கூறுகிறேன், கவனமாய்க் கேள். எனக்கு வாய்ப்பூட்டு, காலவிலங்

குச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்ட அடுத்த நாள் உனக்கு விவாக ஏர்பாடுகளை உன் தந்தையார் செய்ய ஆரம்பித்தார் என்ற செய்தி எனக்கு எட்டிற்று.

மதனன்:- காந்தா! அப்போது நீ என்மீது சந்தேகப்பட்டாயல்லவா? எனது சம்மதத்துடன்தான் கல்யாணம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறதென்று நீ எண்ணினாயல்லவா?

காந்தா:- அட! அசடே! நான் அவ்வாறு நினைப்பேனா? அப்படி நான் சந்தேகப்பட்டிருந்தால் உன்னை நம்பி உனக்கு நான் தந்தி பேசியிருப்பேனா? உன் தந்தை உன்னைக் கலக்காமல் கல்யாணத்தை நிச்சயம் செய்தாரென்பது எனக்குத் தெரியும்.

மதனன்:- ஆம்! ஆம்! கண்மணி! நான் அசடுதான். உனது மன உறுதியை நான் உணராமல் பேசிவிட்டேன். மன்னித்துவிடு!

காந்தா:- மன்னிப்பெல்லாம் பிறகு பார்ப்போம். நான் இவ்வூரிலிருந்தால் நீ கமலம் என்ற பிராமணப் பெண்ணை வரிக்க நிச்சயமாக மறுத்துவிடுவாயென்று எண்ணிய உன் தந்தையும், அவரது சகாக்களும், என்னை இக்கிராமத்திலிருந்து அப்பாற்படுத்தச் சூழ்ச்சி செய்தார்கள். நமது கிராமத்திற்கு நாகராஜன் என்ற போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறான்.

மதனன்:- அவனா? அவன் மகா குரூரனாயிற்றே? அவனைக் கொண்டு உன்னைத் துன்புறுத்த என் தந்தை ஏற்பாடு செய்தாரா?

காந்தா:- ஆம்! நாகராஜனிடம் உன் தந்தையார் என்ன சொல்லியனுப்பினாரென்பதை நான் அறியேன். நேற்று முன்தினம் நடு இரவில் நாகராஜன் இரண்டு போலீசாருடன் என் வீட்டிற்குவந்து கதவைத் தட்டினான். எனது தாய் போலீசாரைக் கண்டதும் நடுநடுங்கினாள். என்மீது பிரமாதமான புகார்கள் வந்திருப்பதாகவும், கள்ளுக்கடை முன்பு நான் குழப்பம் செய்தேனென்றும், ஊரில் சமூகப் பிளவுகள் என் காரணமாக உண்டாகிறதென்றும், இவற்றைப்பற்றி என்னைவிசாரிக்கவேண்டுமெனவும், தனது முகாமிற்கு நான் உடனே வரவேண்டுமென்றும் நாகராஜன் கூறினான். இரவு நேரத்தில் வரமுடியாதென்



றும், சட்டப்படி சமன் அனுப்பவேணுமென்றும் நான் அவனுக்குப் பதிலளித்தேன். டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் எனக்காகக் காத்திருக்கிறாரென நாகராஜன் பொய்சொன்னான். போலீசாரின் வழக்கம் தெரியாதா? அப்படிச் செய்துவிடுவேன், இப்படிச் செய்துவிடுவேனென்று நாகராஜன் பூச்சாண்டி காட்டினான். எனது தாய் அச்சமிகுதியில் அலறினாள். நாகராஜனுடன்சென்று வாக்குமூலம் கொடுத்துவிட்டுவாவென்று அவள் என்னைத் தள்ளினாள். டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் வந்திருக்கிறாரென நாகராஜன் சொன்னதை நம்பிக்கொண்டு, என் தாயின் கூச்சலுக்கு அஞ்சி நான் மிகுந்த துயரத்துடன் நாகராஜனின் முகாமுக்குப்போனேன்.

மதனன்:— காந்தா! நீ ஏன் போனாய்? இரவுநேரத்தில் சின்னஞ்சிறுமியான நீ நாகராஜனுடன் செல்லலாமா! அவன் மகா கொடியவனாயிற்றே? அவன் இழிந்த காமுகனென்று உலகமெல்லாம் பழிக்கின்றதே? நடுஇரவில் அகாரணமாகவும், வாரண்டு இல்லாமலும் ஒருவரைப்போலீசார் தொந்தரவு செய்யக்கூடாதென்ற சட்டத்தை நீ அறியமாட்டாயா?

காந்தா:— மதனா! நான் அறிவேன். நாகராஜனைப்பற்றி எனக்கு விசேஷமாக ஒன்றும் தெரியாது. நான் அவனுடன் செல்ல மறுத்திருந்தால் அவன் பலாத்காரத்தைப் பிரயோகித்திருப்பான். எனதுதாய் அலறியிருப்பாள். சேரியிலுள்ளவர்கள் ஒரே கூட்டமாக வந்திருப்பார்கள். படிப்பற்ற அவர்கள் பலவாறு என்னைப் பழித்துப்பேசுவார்களல்லவா? அதற்கு நான் அஞ்சினேன். சிறுபெண்ணான நான் ஒன்றியாக என்னினத்தாரை எதிர்க்கமுடியுமா?

மதனன்:— கண்மணி! நாகராஜன் என்ன சொன்னான்?

காந்தா:— என் உயிரே! அவனை நினைக்கும்பொழுதே என் நெஞ்சம் பதைபதைக்கின்றது. டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் முகாமிலிருக்கிறாரென்று அவன் சொன்னது பொய். என்னை அவன் சத்திரத்திற்கு அழைத்துச்சென்றான். நானும் அவனும் ஒரு அறைக்குட் பிரவேசித்தோம். உடனே அவ்வறைக்கதவு பூட்டப்பட்டது!

மதனன்:— ஆஹா! அப்பால் அவன் என்ன செய்தான்?

காந்தா:—காதல! நல்லவேளையாகவிபரீதமொன்றும்நேர்ந்துவிடவில்லை. தெய்வம் நமது கக்ஷியிலிருக்கின்றதென்ற நம்பிக்கை எனக்கு அப்போதுதான் உண்டாயிற்று. நாகராஜன் தனதுகாம இச்சையை வெளிப்படுத்தினான். தான் பண்ணையாரினால் ஏவப்பட்டதை ஏற்றுக்கொண்டான். என்னை எப்படியாவது இவ்வூரிலிருந்து அப்பாற்படுத்திவிடவேண்டுமென்று ஆதிசேஷய்யர் நாகராஜனிடம் கேட்டுக்கொண்டாராம். அவ்வேலையைச் செய்துமுடிப்பதற்காக நாகராஜன் அவரிடம் ஆறாயிரம் ரூபாய் லஞ்சம் ரொக்கமாக வாங்கிக்கொண்டானாம். என்மீது ஏதாவது குற்றத்தைச்சாட்டி ஜெயிலுக்கு அனுப்பிவைக்கவேண்டுமென்ற தீர்மானத்துடன் நாகராஜன் என் வீட்டிற்கு வந்தானாம். என்னைக்கண்டதும் அத்தீர்மானம் பறந்தோடிவிட்டதாம்!

மதனன்:— ஆறாயிரம் ரூபாய்! கைலஞ்சம்! எதற்காக? ஏழைக்குலத்தில்பிறந்த உன்னை வஞ்சித்துக்கெடுப்பதற்காக! சீ! சீ! இதென்ன கொடுமை! இதென்ன இழிவு!

காந்தா:— மதனா! ஏன் ஆத்திரமடைகிறாய்? பிறப்புச்சாதியையும், தீண்டாமையையும்இலகுவாக வென்றுவிடமுடியுமா? கஷ்டங்களை அனுபவித்துத்தானே ஆகவேண்டும்? நாகராஜன் என்னென்னவெல்லாமோ பேசினான். நான் அவனுக்கு மனைவியாகிவிடவேண்டுமென்று அவன் கேட்டான். நான் என்ன செய்வேன்? என்னுடையதலை சுழலவாரம்பித்தது. நான் சித்தப்பிரமை பிடித்தவளைப்போலச் சில நிமிஷங்கள் நின்றேன். அவனோடு சிறிது விவகாரம்பேசிப்பார்த்தேன். அவன் என்னை விடுவதாயில்லை. நான் அவனது விருப்பத்திற்கு இணங்கவில்லையாயின் பலாத்காரமாக என்கற்பைக் கெடுத்துவிடுவேனென்று அவன் கூறினான். அவ்வறையில் அவனிடம் தன்னந்தனிமையாக அகப்பட்டுக்கொண்டிருந்தேன். காமுகனான அவன் வெறிபிடித்தவனைப்போல எழுந்து என்னைநோக்கிவந்தான். தப்பித்துக்கொள்ள வேறுமுடியாதென்பதை அறிந்த நான் அவனைப் பொய்சொல்லி ஏமாற்றினேன். உன்னை நான் வெறுப்பதாக நாகராஜனிடம் கூறினேன். கமலத்தைக் கடிமணம் செய்யப்போகும் நீ பயங்கரமான மோசடிக்காரனென்று அவனிடம் இகழ்ந்தேன். எனக்கு மாதவிடாய்க்காலமென்றும், இரண்டுநாட்கள் சென்றபிறகு அவ



னிஷ்டப்படி நடந்துகொள்ளத்தயாரென்றும் நான் அவனுக்குச் சொன்னேன். சந்தோஷமாயிருப்பதைப்போல நான் நகைத்தேன். அவன் என்னை நம்பிவிட்டான். கமலத்திற்கும்உனக்கும் விவாகம் எந்த முகூர்த்தத்தில் நடைபெறுமோ, அதே முகூர்த்தத்தில் அவன் என்னை இதே ஊரில்வைத்துக் கல்யாணம்செய்துகொள்வதாகச்சொன்னான். அவ்வளவுடன் என்னை அவன் விட்டுவிட்டான். மாதவிடாய்கண்ட என்னைத்தீண்டுவது தகாதென்ற நல்லறிவை அறக்கடவுள்தான் அவனுக்குக் கொடுத்தார். மதனா! என்னை அவன் உடனே என் வீடுகொண்டு சேர்த்தான். மறுநாள் காலையில் உனக்கு நான் தந்தியடித்தேன். நீயும் வந்துவிட்டாய். நேற்று மாலை 6 மணிக்குக் காமுகன் நாகராஜன் எனக்கொரு கடிதம் அனுப்பினான். நாளை இரவு 10 மணிக்கு அவன் என் வீட்டிற்கு வருவானாம். எதற்காகவென்பதை நான் சொல்லவேண்டுமா? அக்கடிதம் இதோ இருக்கின்றது. நீயே படித்துப் பார்த்துக்கொள்.

தன்னிடமிருந்த மின்சார கைவிளக்கின் உதவியால் மதனசுந்தரன், நாகராஜனுடைய கடிதத்தைப் படித்துப் பார்த்தான். அவனுக்கு அடங்காச் சினம் மூண்டது. தனது தந்தையையும், சப் இன்ஸ்பெக்டர் நாகராஜனையும் கீறிக் கிழித்துவிடவேண்டுமென்றுகூட அவன் நினைத்தான். கொஞ்சநேரம் அவன் யோசனை செய்து ஒரு முடிவிற்கு வந்தான். செல்வி காந்தாமணியைத் தன் மடிமீது தூக்கிவைத்துக்கொண்டான். "காந்தா! நீ மிகவும் புத்திசாலி. நாகராஜனை நீ வெகு சாமர்த்தியமாக ஏமாற்றிவிட்டாய். இனி உன்னை ஒருவராலும் ஒன்றுமே செய்யமுடியாது. கண்மணி! நான் ஒரு யுக்தி சொல்லுகிறேன் கேள். நாளைக் காலையில் நீ நாகராஜனுக்கு ஒரு மறுமொழியை அனுப்பவேண்டும். அதிகமாக எதுவும் எழுதாதே. "கடிதம் கிடைத்தது. குறித்தபடி வருக. தகுந்த உபசாரங்களுடன் வரவேற்கிறேன்," என்று நீ எழுதி அனுப்பு. அப்பால் நடக்கவேண்டியதை நான் கவனித்துக்கொள்கிறேன்," என்றான் மதனன்.

காந்தா:- என்ன? நாகராஜனை வரச்சொல்லவா?

மதனன்:- ஆம்! கண்மணி! நான் இருக்கும்பொழுது உனக்கென்ன கவலை! அவனை நான் கண்டுபேசவேண்டும். அவன்

கைப்பட எழுதிய இக்கடிதத்தைக்கொண்டே அவனை நாம் முறியடிக்கவேண்டும். நாளைக்கே அவன் இவ்வூரிலிருந்து ஓடிப்போகும்படி நான் செய்கிறேன். கண்ணே! போலிஸ் அதிகாரியான அவன் கைலஞ்சம் வாங்கியிருக்கிறான். அகாரணமாக உன்னைத் துன்புறுத்த முனைந்திருக்கிறான். நேற்று இரவு நீ அவனிடம் பொய்சொல்லித் தப்பித்திராவிட்டால் என்ன நடந்திருக்கும்? "மரணத்தின் மூலம் விடுதலைபெறுவேன்" என்று நீ தந்தியில் எழுதியிருந்ததின் தார்ப்பரியத்தை இப்போதுதான் நான் அறிகிறேன். இவ்வளவு பெரிய குற்றங்களைச் செய்த நாகராஜன் தண்டனையின்றித் தப்பித்துக்கொள்ளலாமா? காந்தா! நான் சொல்லுகிறபடி செய். நான் நாளைப் பகலில் உன்னைச் சந்திக்க வேண்டாம். சந்தித்தால் நாகராஜன் உன்னிடம் சந்தேகம் கொண்டு இரவில் வராமலிருந்துவிடுவான். இரவு மணி 9-30க்கு நான் வருகிறேன். அவன் 10 மணிக்கு வரட்டும். வந்ததின் பிறகு என்ன நடக்கிறதென்பதை நீ கவனித்துக்கொள். காந்தாமணி! இனி எதற்கும் அஞ்சாதே! இனிமேல் நான் உன்னைவிட்டுப் பிரியவேமாட்டேன். பகலில் நான் அக்கிரகாரத்திலிருந்து நிலைமையை ஆராய்கிறேன்.

காந்தா:- மதனா! உனது பெற்றோரிடம் நீ முரட்டுத்தனமாக நடந்துகொள்ளக்கூடாது. அறியாமையின் திண்மையில் அவர்கள் எதைப் பேசினாலும் நீ பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். உன்னுடைய பெற்றோர் எனக்கும் ஒருவகையில் பெற்றோரல்லவா? அவர்களுடைய மனம் புண்பட்டால் அந்த நான் பொறுக்க முடியுமோ? மதனா! அவசரப்பட்டு எதையும் செய்துவிடாதே. உன்னுடைய வருங்காலத்தையும் நீ நன்கு கவனித்துக்கொள். உனக்காக-உன்னுடைய நன்மைக்காக-நான் எனது காதலை வேண்டுமென்றாலும் தியாகம் செய்வேன். எதற்கும் நான் பின்னடையமாட்டேன்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் மதனன் காந்தாமணியை வாரி அணைத்துகொண்டான். முத்தங்களைச் சொரிந்தான். "அடி! பெண்கள் நாயகமே! உனக்குள்ள சகிப்புத் தன்மையும், உயர்ந்த குணமும் என் பெற்றோருக்கு இல்லையே? அன்பின் உருவே! எனக்காக நீ இவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தது



போதாதா? இன்னும் நீ எதைத்தான் எனக்காகத் தியாகம் செய்யவேண்டும்? காதலி! நேரமாகிவிட்டது. நீ சுகமே வீட்டிற்குப் போ. நிம்மதியுடன் உறங்கு. நான் சொன்னபடி காலையில் நாகராஜனுக்குக் கடிதத்தை அனுப்பு. உனது கட்டளையை நான் மீறமாட்டேன். என் பெற்றோரிடம் நீ குறித்ததைப் போலவே அன்புடன் நடந்து கொள்கிறேன். நீ இராணியல்லவா? நான் உனக்குக் கட்டுப்பட்டவன். இராணி காந்தாமணி இட்டது தான் எனக்குச் சட்டம்! ஆருயிரே! "இனி அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமில்லையே!" என்று நீ பாடு. இரவு சரியாக 9-30 க்கு நான் உன் வீடுவருவேன்" என்று அருமையாகவும், இனிமையாகவும் மதனன் சொன்ன சொற்களைக் கேட்ட பைங்கொடியாள் காந்தாவின் உடல் பூரித்தது. அவள் மதனனின் ஆனந்தமயமான ஆலிங்கனத்தில் சொக்கிப் போயிருந்தாள். சிறிது நேரத்தில் காதலர் பிரிந்து சென்றனர். அதிகாலையில் மதனன் ரயிலிலிருந்து வருகிறவனைப் போல வீடுவந்து சேர்ந்தான்.

# அத்தியாயம் 7.

## "நீ சத்தியாக்கிரகியல்லவா?"

வீடு வந்து சேர்ந்த மதனசுந்தரனை பண்ணையார் ஆதிசேஷய்யர் பார்த்தார். ஆனால் அவனுடன் அவர் பேசவில்லை. தன் தந்தையிடம் மதனன் கோபத்தைக் காண்பிக்கவில்லையென்றாலும் அவனுடைய முகம் கடுகடுத்திருந்ததை ஆதிசேஷய்யர் குறித்துக்கொண்டார். அப்பய்யா தீக்ஷதர் எவ்வாறோ மதனனைச் சரிப்படுத்தி அனுப்பியிருக்கிறாரென்று ஆதிசேஷய்யர் நினைத்துக் கொண்டிருந்தார். பட்டப்பகலில் பலபேர் பார்த்திருக்கத் தன் தகப்பனாருடன் பகைமை பாராட்டிப்பேசவேண்டாமென்று மதனன் மௌனம் சாதித்தான். மதனனின் மௌனத்தை ஆதிசேஷய்யர் நேர்விரோதமாக அர்த்தம் செய்துகொண்டார். ஊருக்குவந்த மதனன் காந்தாமணியைத் தேடிக்கொண்டுபோகாதது அவருக்கு ஆச்சரியமாயிருந்தது. தீக்ஷதர் சாமர்த்தியமாக மதனனை மயக்கிக் காந்தாவை மறக்கும்படி செய்துவிட்டார்போலும் என்றே ஆதிசேஷய்யர் நினைத்தார். கல்யாண ஏற்பாடுகளில் அவர் வெகு மும்முரமாக இறங்கினார். "கல்யாண மாப்பிள்ளை வந்துவிட்டார்! வந்துவிட்டார்!" என்று அக்கிரகாரமெங்கும் பேசிக்கொண்டார்கள். வாலிபன் மதனின் மனப்பான்மையை அவர்கள் அறிவார்களோ? "தீக்ஷதரை எங்கே? அவரும் ஏன் வரவில்லை" என்று பண்ணையார் தனக்குள் வினவிக்கொண்டார். ஒருசமயம் சற்றுநேரம்சென்று தீக்ஷதர் வரக்கூடுமென்று நினைத்தார். மதனனின் தாய் அலர்மேல் மங்கை தன்னருமை மைந்தன் வந்துவிட்டானென்று ஆனந்தபாஷ்பத்தைச் சொரிந்தாள். "குழந்தாய்! இப்பொழுதுதான் வந்தாயா? மிகவும் இளைத்துப்போயிருக்கிறாயே? கிளப்புச் சாப்பாடு உடம்புக்கு ஆகவில்லையா? அப்பனே! என்ன படிப்பு வேண்டியிருக்கிறது? நமக்கென்ன சொத்து இல்லையா? இருக்கிறதை நீ இங்கிருந்தபடியே பரிபாலனம் செய்தாலே போதுமானது" என்று அலமேலு ஏதேதோ பேசி மதனனை உபசாரம் செய்தாள். அவனுடைய செவிகளில் ஒன்றும் ஏறவேயில்லை. இரவு நேரம் எப்பொழுதுவரும்? நாகராஜனுக்கும், அவனை ஏவிவிட்ட



தன் தந்தைக்கும் தகுந்தவோர் பாடத்தைக் கற்றுக்கொடுத்துவிடவேண்டுமே? என்று அவன் எண்ணமிட்டுக்கொண்டிருந்தான். "அம்மா! என் உடலுக்கு ஒரு கெடுதலுமில்லை. இரவில் தூக்கமில்லாமல் ரயில் பிரயாணம் செய்ததால் சோர்வாயிருக்கிறது. நான் இன்று பகல் முழுவதும் ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டும். யாராவது என்னைப் பார்க்கவந்தால் நான் தூங்குகிறேனென்று சொல்லிவிடு" என்று தன் தாயிடம் மதனன் கூறினான். தன்னுடைய தனியறையில் போய் கதவைத் தாளிட்டுக் கொண்டான். அவனுக்கு ஆத்திரம் ஒருபக்கம்; துயரம் ஒருபக்கம்; அதே சந்தர்ப்பத்தில் சிரிப்பும் வந்தது.

இதற்கிடையில் நாகராஜன் காலையில் எழுந்தான். "காந்தாமணி! கட்டழகி!" என்று ஸ்மரித்துக்கொண்டேயிருந்தான். தன்னுடைய வேலைக்காரர்களில் ஒருவனைக் காந்தாவின் வீட்டிற்கு அனுப்பிவைத்தான். சிறுமி காந்தா மணி மதனன் சொன்ன பிரகாரம் கடிதத்தை எழுதிக்கொடுத்தாள். அதை நாகராஜன் படித்தான். அவனுக்கு ஆனந்தம் பொங்கிவிட்டது. பழம் நழுவிப் பாலில் விழுந்து, பாலும் பழமும் வாயில் விழுந்துவிட்டதென்று அவன் களிப்பெய்தினான். "ஆம்! ஆம்! செல்வி காந்தாமணி மிகவும் புத்திசாலி, அறிவாளிகள் நீளமாகவும், அதிகமாகவும் ஒன்றையும் எழுதமாட்டார்கள். கற்றுணர்ந்தார் கண்டது அடக்கம் என்பது பொய்த்துவிடுமோ? "குறித்தபடி வருக. மரியாதையுடன் வரவேற்கத் தயாராயிருப்பேன். இரவு மணி பத்துக்கு வாருங்கள்" என்று இரத்னச் சுருக்கமாகக் காந்தா எழுதியிருக்கிறாள். எனக்கு அவள் மரியாதைகள் செய்யப்போகிறாளாம்! அடி! கொஞ்சும் அஞ்சுகமே! உன்னிடமிருந்து நான் உபசாரங்களை விரும்பவில்லையடி! உன்னுடைய ஆலிங்கனம்தான் எனக்கு வேண்டும்! "பத்துமணிக்கு வருகிறேன். இன்றிரவு நீயும் நானும் ஒன்றுவோம். இன்பவெள்ளத்தில் நீந்துவோம்" என்றெல்லாம் காமுகன் நாகராஜன் ஆகாயக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தான். அழகான உரோஜா மலர்மாலையொன்று இரவில் கொண்டுவருமாறு கட்டளையிட்டான். "கண்மணி காந்தா என்னைத் தனியாக வருமாறு எழுதியிருக்கிறாள். வாஸ்தவம்தானே? சிறுபெண்ணாகையால் அவளுக்கு வெட்கமாயிருக்கிறது! அவளிஷ்டப்படியே நான் தனியே போகிறேன்" என்று நாகராஜன் தீர்மானித்

துக்கொண்டான். காந்தாமணி தனக்கே சொந்தமாகிவிட்டாளென்ற திட்டமான நம்பிக்கை அவனுடைய மனத்தில் வேரூன்றிவிட்டது. இச்சந்தர்ப்பத்தில் பண்ணையார் ஆதிசேஷய்யர் மிகுந்த குதூகலத்துடன் நாகராஜனைப் பார்க்கவந்தார்.

நாகரா:- பண்ணையார்வாள்! என்ன விசேஷம்?

ஆதிசே:- மதனன் வந்துவிட்டான்!

நாகரா:- அப்படியா? என்ன செய்கிறான்?

ஆதிசே:- இன்ஸ்பெக்டர்வாள்! எல்லாம் பெரியவர்களுடைய ஆசீர்வாதம்! வந்ததும் வராததுமாக அவன் முரட்டுத்தனமாகப் பேசிவிட்டு, கருப்பாயியைத் தேடிக்கொண்டு சேரிக்கு ஓடிவிடுவானோவென்று நான் பயந்துகொண்டிருந்தேன். என்னுடைய முன்னோர் செய்த பூஜாபலத்தின் விசேஷம் பயல் வீட்டைவிட்டு வெளியில் போகவேயில்லை. தடித்தனமாக ஒன்றுமே பேசவில்லை.

நாகரா:— பண்ணையார்வாள்! நானல்லவா இங்கே இருக்கிறேன்? அது மதனனுக்குத் தெரிந்திருக்கவேண்டும்! கருப்பாயியின் வீட்டுப்பக்கத்திற்கு அவன் இனிமேல் போவானென்று நினைக்கிறீர்கள்? ஒருகாலத்தும் மாட்டான். நான் நேற்றைக்கே சொன்னேனே? கருப்பாயி என் கைவசமிருக்கிறாள்!

ஆதிசே:- எல்லாம் உங்களுடைய புண்ணியம்! இன்ஸ்பெக்டர் வாள்! இதுவரையிலும் எல்லாம் திருப்திகரமாக முடிந்துவிட்டது. பயல், கமலத்தின்கழுத்தில் தாலியைக்கட்டுகிறவரையிலும் நீங்கள் இவ்வூரில் தாமதித்துவிட்டுத்தான் போகவேண்டும்.

நாகரா:- அதற்கென்ன ஆக்ஷேபணை? அப்படியேசெய்கிறேன். பண்ணையார் வாள்! நீங்கள்மட்டும் என்னைக் கொஞ்சம் கவனித்துக்கொள்ளவேண்டும்.

ஆதிசே:- அதற்கென்ன? காரியம்முடியட்டும்.

இவ்வாறு பேசிவிட்டு ஆதிசேஷய்யர் வீட்டிற்குத் திரும்பினார். தன்மனைவி அலமேலுவிடம்போய், "என்னடிசங்கதி? பயல் ஏதாவது சொன்னானா!" என்று வினவினார்.

அலமேலு:- என்னசொல்லுவான்? மதனன் பச்சைக்குழந்தை. அவனுக்கு என்னதெரியும்?

ஆதிசே:- பச்சைக் குழந்தையா? வாயில் விரலைக்கொடுத்தால் கடிக்கத்தெரியாதோ? கருப்பாயிப் பைத்தியம் அவனைவிட்



டுத்தொலைந்துவிட்டதா?

அலமேலு:- ஊரார் பேசுகிறவம்புகளை என்னிடம் கொண்டுவந்து அளக்காதேயுங்கள். குழந்தை இரவில் தூக்கமில்லாமல் வந்து களைப்போடு தூங்குகிறான். கருப்பாயியும், கிருப்பாயியும்!"

ஆதிசே:- கோபித்துக்கொள்ளாதேடி! உன்மகன் மிளகாய்ப் பழம்போல நிரம்ப நல்லபிள்ளை என்பது எனக்குத்தெரியும். அவன் கல்யாணசங்கதியைப்பற்றி ஒன்றுமே பேசவில்லையா?

அலமேலு:- ஒன்றும் பேசலை. சிறுபிள்ளைதானே? தன்கல்யாணத்தைப்பற்றிக் கேட்க அவனுக்கு நாணமாயிருக்காதா? அவன்சொன்னான், இவன்சொன்னானென்று ஏதேதெல்லாமோ உளறினீர்களே? மதனன்வந்து சேரியின்திசைக்குப் போனானா? தங்கம்போல அவனிருக்கிறான்.

ஆதிசே:- என்னவோ அம்மா! இவ்வளவு சாதுவாக மதனன் இருப்பானென்று நான் எதிர்பார்க்கவில்லை. இது நன்மைக்கோ! தீமைக்கோ!

ஆதிசேஷய்யர் இவ்வளவுடன் வீட்டிலிருந்து வெளிப்பட்டார். சம்மந்தி கிருஷ்ணசாமி அய்யரிடம்போய் மதனனைக்குறித்து வெகு உற்சாகமாகப் பேசிக்கொண்டிருந்தார்.

இரவுநேரம் வந்தது. மதனன் எட்டுமணிக்கே இரவுபோஜனத்தை முடித்துக்கொண்டான். "அம்மா! நான் என் அறைக்குச்செல்லுகிறேன். என்னை ஒருவரும்வந்து எழுப்பக்கூடாது" என்று தாயிடம் கேட்டுக்கொண்டான். அலமேலு வீட்டுவேலைகளைக் கவனிக்கலானாள். பண்ணையார் ஆதிசேஷய்யர் கல்யாணச் சாமான்களுக்கு அட்வான்ஸ்கொடுத்துக்கொண்டிருந்தார். ஒருவரும் மதனசந்தரனைக் கவனிக்கவில்லை. சரியாக மணி 9-15க்கு மதனன் மின்சாரக்கைவிளக்குடன்வெளியேறி எவருக்கும்தெரியாமல் காந்தாமணியின்வீடுபோய்ச் சேர்ந்தான். குப்பி எட்டுமணிக்கே குறட்டைவிட ஆரம்பித்துவிட்டாள். தனக்கு நன்குதெரிந்த இரண்டு சிநேகிதர்களையும் மதனன் காந்தாவின் வீட்டிற்கு அருகில் வந்திருக்கும்படி சொல்லியிருந்தான். அவர்களும் தயாராயிருந்தார்கள். ஒருவன்கையில் நீண்ட கயிறு இருந்தது. மற்றவன்பழைய துடைப்பைக்கட்டையொன்றைவைத்துக்கொண்டிருந்தான். மணி 9-30-க்குக் காந்தாவின் வீட்டிற்கு

வந்த மதனன், நண்பர்கள் இருவரையும ஒரு மரத்தடியில் பதுங்கியிருக்குமாறு சொன்னான். "தோழர்களே! இங்கு ஒரு மனிதன் 10 மணிக்கு வருவான். நேரடியாக காந்தாவின் வீட்டிற்குள் நுழைவான். நான் "வரலாமெ"ன்று சொன்னதும் ஒரே பாய்ச்சலில் நீங்கள் வரவேண்டும். நான் எதிர்பார்க்கிற மனிதன் முரடன்; அயோக்கியன்; அவனுக்கு நாம் சரியான ஒரு பாடத்தைக் கற்றுக்கொடுக்கவேண்டும்," என்று அவர்களிடம் சொல்லிவிட்டு மதனன் வீட்டிற்குள் பிரவேசித்தான். இவ்வளவும் சிறுமி காந்தாமணிக்குத்தெரியாது. மதனன்வருகிற காலடிச்சப்தம் கேட்டதும் காந்தா மடமடவென்று வந்தாள். அவனை ஆலிங்கனம் செய்துகொண்டாள். "வலிய அணைந்த சுகத்தை" மதனன் அனுபவித்தான். காதலர்பேசும் அர்த்தமேயில்லாத இனியமொழிகளை அவர்கள் பகர்ந்துகொண்டார்கள். கிட்டத்தட்ட மணி 10 ஆயிற்று. "காந்தா! நேரமாகிவிட்டது. காமுகன்நாகராஜன்வரும் சமயம் நெருங்கிவிட்டது. நீ இங்கேயே நில்லு. நான் அந்தமூலையில் பதுங்கிக்கொண்டிருக்கிறேன். நீ அஞ்சாதே. கூச்சலிடாதே. இமைப்பொழுதில் நான் அவனை ஒடுக்கி நற்புத்திகூறி விரட்டிவிடுகிறேன். பத்தடிக்க இன்னும் 5 நிமிஷங்கள்தானிருக்கிறது. தைரியமாக இரு" என்று கூறிவிட்டு மதனன் இருளடைந்த ஒருமூலையில் பதுங்கிக்கொண்டான்.

போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் நாகராஜன் மணி ஒன்பதுமுதற்கொண்டே தன்னை அலங்கரித்துக்கொள்ளலானான். மெல்லிய ஸல்லா வேஷ்டியை அவன் உடுத்தினான். பளபளப்பான பட்டுச்சட்டையை அணிந்துகொண்டான். தைலத்தைத்தடவித்தலையை வாரிவிட்டுக்கொண்டான். ஜவ்வாதுபொட்டைத் தட்டையாக நெற்றில் வைத்துக்கொண்டான். அழகான ஜரிகை அங்கவஸ்திரத்தையெடுத்து மேலே போட்டுக்கொண்டான். உடைகளிலெல்லாம் வாசனைத்தைலங்களை ஊற்றினான். கமகமவென்று அவனைச் சுற்றி நறுமணம் வீசலாயிற்று. கறுப்புப் பாதரக்ஷைகளையும் அணிந்தான். தன்னுடைய அழகைப் பளிங்கில்பார்த்து மகிழ்ந்தான். "எனக்கென்னகுறை? நான்ஷோக்காகத்தானிருக்கிறேன். எனக்கேற்ற சுந்தரி காந்தாமணி கிடைத்துவிட்டாள். நாளைக்கே அவளை காஞ்சீபுரத்திற்கு அழைத்துச்சென்று பட்டாடைகள் வாங்கிக் கொடுக்கவேண்டும்" என்று தனக்குள் நாகராஜன் சொல்லிக்கொண்டான். சிற்றின்பப் பாடலொன்றை உற்சாகமாகப் பாடினான். காலையில் தயாரிக்கச்சொன்ன அழகான உரோஜா மலர் மாலையைப் பன்னீரில் நனைத்து, இலையில் பொதிந்து எடுத்துக்கொண்டான். காமவேட்கை பிடர்பிடித்துத்தள்ள மாப்பிள்ளைக் கோலத்துடன் சப் இன்ஸ்பெக்டர் நாகராஜன் சிங்காரமாகவொய்யாரமாகக்காந்தாமணியின்குடிசைநோக்கிநடந்தான். "ஐயோ! பாவம்! செல்விகாந்தாமணி என்னுடைய வருகையைமிகுந்தஆவலுடன்எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள். சீக்கிரமாய்ப்போகவேண்டும்" என்று நாகராஜன் விரைந்து நடந்தான். சரியாக மணி பத்துக்குக் காந்தாவின் வீட்டைப் போயடைந்தான். பின்வாயிற்கதவு திறந்திருந்தது. "ஆம்! ஆம்! அருமைக் காந்தா எனக்காகக் கதவைத் திறந்துவைத்திருக்கிறாள்" என்று அவன் நினைந்து அகமகிழ்ந்தான். வீட்டினுள்ளே நுழைந்தான். ஒரு கல்லின்மீது செல்வி காந்தாமணி உட்கார்ந்துகொண்டிருந்தாள். நிலவொளியில் அவளது மதிமுகத்தை நாகராஜன் பார்த்தான். "அடி! கட்டிக்கரும்பே!" என்று சொல்லிக்கொண்டே அவளை வாரியணைய இருகரங்களையும் விரித்தவண்ணம் காந்தாமணியை நோக்கிக் காமுகன் நாகராஜன் நடந்தான்.



"அடே! நில்லு! நில்லு!....வரலாம்! சீக்கிரம் வாருங்கள்!"என்ற வார்த்தைகள் ஒரு மூலையிலிருந்து கிளம்பின. திடுக்கிட்டு நாகராஜன் சப்தம் வந்த திசையைத் திரும்பிப்பார்த்தான். அதே விநாடியில் இரண்டு வாலிபர்கள் வந்து நாகராஜனின் கைகளையும், கால்களையும் கயிற்றால் கட்டினார்கள். நாகராஜன் பொத்தென்று கீழே சாய்ந்துவிட்டான். மின்சார விளக்கை அடித்துக்கொண்டு கம்பீரமாக மதனன் நாகராஜனை அணுகினான். கலகலவென்று நகைத்தான். நாகராஜன் மதனனைப் பார்த்தான். தான் மோசம் போன விஷயம் அப்போதுதான் அவனுக்குத் தெரிந்தது. செல்வன் மதனனின் சுந்தரமான வதனத்தைப் பார்த்தவண்ணமே நின்ற கட்டழகி காந்தாவை நாகராஜன் திரும்பிப்பார்த்தான். பற்களை நெறநெறவென அவன் கடித்துக்கொண்டான். தன்னருமைக் காதலி காந்தாவை அத்துன்மார்க்கன் துன்புறுத்தியதை மதனன் நினைத்தான். அவனுக்கு ஆத்திரம் மூண்டது.

"நாகராஜா! நீ மன்மதனா! கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை நீ செய்து முடித்துவிட்டாயா? காத்திருந்தவன் பெண் சாதியை நேற்று வந்தவன் கொண்டுபோனானென்றாடா என்னை எல்லோரும் பரிகாசம் செய்யப்போகிறார்கள்? என் தகப்பனிடம் வாங்கின லஞ்சத்தைக் கொண்டு காந்தாவுக்கு ஆபரணங்களா நீ செய்யப்போகிறாய்? மாப்பிள்ளைக் கோலத்துடனா வந்தாய்! தோழர்களே! மாப்பிள்ளை அவர்களுக்கு உபசாரங்கள் அதிவிமரிசையாக நடக்கட்டும்" என்றான் மதனன். மதனனின் நண்பர்கள் இருவரும் சப் இன்ஸ்பெக்டர் நாகராஜனுக்கு வெகு ஆடம்பரமாகச் சாணிநீர் அபிஷேகம் செய்து வைத்தார்கள். தேய்ந்து போன பழைய துடைப்பத்தைக் கொண்டு மதனன் வெறி பிடித்தவனைப் போல நாகராஜனை அடிக்கலானான் நாகராஜனின் மூக்கிலிருந்து உதிரம் பாயலாயிற்று உடல் வீங்கிவிட்டது. "துன்மார்க்கனே! ஏழைப் பெண்ணென்றால்—பஞ்சம ஜாதியில் பிறந்த பெண்ணென்றால்—ஒழுக்கத்தில் குன்றியவளென்று நினைத்தாய்? இரவு நேரத்தில் அவளை அதட்டி உருக்கி உன்னோடு அழைத்தா சென்றாய்? இப்போது சுகமாயிருக்கிறதா?" என்று சொல்லிக்கொண்டே அடிக்குமேல் அடி மதனன் தீட்டினான். இதைக்கண்ட காந்தாமணி ஒரே பாய்ச்சலில் சென்று மதனனின் கரத்தைப்பற்றினாள். துடைப்பத்தைப் பிடுங்கிக் கீழே வீசினாள். "மதனா! இதென்ன கோபம்? இதென்ன வேலை? நீயும் கூடவா இவ்வளவு தூரம் பொறுமையை இழந்துவிடுகிறாய்? அன்பே! நீ சத்தியாக்கிரகியல்லவா? அகிம்சையை நீ நம்புகிறவனல்வா? உனது சகிப்புத் தன்மையை எங்கே? தண்ணளியை எங்கே? நாகராஜன் அறியாத்தனத்தினால் ஒரு காரியத்தைச் செய்திருந்தால் நீ அவனுக்குப் பிழையை எடுத்துக் காட்டிப் பேசித்திருத்தலாமே? வேண்டாம்! கோபத்தைவிட்டுவிடு. இவனா உனக்கு எதிரி? நான் நாகராஜனை மன்னிக்கத் தயாராயிருக்கிறேன். நீயும் அவனை மன்னித்துக் கண்யமாகவும், கௌரவமாகவும் அனுப்பிவிடு" என்றாள் செல்வி காந்தாமணி.

காந்தாவின்சொற்களைக்கேட்ட மதனனுக்கு ஓரளவுகோபம் தணிந்தது. "பெண்கள் நாயகமே! ஆம்! ஆம்! நான் சகிப்புத்தன்மையை இழந்து விட்டேன். அஹிம்சையை மறந்து விட்டேன்.

4170



ஐயோ! காந்தா தாழ்ந்த வகுப்பில் பிறந்தவளென்று உன்னை எல்லோரும் பழிக்கிறார்களே? உனது குணத்தை உள்ளபடி அறிந்து கொள்ளும் ஆற்றல் அவர்களுக்கு இல்லையே? இதோ கீழேகிடக்கும் இத்துன்மார்க்கன் உனக்குச் செய்த துரோகத்தை நினைத்ததும் என்னையறியாமலே எனக்கு ஆவேசம் வந்து விட்டது. என்ன அஹிம்சை! பெண்ணே! இத்தகைய அரக்கர்களை என்னசெய்தாலும் தகும். கேவலம் பணத்திற்காக தன்னுடைய மனசாக்ஷி,யை இவன் விற்கிரையம் செய்தான். இழிந்த காமப்பேய்க்கு உன்னை இவன் பலிகொடுக்க முனைந்தான். ஐயோ! காந்தாமணி! இன்றைக்கு நான் இங்கே வந்திருக்க வில்லையானால் உன் கதி என்னவாயிருக்கும்? உன்னை இவன் என்ன செய்திருப்பான்? நீ இரண்டு தினங்களுக்கு முன்பு இவனிடம் மன்றாடினாயே? கொஞ்சமாவது இவன் உனக்கு இரக்கம் காட்டினானா? ஏழைப் பெண்ணாயிற்றே யென்று பார்த்தானா? இல்லை! உன் உயிரை இவன் வாங்க முனைந்தான். தீண்டாமை என்ற பிசாசினால் ஏவப்பட்ட காமமென்ற இந்த அரக்கனுக்கு இரக்கம் காட்டவாவேண்டும்? சீ! சீ! இவனை பார்க்கும் பொழுதே எனக்கு மிகுந்த கோபமுண்டாகிறது." என்று படபடத்துமதனன் பேசிக்கொண்டே போனான். "மதனா! வேண்டாம்! வேண்டாம்! இன்னும் உனக்கு கோபம் தணிய வில்லையா? அவன் அரக்கனென்பதையும், மனச்சாக்ஷி யில்லாதவனென்பதையும் நான் மறுக்க வில்லை. அதற்குரிய தண்டனையை அவன் இப்போது அனுபவிக்கிறான். அவனுடைய நெஞ்சமே அவனை இப்போது சுடும். அதுவே போதுமானது" என்று திரும்பவும் காந்தாமணி மெல்லிய இனிய குரலில் மன்றாடினாள்.

மதனன் நாகராஜனை திரும்பித்திரும்பி பார்த்தான், "நாகராஜா! காந்தாமணியின் கருணையினால் நீ இன்று பிழைத்தாய் எனக்கிருந்த ஆத்திரத்தில் உன்னை நான் கொன்றுகூட இருப்பேன். அயோக்கியனே! சேரியில் பிறந்த பெண்ணென்றால் என்ன வேண்டுமானாலும் செய்து விடலாமென்று எண்ணினாயா? ஏழைப் பெண்ணின் மானத்திற்கு விலைகிடையாதென்று மதித்தாயா? பணக்காரர்களிடமாவது, மேல்சாதியாரிடமாவது இவ்வளவு துணிவாக நீ நடந்து கொண்டிருப்பாயா? நாகராஜா! உன்

னை நான் இவ்வளவுடன் விட்டுவிடுகிறேன். நீ என் தகப்பனிடம் பெண்ணைக் கடத்துவதற்காக ஆறாயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கியிருக்கிறாய். நீ உன் கைப்பட இதை எழுதியிருக்கிறாய். அக்கடிதம் இதோ என்னிடமிருக்கின்றது. உன்னுடைய வேலையை இமைப்பொழுதில் நான் போக்கடித்து விடுகிறேன். உன்னை இப்படியே நடுச்சந்திக்குத் தூக்கிச்சென்று ஊராரை யெல்லாம் அழைத்து உன் கதையைச் சொல்லி உன் மானத்தைச் சிதைத்து விடுகிறேன். நாகராஜா! என்ன நினைத்தாய்? போலீஸ் உடையை அணிந்து கொண்டால் எதை வேண்டுமென்றாலும் மனம்போனபடி செய்யலாமென்ற தெம்பா? எனது கண்மணி, கற்புத் தெய்வம் காந்தாவின் மானத்தைப் பறிக்க வந்த உன்னுடைய மானத்தை நான் போக்கிவிடுகிறேன். தோழர்களே! தூக்குங்கள் இவனை" என்று மீண்டும் மதனன் குரோதத்துடன் கர்ஜித்தான். இதைக் கேட்டதும் நாகராஜனுக்கு நடுக்கமுண்டாகி விட்டது. தனது பிழைப்பிற்கு ஆபத்து வந்து விட்டதே யென்று அவன் கரைந்தான். "ஐயா! என்னை இம்முறை மன்னியுங்கள். நான் இந்த நிமிஷத்திலேயே இவ்வூரை விட்டு ஓடிப்போய் விடுகிறேன். தெரியாமல் நான் தவறை இயற்றி விட்டேன். என் உடல் நோவுகிறது. என்னைத் தயவுசெய்து விட்டுவிடுங்கள்." என்று விம்மி விம்மி அழுதுகொண்டே நாகராஜன் மதனனிடம் மன்றாடினான்.

மதனனுக்குச் சாந்தமுண்டாகவில்லை. அவனுடைய முகம் சிவந்திருந்தது. "பாதகனே! உனக்கு மன்னிப்பா? உன்னை எவ்வாறு மன்னிப்பது? நீ மேல்சாதியில் பிறந்தவனென்கிறாய். படித்தவனென்று பகட்டுகிறாய். உனக்கு உத்தியோகப் பொறுப்புமிருக்கின்றது. குரங்கின் கையில் கொள்ளியைக் கொடுத்ததைப் போல உன்வசம் அற்ப அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதை நீ துஷ்பிரயோகம்செய்கிறாய். நிரபராதியான ஒரு பெண்ணின் உயிரை வாங்கவந்த இயமனல்லவா நீ? உனக்கு மன்னிப்பென்பதே கிடையாது. தோழர்களே! இந்த இரண்டுகால் மிருகத்தைத் தூக்குங்கள். சந்தியில் கொண்டு வீசுங்கள்!" என்று திரும்பவும் மதனன் பேசியதைக் கேட்ட செல்வி காந்தா மீண்டும் குறுக்கிட்டாள். "ஆருயிர் காதல! எனக்காக இவனை மன்



னிக்க மாட்டாயா? என்னிடம் உனக்கு இருக்கும் அன்பின் ஒருபகுதியை இவனிடத்து நீ காண்பிக்கமாட்டாயா? அவனை வேலையிலிருந்து விரட்டுவதாலும், அவமானப்படுத்துவதாலும் நமக்குக் கிடைக்கப்போகிற இலாபம் என்ன? ஒன்றுமில்லையே! மதனா! நீ ஒரு வீரன். வீரனுக்குத் தண்ணளிதானே ஆபரணம்? என்னுடைய காதலன் வைரியை மன்னித்தானென்று நான் பெருமையடைய ஆசைப்படுகிறேன். எனது இவ்வாசையை நீ பூர்த்திசெய்துவைக்கமாட்டாயா?" என்று சிறுமி காந்தா மதனனின் வலக்கரத்தைப் பற்றிக்கொண்டு கெஞ்சினாள். "காந்தாமணி! என்ன தயாளம்! எவ்வளவு உயர்ந்த உணர்ச்சி! சாதி இருமாப்புக்கொண்டவர்கள் உனது வார்த்தைகளைக் கேட்டு வெட்கித் தலை குனியவேண்டும். கண்மணி! உன்பொருட்டு இவனை நான் மன்னிக்கிறேன்." என்று அவளுக்கு மதனன் வாக்களித்தான். பிறகு நாகராஜனை நோக்கி, "நாகராஜா! காந்தாமணியினால் இன்று நீ தப்பித்தாய். உனது கடிதம் என்னிடமே இருக்கட்டும். உன்னோடு நான் எனது நண்பர்களில் ஒருவனை அனுப்புகிறேன், என் தந்தையிடமிருந்து நீ வாங்கின ஆறாயிரம் ரூபாயையும் கொடுத்து அனுப்பிவிடு. இன்றிரவிலேயே நீ இவ்வூரிலிருந்து ஓடிப்போகவேண்டும். உன்முகத்தை நான் இனிமேல் பார்க்கக்கூடாது. துன்மார்க்கனே! எதிர்காலத்திலாவது ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ளு. "தொலை! தொலை" என்று நாகராஜனை மதனன் எச்சரித்தான். நாகராஜனுடைய கட்டுகள் அவிழ்க்கப்பட்டன. இரங்கிய முகத்துடன் அவன் காந்தாவைப் பார்த்தான். அவனுடைய கண்களுக்கு அவள் ஒரு தெய்வத்தைப்போல் தோன்றினாள். அவனது மனச்சாக்ஷி அவனைச் சுட்டது. காந்தாமணி மிகுந்த அனுதாபத்துடன், "நாகராஜா! நடந்தவைகளை யெல்லாம் நாங்கள் மறந்துவிட்டோம். நீயும் மறந்துவிடு. மனிதர் தவறுவது இயல்பு. ஆனால் அறிவாளிகள் தம்மைத்தாமே சீர்திருத்திக்கொள்ளவேண்டும். எதிர்காலத்தில் நீ யோக்கியனாயிருக்கிறாயென்பதைக் கேள்விப்பட ஆசைப்படுகிறேன். சென்றுவா" என்று அவனுக்கு விடைகூறினாள். நாகராஜன் ஒன்றும் பேசவில்லை. கவிழ்ந்த முகத்துடன் அவன் சென்றான். பண்ணையாரிடமிருந்துவாங்கின ஆறாயிரம் ரூபாயை

யும் மதனனுக்கு அனுப்பிவிட்டு, எவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் தலை பிழைத்தது தம்பிரான் புண்ணியமென்று இரவிலேயே நாகராஜன் ஆதித்தனூரிலிருந்து மாயமாக மறைந்துவிட்டான்.

காந்தாமணியும், மதனசுந்தரனும் மாத்திரம் தனித்தார்கள். மதனன், மந்தகாசமான காந்தாவின் முகத்தைத் திரும்பிப்பார்த்தான். "கண்மணி! உனக்கு என்ன கருணை! உன் உயிரை வாங்கவந்தவனிடம் கூட உனக்கு அன்பா?" என்று மதனன் வினவினான். "மதனா! ஆண்பிள்ளைகள் எப்போதுமே முரடர்களாய்த்தானிருக்கிறார்கள். நாகராஜனை நீ கையப்புடைத்து தண்டித்தாகிவிட்டதே? பிறகு அவனுடைய வாழ்க்கையில் மண்ணையடிக்க நீ ஏன் நினைக்கவேண்டும். "இன்னா செய்தாரை பொருத்தல்—அவர் நாண—நன்னயம் செய்து விடல்" என்பதை நீ மறந்து விட்டாயா? அதிருக்கட்டும். காதலா! நீ உன் தந்தையிடம் ஏதாவது பேசினாயா? அல்லது அவர் ஏதாவது கேட்டாரா? என்று காந்தா வினவினாள்.

மதனன்:- காந்தா! நானும் என் தந்தையும் இதுவரை ஒரு வார்த்தை கூடப் பேசிக் கொள்ளவில்லை. நாகராஜனை இவ்வூரிலிருந்து துரத்திய பின்னர் அவரிடம் போக வேண்டுமென்று தீர்மானித்திருந்தேன். இதோ நான் நேரடியாக என் தந்தையைத்தான் காணச்செல்லுகிறேன்.

காந்தா:- என் உயிரே! உனக்குத் திடீர் திடீரென்று கோபம் மூளுவதைக் கவனிக்கையில் எனக்கு அச்சமுண்டாகிறது. நீ எனக்கொரு சத்தியம் செய்து தரவேண்டும்.

மதனன்:- சத்தியமா? உனக்கு என்ன வேண்டும்?

காந்தா:- அன்பே! உன் தந்தையாரிடம் நீ என்ன சொல்லப் போகிறாய்?

மதனன்,- அவர் செய்துவருகிற கல்யாண ஏற்பாட்டை நிறுத்தும்படி கூறுவேன். நீ தான் என்னுடைய வாழ்க்கைத் துணைவியென்பதையும் அவருக்கு அறிவுறுத்துவேன்.



காந்தா:- நாகராஜனை அடித்ததைப்போல நீ உன் தந்தையிடமும் முரட்டுத் தனமாக நடந்து கொள்வதில்லையென்று எனக்குச் சத்தியம் செய்து கொடு. இன்றுள்ள நிலைமையில் நான் உன்னோடு உன் பிதா இருக்குமிடத்திற்கு வரமுடியாது.

மதனன்:- காந்தாமணி! உன் விழைவின்படியே நடந்து கொள்கிறேன். சத்தியமாக நான் இனிமேல் பலாத்காரத்தில் இறங்க மாட்டேன். என் தந்தையாரின் எதிர்ப்பை விட, உன்னுடைய சாந்தம் பயங்கரமாயிருக்கிறதே!

காந்தா:- மதனா! நீ சொன்ன சொல்லை மீறமாட்டாயென்ற நம்பிக்கை எனக்கு உண்டு. பக்குவமாகவும் விதரனத்துடனும் தகப்பனாரிடம் பேசுவாயாக.

மதனன் தன்னருமைக் காந்தாவை வாரியணைத்தான். அவளிடம் விடைபெற்றுக் கொண்டு மடமடவென்று தன் வீட்டிற்கு வந்தான். அவன் கையில் நாகராஜன் வாபீஸ் செய்த ஆறாயிரம் ரூபாய் இருந்தது. சென்னையிலிருந்து மதனனால் வெறுப்புடன் விரட்டப்பட்ட தீக்ஷதர் திரும்பி வந்து பண்ணையார் ஆதிசேஷய்யருடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். தான் சென்னைக்குச் சென்றதையும், மதனசுந்தரன் கடுகடுத்துப் பேசி விரட்டியதையும் தீக்ஷதர், பண்ணையாருக்குச் சொன்னார். அதைக் கேட்ட ஆதிசேஷய்யருக்குத் திகிலுண்டாகி விட்டது. மதனன் ஊருக்கு வந்தது முதல் ஒன்றும் பேசாமலிருப்பது சூழ்ச்சியென்பதை அப்போது தான் பண்ணையார் தெரிந்து கொண்டார். மிகுந்த கவலையுடனும், கோபத்துடனும் பண்ணையார் தீக்ஷதருடன் பேசிக்கொண்டிருக்கையில் மதனன் வந்து சேர்ந்தான். மதனசுந்தரனைக் கண்டதும் அப்பய்யா தீக்ஷதருக்குத் தான் சென்னையில் பட்டபாடு நினைவிற்கு வந்து விட்டது. அவர் மெதுவாக நழுவிவிட முயன்றார். ஆனால் அதற்கு மதனன் இடங்கொடுக்கவில்லை. "தீக்ஷதரே! எங்கே நழுவப்பார்க்கிறீர்?" என்று அவன் அவரை வழிமறித்து அமர்த்தினான். தீக்ஷதரும் பண்ணையாரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு பரக்கப்பரக்க விழித்தார்கள். செல்வி காந்தாவின் சொற்படி மதனன் மிகுந்த சாந்தத்துடன் சம்பாஷணையை ஆரம்பித்தான்.

மதனன்:- அப்பா! எனக்கு நீங்கள் ஏற்பாடு செய்திருக்கும் விவாகம் வேண்டாம். அனாவசியமாகப் பணத்தைச் செலவு செய்யாதேயுங்கள். கிருஷ்ணசாமி அய்யரைக் கூப்பிட்டு உள்ள நிலைமையை உடனே சொல்லுங்கள்' உங்களுடைய இஷ்டப்படி என்னால் கட்டாயமாக விவாகம் செய்து கொள்ள முடியாது.

ஆதிசேஷ:- மதனா! உனக்குப்புத்திசுவாதீனமில்லையா? கிருஷ்ணசாமி அய்யரின் புத்திரி கமலத்திற்கு என்னடா குறை? என்னை நீ அவமானப்படுத்தக்கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறாயா?

மதனன்:- அப்பா! கமலத்தையோ, அவளுடைய குடும்பத்தாரையோ பற்றி நான் ஒரு குறையும் சொல்லவில்லை. கல்யாணமென்பது எனது சொந்தக் காரியம். நானல்லவா எதிர்காலத்தில் என் மனைவியுடன் வாழவேண்டியவன்? இதில் நீங்கள் பிடிவாதம் செய்யக் கூடாதென்று பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன். எனது மனோபாவத்தை தீக்ஷதர் உங்களுக்கு அறிவித்திருப்பாரென்று நம்புகிறேன்.

ஆதிசே:- நீ ஒருவருக்கும் அடங்காத தடிப்பயலாகிவிட்டாய். வயது குட்டிச்சுவர்மாதிரி உனக்கு 22 ஆகிவிட்டது. உனக்காகவும் புத்தியில்லை. மற்றவர்கள் சொல்லுகிற புத்திமதியையும் நீ கேட்கமாட்டேனென்கிறாய். அட! மூடனே! எல்லோரையும்போல நீ மதிப்பாகவும் மரியாதையாகவும் இருக்கக்கூடாதா?

மதனன்:- பிதாவே! நான் பிறர் பார்த்து இகழக்கூடிய எதைத்தான் இயற்றிவிட்டேன்? ஏன் இவ்வளவு கோபத்தோடு பேசுகிறீர்கள்?

ஆதிசே:- மெத்தப்படித்தவனைப்போல விவகாரமா பேசுகிறாய்? உன் வண்டவாளங்களெல்லாம் தெரியுமடா? நீ எவளைத்தான் கட்டிக்கொள்ளப்போகிறாய்? நமது சேரியிலிருக்கும் கருப்பாயியைத்தானே நீ கட்டிக்கொண்டு அழுகிறாய்? ஊரெல்லாம் உன்னைப் பார்த்துச் சிரிக்கிறது. எனக்கு நாக்கைப் பிடுங்கிக்கொண்டு பிராணனை விட்டுவிடலாம்போலிருக்கிறது.



மதனன்:- அப்பா! சற்று நிதானத்துடன் நான் சொல்லுவதைக் கேளுங்கள். நீங்கள் கருப்பாயியென்று குறிக்கும் பெண்மணி நற்குணவதி. கற்பின் கொழுந்து. ஹீனசாதியிற் பிறந்தவளென்று அவளை நீங்கள் ஏன் பழிக்கிறீர்கள்? பிதாவே! நமது வேதங்களில் பிறப்புச் சாதிக்கு ஆதாரமில்லை. நம்முடைய உபநிஷத்துக்களில் தீண்டாமைக்கு ஆதாரம் கிடையாது. மனிதன் தனது யோக்கியதையினாலும், ஒழுக்கத்தினாலுமே உயர்வையடைகிறானென்று நமது புராதன கிரந்தங்கள் தெரிவிக்கின்றன. அப்பா! பிராமணனுக்குப் பிறந்தவனெல்லாம் பிராமணனாயிருக்க வேண்டுமென்பது சித்தாந்தமா? எவர் பிராமணர்? அந்தணர் என்போர் அறவோராயன்றோ இருக்கவேண்டும்? யுதிஷ்டிரனுக்கு, பிருகு மகரிஷி வர்ணாசிரம தர்மத்தை விளக்கிக்கூறியிருக்கிறாரே? அதை நீங்கள் பாரதத்தில் படிக்கவில்லையா? எவன் நல்ல காரியங்களை, ஜனசமூகத்திற்கு நன்மைகளைச் செய்கிறானோ அவன்தான் பிராமணன்! அப்பா! பிராமணன் தகாத காரியங்களைச் செய்தால் அவன் சண்டாளனென்றுதானே நமது வேதங்கள் முறையிடுகின்றன? நீங்கள் நசுக்கி ஒதுக்கிவைத்திருக்கும் ஏழைச் சாதியில் யோக்கியதையும், அறிவுமுள்ளவர்கள் தோன்றினால் அவர்களை உங்களுடன் சேர்த்துக்கொள்ளக்கூடாதா? ஐயோ! பிதாவே! நமக்குக் கடவுள் அறிவைக் கொடுத்திருக்கிறார். இருதயத்தையும் நல்கியிருக்கிறார். அவற்றை நீங்கள் இச்சந்தர்ப்பத்தில் உபயோகிக்கவேண்டும். கீழ்ச்சாதியென்று ஏன் ஜனங்களை வெறுக்கிறீர்கள்? அவர்கள் நமது நாட்டில் நம்முடைய மதத்தில், நமது சகோதரர்களாகப் பிறக்கவில்லையா? இப்பூமண்டலத்திலுள்ள சுகங்களும், உரிமைகளும், மேல்சாதியாருக்குத்தான் சொந்தமா? தீண்டத்தகாதோரும் மனிதர்தானே?

குணத்தினடியாகவும், யோக்கியதையினடியாகவும் ஏற்பட்ட வேதகாலத்து வர்ணங்களைப் பிறப்புச்சாதி என்ற பயங்கரமான பிசாசாக நாம் மாற்றி ஆதரிப்பது முட்டாள்தனமல்லவா? பிதாவே! வித்துவானின் மகன் வித்துவானாயிருக்கவேண்டுமா? கணித சாஸ்திரியின் மகன் கணிதம் வல்லவனாயிருக்கிறானா? சயம்பாகியின் மகன் சமையல்காரனாயிருக்கவேண்டுமென்ற விதி உண்டா? அதைப்போல தாழ்ந்த சாதியில் பிறந்தவர் அந்த

சாதியிலேயேதான் தலைமுறைதலைமுறையாக இருக்கவேண்டுமா? இதை நீங்கள் சிந்தித்துப்பாருங்கள். அப்பா வேதகாலத்து மகரிஷிகளில் சுமார் 12 பேர்கள் பிராமணர்களல்ல. தபசின் மகிமையாலும், யோக்கியதையின் பெருமையாலும் கௌசிகனென்ற க்ஷத்திரியன் பிராமணோத்தமனாகவில்லையா? இழிந்த குலத்தில் பிறந்த வசிஷ்டர் யோக்கியதையால் உயர்நிலை எய்தவில்லையா? சேரியில் உதித்த நந்தனுக்கு முக்கண்ணன் முக்தியளிக்கவில்லையா? ஐயோ! நமது பழைய கிரந்தங்களின் பாடத்தை ஏன் நீங்கள் புறக்கணிக்கிறீர்கள்? சேரிவாசிகள் தகாத உணவுகளைப் புசிக்கிறார்களென்றும், சுகாதாரமின்றி வசிக்கிறார்களென்றும் சொல்லுவீர்கள். வாஸ்தவம். அவர்களுக்குச் சுகாதாரத்தை நாம் கற்றுக் கொடுப்போம். கல்வியை அளிப்போம். அவர்களைச் சீர்திருத்துவோம். பிறகு அம்மக்கள் நம்மைப்போலிருக்கிறார்களா? இல்லையா? என்பதை நீங்கள் கவனியுங்கள். குழந்தையை நான் கிணற்றில் வீசி விட்டு "ஏன் நீ கிணற்றில் விழுந்தாய்" என்று அதட்டினால் அச்சிசு என்ன செய்யும்? அதைப்போல் படிப்பில்லாத ஏழைகளை—ஒன்றுமறியாத சாதுக்களை—அஞ்ஞானமென்ற கிணற்றில் நாம் தள்ளியிருக்கிறோம். இது பாபமல்லவா? கருணைவள்ளலான கடவுள் நம்மைத் தண்டிக்கமாட்டாரா? அப்பா! இதோ பாருங்கள்! நீங்கள் வெறுக்கும் கருப்பாயிக்கு நான் கல்வி போதித்தேன். அவளுக்கு நேர்மையான, பரிசுத்தமான வாழ்க்கையைக் கற்றுக் கொடுத்தேன். அவள் இன்று மாதர் உலகிற்கு ஒரு ஆபரணமாயிருக்கிறாள். இவ்வொரு உதாரணம் போதாதா? கருப்பாயியைப்போல எத்தனை மங்கையர்க்கரசிகள் அவளது சமூகத்திலிருப்பார்கள்?

பிதாவே! இன்னும் கேளுங்கள்! மாடன் என்ற பஞ்சமச் சகோதரனை நாம் ஒதுக்கி, ஆழ்த்திக் கசக்கிப் பிழிகிறோம். அதே மாடன் வேறு மதத்தில் புகுந்து மிஸ்டர் டாம் என்ற பெயருடன் வருகிறான். அவனை நாம் நமது தெருக்களில் வர அனுமதிக்கிறோம். இதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா? ஐயோ! நமது அக்கிரகாரத்தில் கழுதைகள் பவனி போகின்றன. நாய்கள் நாட்டியமாடுகின்றன. பன்றிகள் சஞ்சரிக்கின்றன. என்றாலும் நம்முடன் பிறந்த மனிதர்களான ஏழைகள் வரக்கூடாதென்று தடுக்



கிறீர்களே? இது கொடுமையல்லவா? அப்பா! வேண்டாம்! வேண்டாம்! சாதி ஹிந்துக்களாகிய நாம் இதுவரையிலும் செய்த கொடுமைகள் போதும். இனியேனும் நாம் நல்லவர்களாயிருப்போம். இதற்கதிகம் நான் உங்களுக்கு என்ன சொல்லப்போகிறேன்? எனது அபிப்பிராயம் உங்களுக்குப் பிடிக்கவில்லையாயின், தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள். நீங்கள் பரம சாதுக்களான ஒடுக்கப்பட்டோருக்கு உபகாரம் செய்யாமற்போனாலும் அவர்களுக்குத் துன்பம் செய்யாமலேனுமிருந்தால் போதும்.

மடமடவென்று மதனன் பேசியதைக் கேட்ட ஆதிசேஷய்யருக்கு நல்லறிவு பிறக்கவில்லை. தீக்ஷதர் மூச்சுவிடாமலிருந்தார். பண்ணையாருக்கு ஆத்திரம் தான் பொங்கிற்று.

"மதனா! நீ சென்னைக்குச் சென்று படித்தபடிப்பு இதுதானா? சாதி கிடையாது; வர்ணம் கிடையாது என்று எனக்கு நீ உபதேசமா செய்கிறாய்? உன்னைச் சொல்லக் குற்றமில்லை. உன்னை நான் ஆதியிலிருந்தே கண்டித்து வளர்த்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாதது என்னுடைய பிழை. குலத்தைக்கெடுக்கவாடா நீ பிறந்திருக்கிறாய்? பிராமணன் பஞ்சமப் பெண்ணையாடா கல்யாணம் செய்து கொள்வது? உன்னைப் பார்க்கும் பொழுதே என் வயிறு கபகபவென்று பற்றி எரிகிறது. பிராமண சமூகத்திற்கே உன்னால் மகத்தான மானக்கேடு வந்துவிடும் போலிருக்கிறதே. கடைசியாக உன்னிடம் நான் சொல்லுகிறேன். இதுவரையிலும் நீ செய்த அக்கிரமங்களையெல்லாம் நான் சகித்துக் கொண்டிருந்தேன். இனிமேல் நான் பொறுமையுடனிருக்கமாட்டேன். ஜாக்கிரதை!" என்று ஆதிசேஷய்யர் அதட்டினார்.

மதனன்:—அப்பா! இது தானா உங்களுடைய முடிவான அபிப்பிராயம்? உங்களையோ, நமது சமூகத்தையோ நான் சீரழிக்க வரவில்லை. நமது ஹிந்து மதத்தைப் பீடித்திருக்கும் தீண்டாமை யென்ற பிசாசிற்கு என்னருமைக் கண்மணி கந்தாமணியின் மூலமாகச் சாவுமணியை அடிக்கத்தான் நான் முயலுகிறேன். பிதாவே! என் சொற்படி கேளுங்கள். அதனால் பெருமையே தவிரச் சிறுமை வரவே மாட்டாது. பழையன கழிதலும்

புதியன புகுதலும் இயல்பல்லவா? பிறப்புச் சாதி, தீண்டாமை என்பவைகள் ஒரு காலத்தில் ஜன சமூகத்திற்குகந்தவைகளாயிருந்திருக்கலாம். இன்றைக்குக் காலம் மாறிவிட்டது. விடுதலை முரசின் ஒலி உங்களுடைய செவிட்டுச்செவிகளுக்கு எட்டவில்லையா? அடிமை விலங்குகளை மக்கள் முறித்து எறிவதின் சப்தத்தை நீங்கள் கேட்கவில்லையா? நீங்களல்ல, உங்களைப் போல எத்தனை பேர்கள் எதிர்த்தாலும் இனிமேல் கோடிக்கணக்கானவர்களை அடிமைப்படுத்தி வைத்துக் கொண்டிருக்கமுடியாது. பொறுமையை இழந்த மக்கள் கொடுமைகளுக்கு ஆற்றாது ருஷ்யா என்ற தேசத்தில், மமதை பிடித்தவர்களைக் கொன்றார்களென்று சரித்திரம் கூறுகிறது. அத்தகைய கோரமான பலாத்காரப் புரட்சி நமது பரதகண்டத்தில் நடக்கவேண்டாம். காரியம் மிதமிஞ்சு முன்பு விழித்தெழுங்கள். உங்களுடைய கடமையைச் செய்யுங்கள்.

ஆதிசே:-அதிகப்பிரசங்கம்செய்யாதே. எனக்கு எல்லாம் தெரியும். கருப்பாயி திசைக்கு நீ போனால் நிச்சயமாக ஆபத்து வந்துவிடும். எனக்குக் கோபம்வந்தால் நான் மிகவும் பொல்லாதவனாயிருப்பேன். பஞ்சமப் பெண்ணை கல்யாணம்பண்ணிகொள்வானாம்! அதற்கு நான் சம்மதிக்க வேண்டுமாம்! நமது வீட்டிற்கு சம்மந்தியாக அடியான் கறுப்பனாடா வரவேண்டும்? கருப்பாயி முகத்தில் விழிக்கலாமோடா? அவளைத் தொடலாமா? அட! சண்டாளப்பயலே!

மதனன்:- அப்பா! உங்களிடம் விவகாரம் பேசுவதால் பயனுண்டாகாது. அருஞ்சுணங்கன் வாலைநிமிர்க்க வசமாமோ? உங்களோடு சண்டையிட்டுக்கொள்ளவும் நான் விரும்பவில்லை. எனக்கும் உங்களுக்குமுள்ள அபிப்பிராயபேதம் ஒழியவேமாட்டாது. என்னைப்பற்றிய கவலையை விட்டுவிடுங்கள். என் வழியே நான் போகிறேன். அதில் நீங்கள் குறுக்கிடவேண்டாம்.

ஆதிசே:- என்ன? உன்னிஷ்டப்படி நீ நடந்துகொள்வாய்; நான் பார்த்துக்கொண்டு வாளாவிருக்கவேண்டுமோ? சேரிப்பக்கம் போனால் பார்த்துக்கொள்.



மதனன்:- அப்பா! வேண்டாம். சமரஸப் பான்மையில் நாம் பிரிந்துசெல்லுவோம். தெய்வத்தின் திருவருளிருந்தால் நாம் இருவரும் எதிர்காலத்தில் சமாதானத்துடன் சந்திக்கலாம். ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்? என்னை நீங்கள் என்னசெய்துவிடமுடியும்?

ஆதிசே:- என்னசெய்யமுடியுமா? நீ அந்த வேசையைக் கட்டிக்கொண்டு அழுதால், என்னைப் பார்த்தல்லவா எல்லோரும் சிரிப்பார்கள்? அதற்கு நான் இடம்கொடுப்பேனா?

மதனன்:- என்னசொன்னீர்கள்? யார்வேசை?

ஆதிசே:- என்னடா அதட்டுகிறாய்? சாதிகெட்ட சிறுக்கி கருப்பாயி உனக்கு மருந்துகொடுத்து மண்ணாக்கிவிட்டாளா?

மதனன்:- அவளைத் தூஷிக்காதேயுங்கள்! அவள் உங்களை நேசிக்கிறாள். நீங்கள் அவளுக்குச்செய்த சதியையும், துரோகத்தையும்கூட அவ்வுத்தமி பெருந்தன்மையுடன் மன்னித்துவிட்டாள்.

ஆதிசே:- என்னடா! கீழ்ச்சாதிப் பெண்ணை உத்தமியென்று பகட்டுகிறாய்? அப்படியா? இருக்கட்டும். அவளையும், அவள் குடும்பத்தையும் நான் என்ன செய்கிறேன் பார்? அவள் இருக்கக்கண்டுதானே நீ இப்படி துள்ளுகிறாய்?

இதைக்கேட்டதும் மதனனுக்கு அவனையறியாமலே ஆத்திரம் மூண்டது. அவன் சட்டென்று எழுந்தான். நாகராஜனிடமிருந்துதான் பெற்றுக்கொண்ட ஆறாயிரம் ரூபாயையும் தனது தந்தையின் முன்பு வீசினான். கண்களில் தீப்பொறி பறக்க அவன் பேசலானான்:-

“அப்பா! இப்பணம் எது தெரியுமா? நீங்கள் பெண் கடத்தும் பழியைச் செய்வதற்காக போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் நாகராஜனுக்கு லஞ்சம் கொடுத்தீர்களல்லவா? அந்த ஆறாயிரம் ரூபாயும் இதோ இருக்கிறது! எடுத்துக்கொள்ளுங்கள்! சீ! சீ! என்ன கொடுமை! சாதிச்செருக்கும், கொடுமைக்கும் ஒரு எல்லை வேண்டும். நான் காந்தாமணியை நேசிக்கிறேனென்றால் என்னை அழைத்து நீங்கள் கண்டிக்கலாம்; என்னை அடிக்கலாம். பிரபரா

தியும், ஏழையும், பரம சாதுவுமான காந்தாமணிக்கு நீங்கள் துரோகம்செய்ய முயன்றீர்களல்லவா? சப்இன்ஸ்பெக்டருக்குக் கைலஞ்சம்கொடுத்துக் காந்தாவை நீங்கள் கடத்திக்கொண்டு போகவாசொன்னீர்கள்? பிராமணனே! தெய்வமொன்று இருக்கிறதென்பதை மறந்துவிட்டாயே? அகதிக்கு ஆகாயமே துணையென்பதை நீங்கள் நினைத்தீர்களில்லையே? அப்பா! எவ்வளவு பெரிய பழியை நீங்கள் இயற்றத் துணிந்தீர்கள்? நீங்கள் படித்த சாஸ்திரத்திலும், வேதத்திலும் பெண் கடத்துவதுதான் பிராமண யோக்கியதை என்று எழுதியிருக்கிறதோ? ஐயோ! பெண் கடத்துவதும், அதற்கு உடந்தையாயிருப்பதும் கடுமையாகத் தண்டிக்கத்தக்க குற்றங்களென்பதை மறந்து விட்டீர்களா? ஏழு வருஷம் சிறைவாசம் உங்களுக்கு விதிக்கப்படுமே? பிதாவே! வேண்டாம்! இவ்வளவும் போதும். கொலையும், களவும் வெளிவராமல் போகாது. மகா குரூரனான நாகராஜனை நீங்கள் ஏவினீர்கள். அவன் செல்வி காந்தாவின் கற்பைக் கெடுக்க முனைந்தான். அவளுடைய வீட்டிற்கு இழிந்த நோக்கத்துடன் கொஞ்ச நேரத்திற்கு முன்பு வந்தான். கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்டான். உங்களுடைய சாதிகெட்ட நடத்தையை பகிரங்கப்படுத்தினான். விளக்குமாற்றுப் பூசை வாங்கிக் கொண்டு வீங்கின உடலோடு இவ்வூரை விட்டே சில நிமிஷங்களுக்கு முன்பு தான் ஓடினான். அவனது வேலைக்கு நான் உலை வைத்திருப்பேன். அவனுக்கு லஞ்சம் கொடுத்து ஏழைப் பெண்ணை அதோகதியாக்கத் துணிந்த உங்களையும் நான் சட்டப்படி தண்டனைக்குள்ளாக்க நினைத்தேன். பொறுமையின் இருப்பிடமான காந்தாமணி என்னை அவ்வாறொன்றும் செய்யக்கூடாதென்று மன்றாடினாள். ஒரு சத்தியத்தையும் அவள் என்னிடம் வாங்கிக் கொண்டாள். பிதாவே! இன்றைக்கு நீங்கள் நீதிமன்றத்திற்கு இழுத்துக் கொண்டு போய் தண்டிக்கப்படாமலிருப்பதற்குக் காந்தாமணிதான் காரணம் என்பதை உங்கள் உயிருள்ளவரையிலும் மறவாதேயுங்கள். அவளுக்கு நீங்கள் நன்றி பாராட்ட வேண்டும். ஆனால், உங்களுக்கு அந்நல்லுணர்ச்சி ஏற்படுமென்று எனக்குத் தோன்றவில்லை. பழிகாரரான நீங்கள் உயர்ந்த சாதியா? உங்களது பழியைக்கூட மன்னித்த சிறுமி காந்தா



மணி மேல் சாதியைச் சேர்ந்தவளா? என்பதை யோசித்துப் பாருங்கள்! இதுதானா பிராமணத்துவத்தின் பெருமை? தாழ்ந்த வகுப்பினள் என்று நீங்கள் குறிக்கும் காந்தாவின் பெருமையோடு, உயர்ந்த சாதியார் என்று பகட்டிக் கொள்ளும் உங்களது சிறுமையை ஒப்பிட்டுப் பாருங்கள். அப்போதேனும் உங்களுக்கு உண்மை நன்றாகப் புலனாகும். உங்களது மனச்சாக்ஷியே உங்களைச் சுடவில்லையா? அப்பா! பணம்! உங்களிடம் பணமிருக்கிறதென்ற தெம்புதானே உங்களை இவ்வளவு குரூரமாக நடந்து கொள்ளுமாறு தூண்டிற்று? ஐயோ! மகா பாதகத்தை ஆறாயிரம் ரூபாய் விலை கொடுத்து வாங்கிக் கொண்டீர்களே? இப்பணத்தை ஏழைகளுக்கு உதவியாகக் கொடுத்தால் எவ்வளவு நன்மையாயிருக்கும்?

நீங்கள் நினைத்த காரியங்கள் ஒன்றும் கைகூடவில்லை. எவருக்கும் தெரியாமல் நீங்கள் சூழ்ச்சி செய்தீர்கள். துரியோதனனுக்குச் சகுனி வந்து வாய்த்ததைப்போல உங்களுக்கு மந்திரியாக தீக்ஷதர் வந்திருக்கிறார். இம்மகானுபாவன் உங்களை அநேகமாகச் சிறைச்சாலைவரையிலும் கொண்டு வந்து விட்டார். பிதாவே! இதுவரையிலும் உங்களுக்குக் கிடைத்துள்ள அபஜெயத்திலிருந்து அறிவிருந்தால் நல்ல பாடத்தைக் கற்றுக் கொள்ளுங்கள். அசத்தியம் ஒரு காலத்தும் வெற்றியடைய மாட்டாது. அதர்மம் நிச்சயமாக உங்களையே காட்டிக் கொடுத்துவிடும். உலகத்தோடு ஒத்து ஓடுங்கள். இவ்வளவு தான். இதற்கதிகம் உங்களுடன் பேச எனக்கு விருப்பமில்லை" என்று பேசிவிட்டு மதனன் வீட்டிற்குள் நுழைந்து தனது அறைக்குச் சென்றான். அவனுக்கு களைப்பு அதிகமாயிருந்தது. ஆனால் உறக்கம் வரவில்லை எதிர் காலத்தில் என்ன செய்வதென்று அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

மதனன் சென்றதும் ஆதிசேஷய்யர் தீக்ஷதரின் முகத்தைப் பார்த்தார். தீக்ஷதர் பண்ணையாரின் முகத்தை நோக்கினார். நாகராஜன் அகப்பட்டுக் கொண்டதைக் கேட்டு ஆதிசேஷய்யர் நடுங்கினார். தான் நினைத்ததெல்லாம் மாறிவிட்டதைக் கண்டு சினத்துடன் பற்களை நெரநெரவென்று கடித்துக் கொண்டார்.

"தீக்ஷதரே! நாகராஜன் இவ்வளவு மூடனா? அவன் மகா சாமர்த்திய சாலியென்றல்லவா நான் நினைத்தேன்? மதனன் பொய் சொல்லுவதாயும் தெரியவில்லையே? நாகராஜனுக்கு நான் கொடுத்த ஆறாயிரம் ரூபாயையும் மதனன் கொண்டு வந்துவிட்டானே? சத்திரத்திற்குச் சென்று நாகராஜன் இருக்கிறானென்று பார்ப்போம்" என்றார் ஆதிசேஷய்யர். இருவருமாகச் சத்திரம் போனார்கள். அங்கே சப்இன்ஸ்பெக்டராவது, அவருடைய சாமான்களாவது இல்லை. இஞ்சிதின்ற குரங்கைப்போல அவ்விருவரும் பரபரப்புடன் வெளியில் வந்து மரத்தின் நிழலில் உட்கார்ந்து யோசிக்கலானார்கள்.



## அத்தியாயம் 8.

### நானே பாக்கியசாலி! அதிர்ஷ்டசாலி!

செல்வி காந்தாமணி தனது குடிசைக்குட் சென்று சயனித்துக்கொண்டாள். நெடுநேரம்வரையிலும் அவளுக்கு உறக்கம் வரவில்லை. மதனசந்திரன் தன்னுடைய தந்தையாரிடம் என்னென்ன பேசினானோவென்று நினைந்து வருந்தினாள். தன்னைச் சூழ்ந்திருந்த பேராபத்துக்கள் யாவும் ஒவ்வொன்றாக அகன்றுவிட்டதைக் குறித்து அவள் சந்தோஷப்பட்டாள். "ஐயோ! பாவம்! நாகராஜனை மதனன் மிகவும் கொடுமையாக அடித்துவிட்டான். எந்த மனிதனுக்கும் அவ்வாறு ஆத்திரம் வரத்தானே செய்யும்? மதனா! நீ இவ்வூரிலிருந்தால் என்னையறியாமலே எனக்குத் தன்னம்பிக்கையுண்டாகின்றது. நீ அயலூருக்குச் சென்றுவிட்டால் நான் அனாதையாகிவிடுகிறேன்! ஐயோ! உன் பெற்றோரை நீ பகைத்துக்கொள்ளப்போகிறாயே! எல்லோரும் சகோதரர்கள்தான் என்ற உணர்ச்சி துர் அதிர்ஷ்டவசமாக சாதி ஹிந்துக்களில் பெரும்பான்மையோருக்கு இல்லாமல்போய்விட்டதே! மதனன் எனக்காக மகத்தான தியாகங்களைச் செய்கிறான். அவனைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் மதனனைச் சாதிப் பிரஷ்டம் செய்துவிடுவார்கள். என்னால் அவனுக்கு இவ்வளவு சங்கடங்கள்! இதென்ன சோதனை! தீண்டாமை யொழிப்பிற்காக இன்னும் எத்தனைபேர்கள் எவ்வளவு மகத்தான தியாகங்களைச் செய்ய வேண்டுமோ தெரியவில்லை" என்றெல்லாம் காந்தாமணி எண்ணினாள். மதனன் தன்னெதிரே நின்று ஜெயபேரிகை முழக்குவதைப்போல அவளுக்குத் தோன்றிற்று. காலக்கிரமத்தில் அவள் கண்ணயர்ந்தாள். இனிமையான கனவுகண்டாள். புன்னகை அவளுடைய முகத்தில் தவழ்ந்துகொண்டிருந்தது.

மரத்தினடியில் அமர்ந்து யோசனைசெய்த ஆதிசேஷய்யரையும், அப்பய்யா தீக்ஷதரையும் கவனிப்போம். அவர்கள் மதனன் ஆவேசத்துடன் உச்சரித்த ஒவ்வொரு வார்த்தையையும் நினைவிட்டுப்பார்த்தார்கள். துர்அதிஷ்ர்டவசமாக அவர்களுக்கு உண்மை புலப்படவில்லை. இரவு மணி பதினொன்றுக்கு மேலிருக்

கும். ஆதிசேஷய்யருக்கு நேரம் செல்லச்செல்லக் கோபமும் அதி
கப்பட்டது. சாதிச் செருக்கும், குருட்டுக் கொள்கைகளும் அவ
ரது அறிவை மழுக்கிவிட்டன. "தீக்ஷதரே! என் வயிறு பற்றி
எரிகிறதே? என்னால் இந்த அவமானத்தைச் சகிக்கவேமுடியவில்
லையே! நான் என்ன செய்யப்போகிறேன்" என்று பண்ணையார்
வினவினார்.

தீக்ஷதர்:- பண்ணையார்வாள்! உங்களைவிட எனக்கு வருத்
தம் அதிகமாயிருக்கிறது. இதென்ன காலம்! என்ன கோலம்!
இதுவரையிலும் கேட்டிருக்காத அக்கிரமமாகவல்லவா இருக்
கிறது?

ஆதிசே:- என் குடும்பம் இப்படியா நாசமாய்ப்போகவேண்
டும்? ஐயோ! தலைமுறைதலைமுறையாக, உலகம் உள்ளவரைக்
கும் யாவரும் என் வம்சத்தைப் பழிப்பார்களே! பிராமணன்
பஞ்சமப் பெண்ணைக் கல்யாணம்செய்துகொள்வதா? தீக்ஷதரே!
இதை நான் எப்படிச் சகிப்பேன்? ஆறு குளங்களில் விழுந்து
பிராணனை விட்டுவிடலாமாவென்றுகூட எனக்குத் தோன்றுகி
றது. சின்னச்சாதிப் பயல்களெல்லாம் நாளைக்கு என்னை மதிப்
பானா? அவர்கள் என்னைப் பார்த்து சிரிக்கமாட்டார்களா?

தீக்ஷதர்:- ஆம். இப்பொழுதே கீழ்ச்சாதிப் பயல்கள்
பிராமணர்களை மதிப்பது கிடையாது. ஒரு வார்த்தை
சொன்னால் ஒன்பது வார்த்தைகளை அந்தப்
பயல்கள் பதிலுக்குப்பதில் தீட்டுகிறார்கள். போதாக்குறை
க்கு உங்கள் மகன் கருப்பாயியைக் கட்டிக்கொண்டுவிட்டால்
கேட்கவா வேண்டும்? "அய்யரே! தீண்டாதே! கிட்டாதே! எ
ன்று உருட்டினீர்களே? உங்கள் பண்ணையார் மகன் எங்கள் வம்
சத்தின் மாப்பிள்ளையாகி விட்டாரென்பது தெரியாதோ? உங்கள்
குட்டெல்லாம் வெளிப்பட்டு விட்டது" என்று சண்டாளப் பயல்
கள் நம்மைப் பேசத்தான் செய்வார்கள். அடுத்த நாள் அவர்கள்
நம்முடன் கூட பந்தியில் இலைபோட்டுச்சாப்பிடவும் வருவார்கள்.
நீச சாதிப் பெண் ஊருக்குப் பெரிய மனிதரான பண்ணையருக்கு
மருமகளாகி விட்டால் மதிப்பேது? மரியாதை ஏது? எல்லாம் குட்
டிச்சுவர் தான்! பண்ணையார்வாள்! நான் எத்தனையோ அதிசயங்



களைக் கேட்டிருக்கிறேன் ஆனாலும் இப்படியொரு காரியம் நடந்
ததாக நான் கேட்டதுமில்லை, பார்த்ததுமில்லை. மதனன் இஷ்டப்
படி விட்டுவிட்டால் நான் இந்த ஊரில் நிச்சயமாக இருக்கவே
மாட்டேன். நாளைக்கே நான் அயலூருக்குப் போய்விடுவேன்,

ஆதிசேஷ:- தீக்ஷதரே! வாஸ்தவம். நானும் இவ்வூரிலிருப்
பேனென்று நினைக்கிறீர்கள்? நான் சிறு வயது முதல் இக்கிரா
மத்தில் ஏக சக்கிராதிபத்தியம் செய்து கொண்டுவருகிறேன். என்
னைக் கண்டாலே சின்னச் சாதிப்பயல்கள் பயப்படுவார்கள். இவ்
வளவு மதிப்பையும் இழந்து விட்டு நான் இங்கே இருக்கலாமா?
அடபாவமே! கேவலம் ஒரு சிறுபயலுக்குப்பயந்து நாம்ஊரைவிட்
டே ஓடத்தான் வேண்டுமா? தீக்ஷதர்வாள்! இதற்கு ஒருவழியும்
கிடையாதா? சாதிகெட்ட சிறுக்கியான கருப்பாயியைத் தொலை
க்க வழியே இல்லையா? அவளைக் கொன்றுவிட்டால் கூட ஒருபா
வமும் கிடையாது.

தீக்ஷதர்:- வாஸ்தவம் உங்களுடைய வயிற்றெரிச்சல் உங்க
ளுக்கல்லவா தெரியும்?

ஆதிசேஷ:- தீக்ஷிதரே! நீங்கள் சென்னையில் வைத்து மதன
னிடம் என்ன சொன்னீர்கள்? கருப்பாயியை வைப்பாட்டியாக
வைத்துக் கொள்ளலாமென்று யோசனை கூறினீர்களா?

தீக்ஷதர்:- பண்ணையார்வாள்! நான் அவனிடம் அவ்வாறு
சொன்னதும் போதும்! நான் பட்ட பாடும் போதும்! அடே
அப்பா! "வைப்பாட்டி" என்ற வார்த்தையை நான் உச்சரித்
தேன். குபீரென்று எழுந்து மதனன் என்னை அடிக்கவந்து விட்
டான். இனிமேல் அவனிடம் நாம் பேசிப் பயனே கிடைக்
காது. அவன் தடியனாயிருக்கிறான். இந்த அவமரியாதையிலிருந்து
தப்பித்துக்கொள்ள எனக்குத் தெரிந்த வரையிலும் ஒரேஒரு வழி
தானிருக்கிறது.

ஆதிசேஷ அதென்ன?

தீக்ஷதர்:- அந்தச் சதிகாரி கருப்பாயியை எப்படியாவது
விரட்டிவிட வேண்டும்.

ஆதிசேஷ:- அவளை எப்படி எங்கே விரட்டுவது? அவள்
எங்கே போனாலும் மதனனும் கூடவே செல்லுவான்.

தீக்ஷதர்:- அதுவும் வாஸ்தவம் தான்.

இவ்வாறு இவர்கள் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில்
ரதித்திமிர் தலைக்கேறிய வேறு சிலரும் வந்து சேர்ந்தார்கள்.
மதனன் பஞ்சமப்பெண்ணை கருப்பாயியையே கல்யாணம் செ
ய்து கொள்ள நிச்சயித்து விட்டானென்பதைக் கேட்ட அவர்க
ளுக்கு ஆவேசமுண்டாயிற்று. அக்கூட்டத்தில் பிராமணர்கள்
மட்டுமில்லை. வேறு சாதி ஹிந்துக்களுமிருந்தார்கள். தமது ஹிந்
துமதத்திற்கே மகத்தான கேடுவந்து விட்டதென்று அவர்கள்
ஆத்திரமடைந்தார்கள். ஹிந்து சமயத்தின் தூய்மையை
யும், பெருமையையும் எப்படியாவது காப்பாற்றியே தீர
வேண்டுமென்று அவர்கள் பேசிக்கொண்டார்கள்.
தீண்டத்தகாதாரில் ஒருத்தியைத் தம்மோடொப்ப
சம அந்தஸ்தில் வைக்க இடங்கொடுத்தால் ஹிந்து
சமுதாயமே கெட்டொழிந்துபோய் விடுமென்ற முடிவிற்கு அவர்
கள் வந்தார்கள். மதவெறியும், சாதிச்செருக்கும் தலைக்கேறி
விட்டால் மனிதர் மிருகமாக மாறிவிடுவது இயல்பல்லவா? நீண்ட
நேரம் அவர்கள் தீர்க்காலோசனை—அல்ல, சதியாலோசனை செ
ய்து—பயங்கரமான ஒரு முடிவிற்கு வந்தார்கள். மதனனை சந்
தித்துப் போவதால் தமது காரியம் நிறைவேறுதென்பது அவர்
களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, பிறப்புச் சாதி, தீண்டா
மை என்ற பலிபீடத்தில் பரிசுத்தவதியும், நிரபராதியுமான காந்
தாமணியைப் பலி கொடுப்பதென்று ஆதித்தனூர் சாதி ஹிந்துக்
கள் நிச்சயித்து விட்டார்கள். காந்தாமணியை எவ்வாறு ஒழிப்
பது? மதனனிடமிருந்து அவளைச் சாசுவதமாக எப்படிப்பிரிப்பது?
என்ற கேள்வி பிறந்தது. சாக்காடு ஒன்று தான் அவ்விருவரை
யும் சேரவிடாமல் தடுக்குமென்ற தீர்மானம் அக்கூட்டத்தாரால்
ஏக மனத்துடன் நிறைவேற்றி வைக்கப்பட்டது! நிறைவேற்றிய
தீர்மானத்தை உடனே—அன்றிரவிலேயே—நடை முறைக்குக்
கொண்டு வர சாதி ஹிந்துக்கள் புறப்பட்டார்கள்.

* * *

மதன சுந்தரனுக்கு பயங்கரமான இச்சூழ்ச்சி நடைபெறு
வது தெரியாது. அவன் தன்னுடைய அறையில் நிம்மதியற்ற
மனத்துடன் அங்கும் இங்கும் உலவிக்கொண்டிருந்தான். "காலை



க்குப் பொழுது விடிந்ததும் கிராமத்தார் மிகுந்த பரபரப்பை
அடைவார்கள். என்னை எல்லோரும் இகழ்வார்கள். அதோடு
கூட ஏழைகளான சேரிவாசிகளை அக்கிரகாரத்திலுள்ளவர்கள்
நெருக்குவார்கள். மிகப் பெரிய நெருக்கடி ஏற்படுமென்பது நிச்
சயம். அதை நான் சமாளித்துக்கொள்ள வேண்டும். ஐயோ!
என்றைக்குத் தான் சாதி ஹிந்துக்களுக்குத் தம்முடைய மதத்
தின் உண்மைகள் புலப்படுமோ தெரியவில்லையே? "என்றெல்
லாம் மதனன் நினைத்தான். மன நிம்மதி யற்றோருக்கு உறக்கம்
வருமோ? மதனன் வீட்டிலிருந்து வெளிப்பட்டான். காந்தா
வை அழைத்து எதிர்காலத்தைப் பற்றி அவளுடன் சம்பாஷிக்க
லாமென்று நினைத்தான்! தனது தந்தைக்கும், தனக்கும் நடந்த
சம்பாஷணையின்முடிவை அவளுக்கு அறிவிக்க அவன் அவாவினான்.
அவளை வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டு ஏதேதெல்லாமோ
செய்யவேண்டுமென்று மதனன் ஆகாயக்கோட்டை கட்டினான்.
தீண்டாமையைத் தென்னாட்டிலிருந்து விரட்டி விடவேண்டுமெ
ன்று அவன் தீர்மானித்தான். "காந்தாமணி! உனது உதவியும்
சேர்க்கையும் எனக்கு எவ்வளவு ஊக்கத்தைக் கொடுக்கும்? உன்
னைப் போல எத்தனை உத்தமச் சிறுமிகள் உன்னுடைய இனத்தா
ரிலிருக்கிறார்களோ? அவர்களது மகிமையை வெளிஉலகம் அறிய
முடியாதபடி தீண்டாமைப்பேய் தடுத்துக் கொண்டிருக்கிறதே!"
என்று மதனன் தனக்குள்ளேயே முணுமுணுத்துக்கொண்டான்.
இரவு மணி சுமார் இரண்டிருக்கலாம். ஊரெல்லாம் அடங்கியிரு
ந்தது. ஆகாயத்தில் தோன்றிய வெண்டிங்களை மேகக்கூட்டங்
கள் மறைத்துக் கொண்டிருந்தன. காந்தாமணியின் நினைவாக
வே யிருந்த மதனசுந்தரன் சேரியின் திசையை நோக்கி திரும்பி
னான். வெகு தூரத்திற்கப்பால் சேரிக்கு அருகாமையில் ஏதோ
சிலர் நடமாடுவது மதனனின் கண்களுக்குத் தென்பட்டது.
அதைக் கண்டதும் அவன் திடுக்கிட்டான். பயங்கரமான சந்
தேகம் அவனுக்குண்டாயிற்று. "இதென்ன புதுமை?
இந்த நேரத்தில் சேரிக்குப் பக்கத்தில் எத்தனையோ பேர்களிருக்
கக்காரணம்என்ன? அவர்கள் யாராயிருக்கலாம்? அடியும் உதை
யம் வாங்கிக்கொண்டுசென்ற போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் நாக
ராஜன் தனது பரிவாரங்களுடன் வந்து செல்வி காந்தாமணி

யைத் துன்புறுத்தப்போகிறானோ? ஆம்! அவ்வாறுதானிருக்க வேண்டும்! ஐயோ! காந்தாமணி! பர்ம்புக்குப் பாலைவார்ப்பாரும் உண்டோ! நாகராஜனை நான் விடக்கூடாதென்று சொன்னேனே? நீ கேட்டாயில்லை. அவனுக்கு நீ மன்னிப்பையளித்தாயே? அந்தத் துரோகி உன்னைக் கொல்லவந்துவிட்டானோ? ஒருசமயம் அக்கிரகாரவாசிகளைத் திரட்டிக்கொண்டு என் தந்தையார் சேரிக்குப்போகிறாரா? ஆம்! அவ்வாறிருக்கக்கூடும். “காந்தாமணியை நான் என்னபாடுபடுத்துகிறேன் பார்” என்று என் தந்தை சிறிதுநேரத்திற்கு முன்னால் சொன்னார். அது வெறும் பூச்சாண்டியென்று நான் எண்ணினேன். மதவெறியும், சாதித்திமிரும் மிகுந்தவர்கள் எத்தகைய பழிபாவத்திற்கும் அஞ்சமாட்டார்களென்பது உண்மைபோலும்! உலகத்திற்கொரு பெரியார் என்று வையகத்தாரெல்லோரும் கொண்டாடிக் களிக்கும் மகாத்மனைக்கூட சில மதவெறிகொண்ட சாதி ஹிந்துக்கள் பாம் குண்டுகளை வீசி ஒருசமயத்தில் கொலைசெய்யப்பார்த்தார்களே? அக்கோஷ்டியைச் சேர்ந்தவர்கள், ஏழை குடும்பத்தில்—தாழ்த்தப்பட்ட சமூகத்தில்—பிறந்த என்னருமைக் காந்தாமணியை விடமாட்டார்கள். ஆஹா! சாதிக்கொடுமை இவ்வளவு பிரமாதமாகிவிட்டதா? இதோ நான் போகிறேன். அச்சதிகாரர் யாவரென்று பார்க்கிறேன்.” என்ற தீர்மானத்துடன் நெஞ்சம் பதைபதைக்க, உடல் பதற மதனசுந்தரன் சேரியை நோக்கி விரைந்து நடந்தான்.

அவன் நான்கு அடிகள் எடுத்துவைப்பதற்கு முன்னதாக சேரியின் ஒரு ஓரத்திலிருந்து “நெருப்பு, நெருப்பு” என்ற கூச்சல் கிளம்பிற்று. அடுத்த வினாடியில் ஒரு வீடு தீப்பற்றிக் கொழுந்துவிட்டு எரிவதை மதனன் பார்த்தான். ஒரே ஓட்டமாக ஓடினான். தூரத்திலிருந்து தன் கண்களுக்குத் தென்பட்ட கூட்டத்தார் மூலைக்கொருவராக ஒதுங்குவதை மதனன் கவனித்தான். அவர்களில் தன் தந்தையும், அப்பய்யா தீக்ஷதரும், வேறு தனக்கு அறிமுகமான சிலருமிருப்பதையும் மதனன் குறித்துக்கொண்டான். ஆனால் அவன் அவர்களுடன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. செல்வி காந்தாமணியின் சிறிய குடிசை அனலுக்கு இரையாகிவருவதைக் கண்ட



மதனன் வாயுவேக மனோவேகமாக அக்குடிசையை நோக்கி ஓடினான். மதனன் தீப்பற்றி எரியும் வீட்டை அணுகுவதைக் கண்டதும் பதுங்கியிருந்த ஆதிசேஷய்யர் கூட்டத்தாருக்கு அச்சம் வந்துவிட்டது. மதனனும் தீயில் விழுந்து பிராணனைவிட்டு விடுவானோவென்று அவர்கள் நினைத்தார்கள். எல்லோரும் சேரியை நோக்கி நடந்தார்கள். இதற்கிடையில் சேரிவாசிகளும் எழுந்து, “ஐயோ! நெருப்பு! நெருப்பு! கருப்பாயியும் குப்பியும் வீட்டிற்குள் அகப்பட்டுக் கொண்டு விட்டார்கள்!” என்று அலறினார்கள். ஒரு மனிதனாவது அவர்களை மீட்கத்துணியவில்லை. மதனசுந்தரன் மதயானையைப் போல் ஓடிவந்தான். அவனுடைய முகம் செந்தணலைவிடச் சிவந்திருந்தது. நெருப்பை அவன் தாண்டிக் குதித்துச் சென்று குடிசையின் கதவைப் பார்த்தான். அக்கதவு முன்பக்கம் பூட்டப்பட்டிருந்தது. “சண்டாளர்கள்! கதவைப் பூட்டி வீட்டிற்கு நெருப்பு வைத்திருக்கிறார்கள்! படுகொலை! படுகொலை!” என்று துயரத்துடன் மதனன் கதறினான். தனது முழுபலத்தையும் உபயோகப்படுத்திக் குடிசையின் கதவை அவன் உடைத்து உள்ளே பிரவேசித்தான். அங்கு ஒரே புகை. மூச்சுவிட முடியவில்லை. குப்பி “ஐயோ! ஐயோ!” என்று கதறிக் கொண்டிருந்தாள். அவளை மதனன் கரகரவென்று இழுத்து வெளியே தள்ளினான். “காந்தாமணி! காந்தாமணி! நீ எங்கே இருக்கிறாய்? கண்மணி!” என்று மதனன் உரக்கக் கூவினான். பதிலில்லை! அவனது சித்தம் கலங்கிவிட்டது. அவனுடைய ஆவி துடித்தது. உதிரம் கொதித்தது. ஒவ்வொரு வினாடியிலும் நெருப்பு வீட்டிற்குள் பரவி வந்தது. கடைசியாக ஒரு சுவரின் ஓரத்தில் பைங்கொடியாள் காந்தாமணி விழுந்து கிடப்பதை மதனன் பார்த்தான். அவளை அப்படியே தூக்கிக் கொண்டு வெளியே வந்தான். கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த மரக்கட்டைகளைத் தாண்டித்தாண்டி வரும் வழியில் மதனனுடைய கால்கள் புண்ணாயின. ஆனால், அவ்வேதனையை அவன் பொருட்படுத்தவில்லை. “காந்தா! என்னருமைக் காந்தாமணி! அடி! தேன்மொழிப் பாவாய்! செந்தமிழ்ச் செல்வி! என்னை நீ கண்ணை விழித்துப் பார்க்க மாட்டாயா? என்னோடு ஒரு வார்த்தை பேசமாட்டாயா? அடி! பெண்கள்

நாயகமே! நான்கு மணி நேரத்திற்குமுன்னால் நீ எனக்கு அஹிம்சையைப்பற்றி உபதேசம் செய்தாயே? வீரனுக்கு அணிகலன் கருணையென்று கூறினாயே? இன்பமாகப் பேசினாயே? அத்தகைய நீ இப்போது மௌனம் சாதிக்கலாமா? காந்தா! காந்தா!" என்று கதறிக்கொண்டே மதனன் நிலத்தில் பொத்தென்று சாய்ந்தான். தன் மடிமீது காந்தாமணியைத் தூக்கி வைத்துக்கொண்டான்.

திரளான ஜனங்கள் சற்று அப்பால் சூழ்ந்து நின்றார்கள். மதனனை அணுகவும் அவர்களுக்கு அச்சமாயிருந்தது. மதனனின் கண்களிலிருந்து தாரைதாரையாகக் கண்ணீர் வடிந்தது. காந்தாமணியின் தலையில் ஒரு கட்டை விழுந்து படுகாயப்படுத்தியிருந்தது. அவளுடைய உடலின் பல பாகங்கள் நெருப்பினால் சுடப்பட்டிருந்தன. என்றாலும் அவளது முகத்தில் புன்னகை தோன்றிற்று. சிறிதுநேரம் சென்று அவள் "மதனா! மதனா! நீ எங்கே இருக்கிறாய்? உன்னை நான் கடைசியாக ஒருமுறையேனும் தரிசனம் செய்யவேண்டாமா? என் உயிரே!" என்று முணுமுணுத்தாள். "காந்தாமணி! இதோ நான் இருக்கிறேன். இதோ வந்திருக்கிறேன். கண்ணை விழித்துப்பார்" என்றான் மதனன். சிறுமி காந்தா கண்களை விழித்தாள். மதனனின் முகத்தை நோக்கினாள். உடல் நோவை அவள் மறந்தாள். ஆனந்தம் அவளுக்குப் பொங்கிற்று. "மதனா! ஆம். நீ வருவாயென்பது எனக்குத் தெரியும். என் உயிரே! நான் நினைத்தால் நீ என்முன் தோன்றிவிடுகிறாய்! உன்னுடைய அன்பே அன்பு! மதனா! உனக்கு என்ன கைம்மாறு என்னால் செய்யமுடியும்?" என்று காந்தா தட்டுத்தடுமாறிப் பேசினாள். அவளுடைய நிலைமை கவலைக்கிடமானதாயிருப்பதை மதனன் உணர்ந்தான். அவன் மனம் அப்போது பட்டபாட்டை என்னென்று சொல்லுவது? எட்டி நின்றுகொண்டிருந்த சாதி ஹிந்துக்களை அவன் பார்த்தான். "பாபிகளே! என்ன காரியத்தைச் செய்துவிட்டீர்கள்! உங்கள் நெஞ்சு கல்லா? ஐயோ! மகா புனிதவதியான இவளை இக்கதிக்குள்ளாக்கிவிட்டீர்களே! இதுதானா ஹிந்து தர்மம்? ஒரு உயிரை அநேகமாக வாங்கிவிட்டீர்களே? இதுதானா ஹிந்து மதத்தின் போதனை? கொலைபாதகர்கள்! நெஞ்சிரக்கமற்ற அரக்கர்கள்? உங்களெல்லோரை



யும் கொலைக் குற்றத்திற்காகத் தூக்கிவிடவேண்டும். உங்களுக்கு ஹிருதயம் இல்லையா? இச்சிறுமி என்னதான் செய்தாள்? அவள் என்ன கெடுதலை இயற்றினாள்? அவளது வீட்டைப் பூட்டி நெருப்பு வைத்த சண்டாளர்களே! நீங்கள் மனிதர்கள் தானா? அல்லது மனித உருப்பெற்ற பிசாசுகளா? காந்தாமணி! இக்கொலைபாதகர்களை என்ன செய்யவேண்டும்? இவர்களுக்கு என்ன தண்டனை விதிக்கவேண்டும்? உன் வாயைத்திறந்து ஒரு வார்த்தை சொல்லமாட்டாயா? கண்மணி! ஒரு வார்த்தை! ஒரு வார்த்தை!" என்று கண்ணுங்கண்ணீருமாக மதனன் கதறினான். செல்வி காந்தாமணி மிகுந்த சிரமத்துடன் வலக்கரத்தை உயர்த்தி மதனனின் எழில் மிகு முகத்தைத் தடவினாள். "அன்பே! இதென்ன பேதமை? இவர்களை நீயா தண்டிக்கப் போகிறாய்? வேண்டாம்! ஆத்திரத்தைவிடு. அவசரப்படாதே! என் உயிரே! தாம் செய்வது இன்னதென்று தெரியாமல் இவர்கள் தகாத காரியத்தில் பிரவேசித்து விட்டார்கள். அவர்களா என்னையும் எமது குடிசையையும் நெருப்பிற்கு இரையாக்கினார்கள்? இல்லை! இல்லை! மதனா! அவரது அஞ்ஞானம்! அவர்களுடைய மூட நம்பிக்கை! அவரது மூடக்கொள்கைகள்! என்னை செந்தணலில் தள்ளிவிட்டன. அவ்வளவு தான். சாதி ஹிந்துக்களான இவர்களுடைய அறியாமைக்காக அறிவாளியான நீ இரங்கவேண்டும். மதனா! பல நூற்றாண்டுகளாக அனுஷ்டானத்தில் இருந்துவருகிற கொடிய பழக்கவழக்கங்களை நினைத்த மாத்திரத்தில் -சில நாட்களில்- அகற்றிவிட முடியுமா? முடியாது! அநேகர் பிராணத்தியாகத்தைச் செய்யவேண்டும். ஆனால் மட்டுமே நியாயம் நிலைநிறுத்தப்படும் என் ஆருயிர்க் காதல! இவர்களை மன்னித்துவிடு. முழுமனதுடன் மன்னித்துவிடு! இவர்கள் குற்றவாளிகளல்ல. இவர்கள் நம்பும்மூட்டாள்தனமான கொள்கைகள்தான் இவ்வளவிற்கும் ஜவாப்தாரி. அவற்றையன்றோ அகற்றவேண்டும்? மதனா! நானே பாக்கியசாலி! நானே அதிர்ஷ்டசாலி! எனக்கிணையாக யார் இவ்வுலகிலிருக்கிறார்கள்? என்னைமகா பாக்கியசாலியாக ஆக்கிய மகானுபாவன் நீ தான். தீண்டாமையின் கொடுமையையும், பிறப்புச் சாதியின் குரூரத்தையும் நாட்டி

விருந்து விரட்டுவதற்காக நான் பிராணனைத் தியாகம்செய்கிறேன். இதுஎவ்வளவு மகத்தான பெருமை? இப்பெருமை எல்லோருக்கும்தான்கிடைக்குமா? இச்சிறப்பை நீதான் எனக்கு நல்கினாய். மதனா! ஆனந்தம் பொங்குகிறது. தீண்டாமைக்குச் சாவுமணி அடிக்கப்படுகிறது! அம்மணியின் ஓசை என் செவிகளுக்கு எட்டுகிறது! உனக்கு கேட்கவில்லையா? என் அன்பே! நீ சென்னைக்குப்போகு முன்பு என்னிடம் சொன்னது ஞாபகமிருக்கிறதா? "அடி! காந்தாமணி! நீ தீண்டாமைக்குச் சாவுமணியைஅடித்துவிடு" என்று நீ சொல்லவில்லையா? சத்தியவந்தனான உனது வார்த்தை பொய்க்குமோ? உன்வாக்கு மெய்த்துவிட்டது!" என்று நாக்கு உளற காந்தாமணி பேசினாள். உடனே அவளுடைய கண்கள் மூடிக்கொண்டன. தலை சாய்ந்தது. மதனன் திகிலடைந்தான்.

"காந்தா! காந்தா!" என்று அலறினான். காந்தாவின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. கடைசியாகக் காந்தாமணி கண்களைத் திறந்தாள். "காந்தாமணி! எனக்காக நீ உயிருடனிருக்க வேண்டும். கண்ணே! உன்னைப் பிரிந்து நான் வாழ்வேனா? காந்தா!" என்று மதனன் பரிதாபகரமாகப் பிரலாபித்தான். "என் அன்பே! இதென்ன பிரலாபம்! நான் வந்த காரியம் முடிந்தது. இனி நீ செய்யவேண்டிய காரியங்கள் பலவாயிருக்கின்றன. தீண்டாமைக்கு நான் சாவு மணியை அடித்தேன். மதனா! நீ அதற்கு அந்தியக்கிரியைகளைச் செய்து முடிக்க வேண்டாமா? "தயங்காதே! மயங்காதே!" என்று எனக்கு நீ முன்பு தைரியம் சொன்னாயே? அதேபோல நான் உனக்குத் "தயங்காதே! மயங்காதே!" என்று இன்று கூறுகிறேன். மதனா! நான் சுதந்திர உலகிற்குப் போகிறேன். எல்லா உயிருக்கும் நீ அன்பாயிரு. வெற்றி உனக்கே...." என்று பேசிக்கொண்டிருக்கும் பொழுதே காந்தாமணியின் உடல் பொத்தென்று மதனனின் மார்பில் சாய்ந்து வீழ்ந்தது. "காந்தா! காந்தா!" என்று மதனன் கதறினான். முட்டினான். மோதினான். செல்வி காந்தாமணி பிணமாகிவிட்டாள்! சோகம் முதிர்ந்து மதனன் நகைத்தான். 'ஆம்! காந்தாமணி! உன்னுடைய பிராணத்தியாகம் தீண்டாமை



க்குச் சாவு மணியை அடித்துவிட்டது. பிறப்புச் சாதிக் கொடுமையே! தீண்டாமைப் பிசாசே! இப்பொழுதேனும் உங்களது மனம் குளிர்ந்ததா? போங்கள்! போங்கள்!" என்று சூழ நின்ற சாதி ஹிந்துக்களை நோக்கி மதனன் கூறினான். அவர்களும் ஆச்சரியத்துடன் அப்பாற்பட்டனர். காந்தாமணியின் சமாதியில் ஒரு ஞாபகச் சின்னம் கட்டப்பட்டது. அதில் "காந்தாமணி, அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி" என்று கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்டது.

பண்ணையார் ஆதிசேஷய்யரும் அலர்மேல் மங்கையும், அப்பய்யர் தீக்ஷதரும் தமது பாவங்களைக் களைவதற்காக கங்காயாத்திரை போய்விட்டார்கள். போனவர்கள் திரும்பி வரவேயில்லை! மதனசுந்தரன் தனது சொத்துக்களை யெல்லாம் ஹரிஜன சேவைக்குச் செலவுசெய்தான். தீண்டாமை விலக்கிற்காகத் தனது ஆயுளை அர்ப்பணம்செய்தான். மேல்சாதியார் பலர் அவனைப் பகிஷ்கரித்தனர். என்றாலும் செல்விகாந்தாவின் உயிர்த்தியாகம் வீண்போய்விடவில்லை. அவளுடைய விர்த்தாந்தம் சாதி ஹிந்து வாலிபர்களுடைய உள்ளத்தை உருக்கிற்று. தீண்டாமைப் பிசாசை நாட்டிலிருந்து விரட்டிவிட வேண்டுமென்ற ஆர்வத்தைக் காந்தாவின் மகத்தான தியாகம் வாலிபருக்கு அதிகப்படுத்திற்று. மதனசுந்தரனுடைய தலைமையின் கீழ் அவர்கள் தீண்டாமை விலக்குப் பிரசாரத்தை நடத்தினார்கள். அநேகம் கிராமங்களிலிருந்து தீண்டாமையை அடித்து விரட்டினார்கள். தமது உரிமைகளையாவது சக்தியையாவது அறியாமல் வீழ்ந்து கிடந்த ஒடுக்கப்பட்டோரின் உள்ளத்தில் காந்தாவின் பிராணத்தியாகம் ஒரு எழுச்சியை யுண்டாக்கிற்று. அவர்களுக்குத் தன்னம்பிக்கையை அளித்தது. எனினும் இன்னும் எத்தனை உயிர்களைத் தீண்டாமைப் பேய் பக்ஷிக்குமோ தெரியவில்லை!

(முற்றிற்று)

4170


# வீரகேசரி,
# தினப் பதிப்பு.

—o—

**சிறந்த தமிழ்ப் பத்திரிகை.**

பொதுவாக இலங்கையின் நலத்திற்காக, சிறப்பாக இலங்கைத் தமிழருக்காக, தமிழரால் நடத்தப்படும் தமிழ்த் தினசரி இது ஒன்றே!

**பதினாயிரக்கணக்காக விற்பனையாவது!**

விளம்பரத்திற்கு உகந்தது!
எல்லாத் தந்திச்செய்திகளும் அடங்கியது

## வருஷ சந்தா ரூ. 15.

---

**"வீரகேசரி"**

தபால்பெட்டி, நிர். 160, கொழும்பு.

நீங்கள் இன்னும் 4170

படிக்கவில்லையா?

வீரகேசரி ஆசிரியர்

திரு. H. நெல்லையா B. A. எழுதிய

இனிமையான தமிழ் நாவல்கள்!

1. சந்திரவதனா அல்லது காதலின் வெற்றி

1000 பக்கங்கள்! அழகான படங்கள்!

படிக்கப்படிக்க அலுக்காது.

இரண்டு பாகங்களும் சேர்த்து விலை ரூ. 2-50.

2. பிரதாபன் அல்லது

மகாராஷ்டிரநாட்டு மங்கை

இனிமையான நாவல் விலை ரூ. 1-00.

சந்திரவதனா, பிரதாபன் ஆகிய

இரண்டு நாவல்களும் சேர்த்து விலை ரூ. 3-00.

(தபால் செலவு சதம் 50.)

முன்பணம் அனுப்பினால் மட்டுமே புஸ்தகங்கள் அனுப்பப்படும்.

வி. பி. பி. அனுப்பப்படமாட்டாது.

கிடைக்குமிடம்:—

வீரகேசரி,

தபால் பெட்டி நிர். 160,

கொழும்பு.


வீரகேசரி பிரஸ், கொழும்பு.